

# தமிழரசு

16-12-1990 ரூ.1













தோற்றம் : 17. 9. 1879
மறைவு : 24.12.1973



தோற்றம் : 10.12.1878
மறைவு : 25.12.1972



# மனித நேயம் வளர்ப்போம்

## முதல்வர் கலைஞர்

நமது நாட்டின் தியாக சீலர்களான பெருந் தலைவர்களும், அந்தத் தலைவர்களின் மதிப்புக் குரிய ஆன்றோர்களும், சான்றோர்களும், சமூக நீதியும், சமூகங்களுக்கிடையே ஒற்றுமையும், உடன் பிறந்தோர் என்ற ஒருமித்த உளமார்ந்த உணர்வும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து தொண்டாற்றி வந்துள்ளனர்.

அவர்களின் அரும்பணிக்கு மாறாகவும், அந்தப் பணியையே எதிர்த்து அறைகூவல் விடுவதைப் போலவும், சில ஆண்டுக்காலமாக நாட்டில் நடை பெறும் நிகழ்ச்சிகள் நமது நெஞ்சைக் குலுக்கு வதாக இருக்கின்றன.

மதச்சார்பற்ற நிலையும், மனித நேயப்பண்பாடும் மங்கித் தேய்ந்து, பஞ்சாப், காஷ்மீர், அசாம் என்ற பட்டியல் போதாதென்று, உத்திரப் பிரதேசத்தில் அயோத்தி, அலிகார், கான்பூர் போன்ற இடங் களில் அமளியும் - குஜராத்தில் கலவரங்களும், ஆந்திர மாநிலம் - ஐதராபாத்தில் இரத்தக் களரியும் என்று பட்டியல் நீளும்போது இதயம் பதைக்கிறது.

இமயம் முதல் குமரிவரையில் எல்லா மக்களிடமும் ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்பு வழி, அமைதி வழி, திகழ வேண்டுமென்று விரும்புவோர் விழிகள் எல்லாம் குளமாக ஆகிடத் தக்க வன்முறைக் களமாக இந்த நாடு மாறுவதைத் தடுப்போம் என்று ஒவ்வொருவரும் சூளுரை மேற்கொள்ளவேண்டிய தருணம் இது!

பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை வாள் வீசித் தீர்த்துக் கொள்ள முனைவதும், நினைப்பதும் - இந்த நாட்டுக்குச் செய்யும் தீங்காகும். துரோக மாகும்.

அத்தகைய தீங்குகளுக்கு அணுவளவும் இடம் தரமாட்டோம் என்று பாரதி பிறந்த இந்த நாளில் சபதம் எடுத்துக் கொள்வோம்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்!''

என்று அந்த மகாகவி பாடிய கவிதையை மனத்தில் பதித்து மனித நேயம் வளர்ப்போம்!''

*(11.12.90 அன்று மகாகவி பாரதியார் பிறந்த நாளையொட்டி வெளியிட்ட செய்தி)*

# இந்த இதழில்...


மதுரை-அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்கு ரூ.40 இலட்சம் நிதி —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

நாட்டுப் பற்றும் நன்றிக் கடனும்! —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ... 4

ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை திறப்பு விழா ... 9

அகதிகள் மறுவாழ்வு —மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு ... 11

குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் —மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு — குடிநீர் வழங்குதுறை அமைச்சர் திரு. க. பொன்முடி ... 17

திரைப்பட விருதுகள் வழங்கு விழா ... 24

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன் காக்கும் அரசு —மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் ... 29

தொழில் தொடங்க முனைவோருக்குத் தனிச்சலுகைகள்! —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 41

மலரும் நினைவுகள் (உவமைக் கவிஞர் சுரதா பேட்டி) ... 45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021 • மார்கழித் திங்கள் 1 • மலர்: 21 16-12-1990 இதழ்: 12



## மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனைக்கு

# ரூ 40 இலட்சம் நிதி

## — முதல்வர் கலைஞர் —

"இன்று மதுரை மருத்துவக் கல்லூரி இராஜாஜி மருத்துவமனையில் இதய நோய்ப் பிரிவீல் இதயத் தமனிகள் ஆய்வகத்தையும், சுவாச நோய்ப் பிரிவில் புதிதாக 25 படுக்கை வசதி கொண்ட கட்டடத்தையும் திறந்து வைக்கிற இந்த அரும் பணியில் ஈடுபட்டிருக்கிற நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு இங்கே கூடியிருக்கிறோம்.

"இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று இருப்பதை 20 ஆயிரம் மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று ஆக்கிட வேண்டும் என்று தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்பதையும், விரைவில் அந்தக் குறிக்கோள் எய்தப்படும், என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இருதய சிகிச்சைக்காகத்தான் இன்றைய விழா இங்கே நடைபெறுகிறது. அத்துடன் காசநோய் - அதனை அகற்றுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான ஒரு கட்டடத்தின் திறப்பு விழாவும் இன்றைக்கு நடைபெறுகிறது.

இராஜாஜி மருத்துவமனையிலே இருதய சிகிச்சைக்கான சோதனைகளைச் செய்வதற்காக வாய்க்கப் பட்ட கருவி கோடிக்கணக்கான ரூபாய் பெறக் கூடிய அந்தக் கருவி பெட்டிக்குள்ளேயே பத்திரமாக இருந்து, மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகு தான், அந்தப் பெட்டியே திறக்கப்பட்டு, - ஒரு வேளை பெட்டியிலே என்ன இருக்குமோ என்று பயந்து யாரும் திறக்காமல் இருந்த காரணத்தால், துணிந்து நமது பொன்முடி இராஜாஜி மருத்துவ மனைக்கு வந்து பெட்டியைத் திறக்கச் சொல்லிப் பார்த்தால், அதிலே அந்த உயர்ந்த ரகக் கருவி பதுங்கிக் கொண்டிருக்கிற ரகசியம் குறித்து அந்தக் கருவியை இயக்குவதற்குத் தேவையான கட்டடத்தை அமைக்க வேண்டும் என்று முடிவு எடுத்து பொதுப்பணித்துறையின் மூலமாகத் தம்பி துரைமுருகன் மூலமாக விரைவாக அந்தப் பணி நடைபெற வேண்டும் என்று ஊக்கப்படுத்திய அமைச்சர் பொன். முத்துராமலிங்கத்தினுடைய அந்தத் தூண்டுதலோடு, அந்தப்பணி முடிவுற்றது. இன்றைக்கு இந்த விழா இங்கே இனிது நிறைவேறி இருக்கிறது.

"மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு ஆணை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது என்பதை அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அரசு பொது மருத்துவமனையில் முதலமைச்சர் நிதியிலிருந்து அங்கே இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக ஒரு கோடி ரூபாய் தரப்பட்டது என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்குப்பிறகு சிறுநீரகச் சிகிச்சைக்காக இரண்டு கோடி ரூபாய் பெறப்பட்டு அதற்கான கருவிகள் வாங்கப்படுவதையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

அண்மையில் நடைபெற்ற நரம்பியல் துறை 40-வது ஆண்டு விழாவில் சென்னைப் பொது மருத்துவமனையில் நடைபெற்ற விழாவில் நரம்பியல் நிலையத்துக்கு மேலும் சில வசதிகளைச் செய்ய முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன். வசதி படைத்தவர்கள் பெரிய பெரிய மருத்துவமனை



களில் தங்கி சிகிச்சைகளைச் செய்து கொள்ள முடியும். ஏழைகள் எங்கே போவார்கள்? எனவே தான் அவர்களுக்காக இந்த ஏற்பாடு.

இந்த நிகழ்ச்சியில் பொன். முத்துராமலிங்கம் மூன்று கோரிக்கைகள் வைத்தார். மூன்றில் இரண்டை உடனடியாக நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் கோரிக்கை Mobile Canary Care Unit for Government Rajaji Hospital என்பதாகும். அதற்கு இரண்டு வேன்கள் தேவை என்று சொன்னார். அந்தக் கோரிக்கை ஏற்கப்படுகிறது. விரைவில் அந்த வேன்கள் இந்த மருத்துவமனைக்கு அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்று, அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். அங்கீகாரம் அளிக்கச் செலவு எதுவும் இல்லை. எனவே G.O FOR RECOGNITION OF CARDIOLOGY UNIT IN GOVERNMENT RAJAJI HOSPITAL OF INSTITUTE OF CARDIOLOGY AND PERMISSION TO START D.M. CARDIOLOGY COURSE என்ற அந்தக் கோரிக்கையும் ஏற்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

''கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்'' கேட்டவைகளைக் கொடுத்திருக் கிறேன். எங்களுடைய ஆட்சி கழக ஆட்சி, தேர்தல் நேரத்திலே நாங்கள் சொன்னது-

''சொல்வதைச் செய்வோம்;
செய்வதைச் சொல்வோம்''

என்பதுதான். சில நேரங்களில் சொல்லாததையும் நல்லவைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

அதைப் போல, இங்கே கேட்காத ஒன்றையும் நான் தர இருக்கிறேன் இப்போது. சென்னை மாநகரத்திலே இருக்கிற பொது மருத்துவமனைக்கு ஏழைகள் இலவசமாக இருதய சிகிச்சை பெற ஒரு கோடி ரூபாய்க்குக் கருவிகள் வாங்க முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறேன்.

இங்கே இப்பொழுது தொடங்கி வைக்கப் படுகின்ற இந்தக் கருவி இருதயத்திலே என்ன நோய் என்பதைக் கண்டறிகின்ற கருவியாகும். கண்டறிந்தவுடன் அதற்கு 'பை-பாஸ் சர்ஜரி' போன்ற சிகிச்சைகள் செய்யக் கருவிகள் தேவைப்படும். நான் இங்கே உள்ள மருத்துவ மனை உயர் அதிகாரிகளை அழைத்துக் கேட்டேன். அப்படிப்பட்ட கருவி வாங்க எவ்வளவு தேவைப் படும் என்று கேட்டேன். 40 இலட்ச ரூபாய் தேவைப்படும் என்று சொன்னார்கள்.

முதலமைச்சர் நிதியிலிருந்து 40 இலட்ச ரூபாய் இராஜாஜி மருத்துவமனைக்கு அந்தக் கருவி வாங்குவதற்கு வழங்கப்படும் என்பதை எடுத்துக்கூறி, இந்த இனிய விழாவில் உங்களை யெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ந்து விடை பெறுகிறேன்.

**— மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் 28.11.90-இல் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதிலிருந்து.**





# நாட்டுப் பற்றும் நன்றிக் கடனும்

*மாண்புமிகு கல்வியமைச்சர்*

**பேராசிரியர் க. அன்பழகன்**

நமது தாய்த் திருநாட்டின் உரிமை காக்கப் போரில் உயிர் நீத்த வீரர்கள், விழுப்புண் எய்தி வீடு திரும்பிய வீரர்கள், நீண்டகால சேவையாற்றி வீடு திரும்பிய வீரர்கள், அல்லும் பகலும் அயராது தங்கள் இன்னுயிரையும் பணயம் வைத்துப் பணிபுரியும் படை வீரர்கள் ஆகிய அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து போற்றி, அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நன்றிக் கடன் ஆற்றும் நாளாகக் கொடி நாளினை டிசம்பர் திங்கள் 7-ஆம் நாளன்று ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம்.

**தமிழ்நாடு கொடிநாள் அமைப்புக்குழு நிர்ணயித்திடும் இலக்கிற்கும் மேலாக தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து பெருநிதியை வாரிவழங்கிடும் நற்செயல் நன்றிக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது.**

நமது பரந்த நாட்டின் விரிந்த எல்லைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, இயற்கையின் சீற்றத்தால் மக்கள் அவதியுறும்போது அவர்களின் துயர்துடைக்கும் பணியிலும் நமது முப்படை வீரர்கள் அரும்பணியாற்றி வருவதை மறுக்க இயலாது. நாட்டினுள் கலவரங்கள் ஏற்பட்ட போது அரசுக்கு உதவி, மக்கள் நல்வாழ்வுக்கும் அமைதிக்கும் துணையாகி உள்ளனர்.

இவ்வாறு நாடுகாக்கும் பணியில் ஈடுபட்டு, உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பத்திற்கும், விழுப்புண் பெற்று வீடு திரும்பிய வீரர்களுக்கும், நிகரில்லாச் சேவை செய்து திரும்பிய முன்னாள் படைவீரர்களுக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் நல்வாழ்வினை அளித்திடுவது நமது தலையாய கடமையாகிறது. இக்கொடி நாளில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகை,

**படையினர் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்று வேலூரில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற் படுத்திய மாநிலம் தமிழ்நாடு.**

அவர்கட்குப் பலவகைகளில் உதவி அளித்திடப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு சலுகைகளை இம் மாவீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கி வருகின்றன.

மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கொடி நாள் அமைப்புக் குழு நிர்ணயித்திடும் இலக்கிற்கும் மேலாக, தமிழ்நாடு மக்கள் தொடர்ந்து பெரு நிதியை வாரி வழங்கிடும் நற்செயல், நன்றிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இதனை மத்திய அரசு கண்ணுற்று 1985-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு நன்கொடை பெற்ற மாநிலமாகிய தமிழ் நாட்டிற்கு அகில இந்தியக் கோப்பையை வழங் கினர். 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்கும் இக்கோப்பையைத் தமிழ்நாட்டு மக்கள் தம்வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. இது மட்டுமின்றி, மக்கள் தொகையையும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு, அதற்குரிய பாராட்டுக் கோப்பையையும் தமிழ்நாட்டு மக்கள் தம்வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. இது மட்டுமின்றி, மக்கள் தொகையை யும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு, அதற்குரிய பாராட்டுக் கோப்பையையும் 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. ரூபாய் 102 இலட்சம் அளவு நிதி வழங்கி இப்பெருமையைப் பெற்றது தமிழ்நாடு. 1988-ஆம் ஆண்டிலும் இக்கோப்பை களைத் தமிழகமே தக்க வைத்துக் கொண்டுள்ளது பெருமிதம் அளிக்கிறது.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகத் திரட்டப்படும் இந்நிதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்பட்டு, அவர்தம் மேம்பாடு குறித்த பல்வேறு நலப் பணிகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை இவ்வாறு திரட்டப்படும் நிதியைக் காத்து, அதைச் செலவிடுவதற்குக் கொள்கை வகுத்து, திட்டங்கள் தீட்டி, அவற்றைச் செயல்படுத்தி, முன்னாள் படைவீரர்களும், அவரைச் சார்ந்தோரும் பயனடைய வழிகோலுகிறது.

தமிழகத்தில் முன்னாள் படைவீரர் நலன் பேணுவதற்காக முன்னாள் படைவீரர் நலத்துறை ஒன்று செயல்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மூலமாகச் செயல் படுத்தப்படும் திட்டங்கள் அகில இந்திய அளவில் பாராட்டுப் பெற்றுள்ளன. கொடிநாள் நிதி மற்றும் முன்னாள் படைவீரர் நலநிதி இவைகள் அன்றி, மேதகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒருங்கிணைந்த தொகுப்பு நிதி என்ற நிதியும் அவர் தம் நலனுக்காகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

படையினர் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்று வேலூரில் அமைக்கப்பட்டுள்ளது, இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. 1964-ஆம் ஆண்டிற்கு முன் படைப் பணியிலிருந்து ஓய்வு பெற்று இறந்த படை வீரர்களின் மனைவியருக்கும், அவர்தம் குழந்தை களுக்கும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதாந்திர நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தது தமிழ்நாடு. முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு மட்டுமின்றித் தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்பு உருவாக்க வழி செய்வதற்காகத் ''தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம்'' ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு. சுயதொழில் தொடங்கு வதற்காக வங்கிகளிலிருந்து முன்னாள் படைவீரர் பெறும் கடன்களுக்குரிய வட்டிக்காக மான்யத் தொகை வழங்கும் திட்டத்தினை முதலில் செயல் படுத்தியதும் தமிழ்நாடே. முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலனுக்காகப் பல ஒதுக்கீடுகளை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் நிர்ணயித்திருப்பினும், இவற்றின் பயன்பாட்டினைக் கண்காணிப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழுவினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு.

பெற்ற சுதந்திரத்தினைக் காத்திட்ட முன்னாள் படைவீரர்களை மதித்துச் சிறப்பிக்கும் வகையில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களாலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் களாலும், கொடி நாள் அன்று, முன்னாள் படைவீரர்களைத் தேநீர் விருந்திற்கு அழைத்துப் பாராட்டுவதை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடு. முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் தம் குறைகளை மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில், மாவட்ட ஆட்சியர்கள் நேரில் கேட்டு, அவர்களின் குறைகளை விரைவில் தீர்த்திடும் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளதும் தமிழ்நாடே ஆகும். சிறுநீரக மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கு முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளித்திடும் திட்டத் தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடாகும். இவ்வாறு நலத் திட்டங்கள் பலவற்றை நடை முறையில் செயல்படுத்தியது தமிழ்நாடு என்று பெருமைப்படலாம்.

1989-இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலிலும், பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும், முன்னாள் படைவீரர்கள் சிறப்புக்

காவலர்களாக நன்முறையில் பணியாற்றியுள்ளனர். அவாதம் சேவை அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

ஆதரவற்ற நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவைகள், வேலை ஏதும் செய்ய இயலாத முன்னாள் படைவீரர்கள், கண்பார்வையற்றவர்கள், தொழுநோயால் மற்றும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் இவர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தற்போது 325 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூ.3.77 இலட்சம் அளவு உதவி பெற்று வருகின்றனர்.

சிறுதொழில் செய்து வருமானம் பெற்றுக் குடும்பத்தினைக் காக்கும் முன்னாள் படைவீரர்களுக்கும், விதவைகளுக்கும் தொழில் தொடங்க மானியமாக ரூ.4.03 இலட்சம் உதவி செய்யப்பட்டு, 581 பேர் பயன் பெற்றுள்ளனர்.

முன்னாள் படைவீரர்களைச் சுயவேலை வாய்ப்பிற்குத் தயார்ப்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்குச் சிறுதொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசு வேலை வாய்ப்புத் துறையில் முன்னாள் படைவீரர்களுக்கு என ஒதுக்கீடுகள் இருப்பினும் யாவருக்கும் அரசு வேலை வாய்ப்பு அளிப்பது, நடைமுறையில் சாத்தியமல்ல என்பதைக் கருத்தில் கொண்டு, சுயவேலை வாய்ப்புக்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வங்கி மூலம் கடன் பெறுவோருக்கு வட்டிக்காக மானியத் தொகை வழங்குதல்; தமிழ்நாடு பொருள் முதலீட்டுக் கழகம் மூலமாகச் செயல்படுத்தப்படும் ''செம்பெக்ஸ்'' திட்டத்தின் கீழ் ரூ.12/- இலட்சம் வரை தொழில் தொடங்கக் கடன் உதவி பெற உதவுதல்; கடன்பெற இயலாத முதியோருக்கும், கைம்பெண்களுக்கும் மொத்த மானிய உதவித் தொகை வழங்குதல்; பெட்டிக் கடைகள் அமைத்துக் கொடுத்தல்; தையற் பயிற்சி அளித்து மானிய விலையில் தையல் இயந்திரம் அளித்து அதன் மூலம் வருவாய் ஈட்டிட வழி செய்தல் போன்ற திட்டங்களும் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்பான தொழில்களுக்குக் கடன் உதவி அளித்திடும் புதிய திட்டம் செயற்பாட்டு நிலையில் உள்ளது. இதுவன்றி- கோழி வளர்ப்பு, பால்பண்ணை வைத்தல், சைக்கிள் பழுதுபார்த்தல், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல், வெல்டிங் போன்ற சிறு தொழில்கள் செய்வதற்குப் பயிற்சியும் தொழில் தொடங்க மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.3000/- வரை உதவித் தொகையும் அளிக்கும் திட்டம் வடார்க்காடு-அம்பேத்கர், தருமபுரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் செயல்பட்டு வருவதுடன், நடப்பு நிதியாண்டில் மதுரை மாவட்டத்திற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள் பலவற்றை முதலில் செயல் படுத்திய மாநிலம் என்ற பெருமையைப் பெற்றது தமிழ்நாடு.**

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 305 ஜெய் ஜவான்ஸ் கடைகள் அமைக்கப்பட்டு தகுதியுள்ள விதவைகள்/ஊனமுற்றோர் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் இராணுவத்தினரின் விதவைகள் மனைவி மகளிருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மாவட்டந்தோறும் 30 பேர் பயிலும்படியான தையற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை இப்பயிற்சி நிலையங்கள் மூலமாக 6,206 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். 553 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி பெறுவோருக்கு உதவிப் பணமும், பயிற்சிப் பொருள்களும் வழங்கிய வகையில் ரூ.4.31 இலட்சம் இவ்வாண்டில் செலவிடப்பட்டது. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் துறையில் பயிற்சி அளிப்பதற்காக இரண்டு பயிற்சிப் பள்ளிகள், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவிலில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1,445 பேர் பயிற்சி பெற்றதோடு இப்பொழுது 170 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உதவிப்பணம், எழுது பொருட்கள் வழங்கிய வகையில் ரூ.25,000/- அளவு இவ்வாண்டில் செலவிடப்பட்டது.

கொடி நாள் நிதியிலிருந்து 47 விழுக்காடும், அரசு நிதியில் இருந்து 53 விழுக்காடும் அளித்து, தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கென 12 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காக ரூ.10 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியில் இருந்து பங்களிப்பாகச் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர் நல நிதியின் வருமானத்தைப் பெருக்கவும், அதன் மூலம் அளிக்கப்பட்டு வரும் நல உதவிகள் பெருகிட வழி செய்யவும், ஜவான்ஸ் பவன்கள்-படைவீரர் மாளிகை கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடார்க்காடு-அம்பேத்கர், கோவை, மதுரை மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் ரூ. 73 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தென்னார்க்காடு மாவட்டம் கடலூரிலும், செங்கை-அண்ணா மாவட்டம்-சைதையிலும், பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டம்- சிவகங்கையிலும், முன்னாள் படைவீரர் மையங்கள் இவ்வாண்டு கட்டி முடிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. முன்னாள் படைவீரர்களின் தேவையினைக் கருத்திற்கொண்டு, திருச்சி முன்னாள் படைவீரர் மையத்தில் 6 அறைகள் கட்டப்பட்டன.

மதுரை மாவட்ட மையத்தில் விருந்தினர் அறையும் கட்டப்பட்டுள்ளது. கொடைக்கானலில் முன்னாள் படைவீரர்கள் குறைந்த வாடகையில் தங்கும் பொருட்டு ரூ.5.70 இலட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டி முடிக்கும் நிலையில் உள்ளது. திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ.27 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ரூ.37 இலட்சம் செலவில் படைவீரர் மாளிகை கட்டுமானப் பணி துவங்கப்படஇருக்கிறது. பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் விரைவில் துவங்கப்பட உள்ளதுடன் ஏனைய மாவட்டங்களிலும் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முன்னாள் படைவீரர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்களை வேலையில் அமர்த்திட ஏதுவாகப் பெயர்ப் பட்டியல் தேர்ந்து அனுப்பிட முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் ''சிறப்பு வேலை வாய்ப்புப் பிரிவு'' அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சென்ற ஆண்டில் மட்டும் 892 முன்னாள் படைவீரர்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணிகளில் இடம் பெற்றுள்ளனர். இது வரை 8467 முன்னாள் படைவீரர்கள் இத் துறையின் மூலம் பணியமாத்தப்பட்டுள்ளனர்.

---

**முன்னாள் படைவீரர் நலநிதியின் வருமானத்தைப் பெருக்கவும், அதன்மூலம் அளிக்கப்பட்டு வரும் நல உதவிகள் பெருகிட வழி செய்யவும், படைவீரர் மாளிகைகள் கட்டப்படுகின்றன.**

---

வங்கித் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் வெற்றி வாய்ப்பு பெருகிட முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் திட்டமும் நடத்தப்படுகிறது. சென்ற ஆண்டு 200 முன்னாள் படைவீரர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி உதவித் தொகையாக ரூ.14,077/- வழங்கப் பட்டது. முன்னாள் படைவீரர்களைச் சார்ந்த பெண்டிருக்குத் தோல் ஆடைகள் தைக்கும் பயிற்சியும், தொலைக்காட்சி மற்றும் வானொலி பழுதுபார்க்கும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சுயதொழில் துவங்க முனைவோருக்குத் தொழிற் பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் 26 முன்னாள் படைவீரர்களுக்கு ஆறு வார காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. கம்ப்யூட்டர் பயிற்சி 50 நபர் களுக்கு, சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் அளிக்கப்பட்டு வருகிறது.

ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்குக் கீழ் உள்ள முன்னாள் படைவீரர்களின் குழந்தை களுக்குப் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வருமான வரம்பிற்குள் வரும் முன்னாள் படைவீரர்களுக்கு நல நிதிகளிலிருந்தும், தொகுப்பு நிதிகளிலிருந்தும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. இவ்வாண்டு 1877 முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் ரூ 3.27 இலட்சம் அளவிற்கு உதவி நிதி பெற்றுள்ளனர்.



## அணையா விளக்கு

'பைந்தமிழ்த் தேர்ப் பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை;
குவிக்கும் கவிதைக் குயில்; இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு;
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை யூற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

முன்னாள் படைவீரர்களுக்கும், விதவை யருக்கும் தமது ஒரு மகளின் திருமணச் செலவிற்கு நல நிதியிலிருந்து ரூ.1000/- வழங்கப்படுகிறது. இதன் மூலம் இவ்வாண்டு 964 முன்னாள் படைவீரர் குடும்பத்தார் பயனடைந்துள்ளனர்.

நல நிதியிலிருந்தும், தொகுப்பு நிதியிலிருந்தும் இவ்வாண்டு பல்வேறு உதவித் திட்டங்கட்கும், கட்டுமானப் பணிகளுக்கும் ரூ.86.23 இலட்சம் செலவிடப்பட்டது. இதன் மூலம் 11,011 பேர் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் என்ற நிறுவனம் ரூ.25 இலட்சம் முதலீட்டில் ஏற் படுத்தப்பட்டு, அதன் மூலம் அதிக அளவில் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச்

சார்ந்தோருக்கும் சீருந்துகள் மற்றும் சைக்கிள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் திட்டம், பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை செய்யும் திட்டம், மின்னணு/தொலைத் தொடர்பு நிர்வகிக்கும் திட்டம், ஆகிய திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றது.

சுயதொழில் துவங்க முனைவோருக்கு, இடத்தின் விலையில் 25 விழுக்காடு அல்லது ரூ. 25000/- உதவித்தொகை அளித்தல், இந்திய அமைதிப்படை மற்றும் மெகதூத் சண்டைகளின்போது இறந்த படைவீரர்களின் குடும்பங்களுக்கும், போரில் உயிரிழந்தோரின் விதவைகளுக்கான அனைத்துச் சலுகைகளையும் வழங்குதல்; இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்து ஆதரவற்ற நிலையில் இருக்கும் முன்னாள் படைவீரர்கள் விதவைகளுக்கு ஆயுட்கால உதவிப் பணமாக மாதம் ரூ.150/- வழங்குதல், வட்டி மான்யம் பெறுவதற்கான வரம்புத் தொகை ரூ.50,000/- என்பதை, ரூ. 75,000/- என உயர்த்துதல்; வணிகவியல் துறைகளில் பயிற்சி பெறுவோருக்கு வழங்கும் உதவித் தொகையை ரூ.120/- லிருந்து ரூ.240/- என உயர்த்துதல்; முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்குக் கலைத்தொழில் கல்லூரிகளில் 4 இடங்கள் ஒதுக்கியதுடன், பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டு இருந்த 11 இடங்களை 18 இடங்களாக உயர்த்தி வழங்கல் முதலான புதிய சலுகைகள் இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்ககத்தின் மூலம் வயது வந்தோருக்கு எழுத்தறிவு புகட்டும் பணியில் முன்னாள் படைவீரரும், அவர்களைச் சார்ந்தோருமான 1543 பேர் ஈடுபடுத்தப் பட்டனர். அவர்களது பணி தேசீய அளவில் பாராட்டப்பட்டது.

பொதுமக்கள் வாரி வழங்கும் கொடி நாள் நிதி மூலம் இவ்வாறு நலத் திட்டங்கள் பல செயல்படுத்தப்படுகின்றன. படைவீரர்களின் ஒப்புயர்வற்ற சேவையை நாம் கொடுக்கும் பணத்தால் மட்டுமே ஈடுகட்டிவிட முடியாதென்றாலும், இந்தக் கொடி நாள் மக்கள் நன்றி செலுத்த ஒரு பொன்னான வாய்ப்பு ஆவதை எண்ணி, நம்மால் இயன்றளவு பொருளை வாரி வழங்கி நமது நாட்டுப் பற்றினைப் புலப்படுத்துவதோடு நமது நன்றிக் கடனையும் தவறாது செலுத்திட வேண்டுகிறேன். நன்றி உணர்வில் தமிழகத்தின் வரலாற்றுப் பெருமையை அனைவரும் ஒன்று சேர்ந்து நிலைநாட்டுவோமாக.

*வாழ்க நம் படைவீரர்! வெல்க அவர்தம் வீரம்!*

**(7.12.90 அன்று கொடிநாள் விழாவையொட்டி சென்னை வானொலியில் ஆற்றிய உரை)**

---

# விருதுகள் பெறும் இராணுவ வீரர்களுக்கு தமிழக அரசு வழங்கும் ரொக்கப்பரிசு

'**தீ**ரச்செயல் புரிந்ததற்காக விருதுகள் பெறும் இராணுவ வீரர்களுக்கு, தமிழக அரசு வழங்குகிற ரொக்கப் பரிசை உயர்த்திட உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் செயல், மற்ற மாநிலங்களுக்கு - வழிகாட்டுவதாகும்' என இந்திய இராணுவத் தலைமைத் தளபதி திரு. எஸ்.எப். ரோட்ரிகோஸ் அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கூறியுள்ளார்.

வீரச் செயல்களுக்காக இராணுவத்தில் பணியாற்றுபவர்களுக்கு - பரமவீரசக்ரா, அசோக் சக்ரா, மகாவீர்சக்ரா, கீர்த்திசக்ரா, வீரசக்ரா, சௌரிய சக்ரா, சேனா, நவசேனா, வாயு சேனா போன்ற விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத்தகைய விருதுகள் பெற்றவர்களுக்குத் தமிழ்நாடு அரசு ரொக்கப்பரிசு வழங்கிப் பாராட்டி உற்சாகப்படுத்தி வந்தது. இவ்வாறு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகையைத் தமிழக அரசு இப்பொழுது உயர்த்தியுள்ளது. மேலும் விஜிஸ்ட் சேவா பதக்கம், யுதசேவா பதக்கம் பெற்றோருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசுகளை வழங்குவது என அறிவித்துள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கையைப் பாராட்டி, இராணுவத் தலைமைத் தளபதி திரு. எஸ்.எப். ரோட்ரிகோஸ் அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''தீரச் செயல்களுக்கான விருது பெறுவோருக்கு மாநில அரசு வழங்கும் ரொக்கப் பரிசுக்கான தொகையை உயர்த்த வேண்டும் என்ற எங்களுடைய வேண்டுகோளை ஏற்று உடன்பாடான முடிவினை அறிவித்த உங்களுக்கு நான் நன்றி உடையவனாக இருக்கிறேன்.

''மற்ற விருது பெற்றோருக்கு ரொக்கப் பரிசு வழங்குவது போல, விஜிஸ்ட் சேவா, யுத சேவா பதக்கம் பெற்றோருக்கும் நீங்கள் இப்பொழுது ரொக்கப் பரிசு வழங்குவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

''தங்களுடைய இந்தச் செயல் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. உங்களுடைய இந்த நடவடிக்கை, இராணுவத்தில் அனைத்து மட்டங்களிலும் பணிபுரிகின்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களிடையே தார்மீகமான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் மேலும் ஊக்குவிப்பதாக அமையும்.''





# ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை
## திறப்பு விழா

**த**மிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள 'ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை'யை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னையில், 23.11.90 அன்று திறந்துவைத்தார்.

சென்னையில் - காமராசர் சாலை, சாந்தோமில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியத் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் தலைமை தாங்கினார்.

வாரியத் தலைவர் திரு. பி.சி. சிரியாக் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில்- ஜெய்பிரகாஷ் நாராயண் அவர்களின் நண்பர் திரு. ஷோபாகாந்த் தாஸ், திரு. டி.ஆர்.பாலு எம்.பி., திரு.என். கணபதி எம்.எல்.ஏ., திரு.எஸ்.எஸ்.தென்னரசு எம்.எல்.ஏ., திரு. திரிபாதி இ.ஆ.ப., ஆகியோர் பேசினர். மாசுக்கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. பி.எம். பெல்லியப்பாவும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

'ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகையைத்' திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சென்னை மாநகரத்தில் அமைக்கின்ற பணியை 1970-ஆம் ஆண்டில் தொடங்கியபோது, அதன் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அருமைச் சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் தம் இடைவிடாத முயற்சியின் காரணமாகச் சென்னை மாநகரத்தில் ஆயிரக் கணக்கான குடிசைவாசிகளுக்கு அடுக்கு மாடி வீடுகளைக் கட்டுகின்ற பணியிலே வெற்றி பெற்றார்.

அப்படிக் கட்டப்பட்ட பகுதிகளிலே ஒன்றுதான் கோட்டூர்புரம். அந்த கோட்டூர்புரத்திலே உள்ள புதிய குடிசை மாற்று வாரிய வீடுகளைத் திறந்து வைக்கின்ற பெரும் வைபவத்திற்கு அன்றைய தினம் லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் வரவேண்டும் என்று விரும்பினோம். அவரும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அந்த நிகழ்ச்சிக்கு வந்து சிறப்பித்தார். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற கழக அரசின் - அறிஞர் அண்ணாவின் தாரக மந்திரத்தை நாங்கள் எந்த அளவிற்கு நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த ஜெயப்பிரகாஷ் அவர்கள், பெரிதும் பாராட்டி 'இந்த முயற்சிகள் தமிழகத்திலே தொடரட்டும்' என்று குறிப்பிட்டார்.

**50,000 குடியிருப்புகள்**

குடிசைப் பகுதிகளுக்கு முதன் முதலாக அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித்தந்து, 'குடிசை மேம்பாட்டுத் திட்டம்' வேறு, குடிசைகளை அகற்றி அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டமாக மாடி வீடுகளைக் கட்டித்தருகின்ற திட்டம் வேறு, என்பதை உணர்த்திய பெருமை இந்தியாவிலேயே தமிழ்நாட்டு அரசுக்குத்தான் உண்டு.

'Slum Improvement Scheme - இதுதான் முன்பெல்லாம் இருந்தது. குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவது. குடிசைகள் இருக்கும்; அங்கே பாதைகள் அமைக்கப்படும்; கழிப்பிடங்கள் அமைக்கப்படும்; விளக்கு வசதிகள் செய்து தரப்படும்; சுகாதார நலம் பேணப்படும். இதுதான் 'Slum Improvement Scheme'. குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டம். இது போதாது. இதற்கு மாறாகக் குடிசைகளையே அகற்றிவிட்டு, குடிசைகள் இருந்த இடத்தில்- அதுவும் அந்தக் குடிசைவாசிகள் விரும்புகிற இடத்தில், அவர்களை ஒப்பவைத்து, அவர்களுக்கு வசதியான இடத்தில் குடிசைமாற்று வாரிய வீடுகளை அமைப்பதென்றும், அதற்கொரு குறைந்த வாடகையை நிர்ணயிப்பதென்றும் திட்டமிட்டு, 1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட



★ **ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்திருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!**

அந்த முயற்சியின் காரணமாக ஏறத்தாழ ஐம்பதாயிரம் குடியிருப்புகள் இன்றைக்குக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று ஆண்டுக்காலத்திலே பனிரெண்டாயிரம் குடியிருப்புகளைக் கட்ட வேண்டுமென்று கடந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நான் குறிப்பிட்டு, அதிலே முதற்கட்டமாக இந்த நடப்பாண்டில் மூவாயிரம் வீடுகள் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவைகள் முடிவடையும் தறுவாயிலே இருக்கின்றன.

இடையிலே ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுக் காலம் ஏற்கெனவே கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்து, இடையிலே இருந்த ஆட்சியில் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

மீண்டும் 1989-இல் ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டபிறகு, இந்தப் பழுதடைந்த வீடுகளையெல்லாம் பழுது பார்க்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்து, அதற்காகக் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த வீடுகள் எல்லாம் இன்றைக்குப்பழுது பார்க்கப்பட்டு வருகின்றன.

அப்படிப் பழுது பார்க்கப்பட்டு வருகின்ற வீடுகள் மாத்திரமல்லாமல், புதிதாகக் கட்டப்படுகின்ற வீடுகளையும் குடியிருக்கின்றவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்கின்ற ஒரு திட்டத்தை நாங்கள் பரிசீலித்து அதுபற்றி விளம்பரங்கள் செய்து மக்களுக்கு அறிவித்திருக்கிறோம். ஆங்காங்கு இருக்கின்ற குடிசைவாழ் மக்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாக எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

71-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் வீதம் பத்தாண்டுக்காலம் பணம் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

71-முதல் மார்ச் 75-ஆம் ஆண்டு முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் எழுபத்தி ஐந்து ரூபாய் பத்தாண்டுகளுக்குப் பணம் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

75-முதல் மார்ச் 80 முடிய கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மாதம் நூறு ரூபாய் செலுத்தினால் அப்படி பதினைந்தாண்டுகளுக்குச் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

80-ஆம் ஆண்டு முதல் மார்ச் 90 முடிய கட்டப்பட்ட வீடுகளுக்கு மாதம் நூற்றி இருபத்தைந்து ரூபாய் வீதம் பதினைந்தாண்டுகள் செலுத்தினால் அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றது. ஏப்ரல் 90 முதல் கட்டப்பட்ட அல்லது கட்டப்படுகின்ற வீடுகளுக்கு மாதம் நூற்றி ஐம்பது ரூபாய் வீதம் இருபதாண்டுகளுக்குச் செலுத்தினால், அந்த வீடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது.

நகர்ப்புறத்திலே மாத்திரம் அல்லாமல் கிராமங்களிலே இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவித்து, கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்கள் வீட்டு வசதியைப் பெற வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே இருந்த திட்டத்தின்படி ஆயிரத்து ஐநூறு ரூபாய் அவர்களுக்கு மானியம் வழங்கப்படுமென்று இருந்தது. அதுதவிர அவர்களுக்கு ஏழாயிரம் ரூபாய் கடன் தரப்படும் என்று இருந்தது. அதைத் தவணை முறையிலே செலுத்த வேண்டும் என்று இருந்தது. ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் பணத்தையோ அல்லது தங்களுடைய உழைப்பையோ தரவேண்டும் என்று இருந்தது.

அதை இப்பொழுது கடந்த சில மாதங்களுக்கு முன்பு நாங்கள் தீர சிந்தித்து இவைகளைப் பற்றியெல்லாம் மெத்தவும் அதிகமாகப் பரிசீலித்து, புள்ளி விவரங்களை ஆராய்ந்து, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கலந்து பேசி, கிராமப் புறங்களிலே வீடு கட்டிக் கொள்ள அரசு மானியமாக இனிமேல் ஆயிரத்து ஐநூறு ரூபாய் அல்ல; ஐயாயிரம் ரூபாய் அரசு மானியமாக வழங்குவதென்றும், மூவாயிரத்து ஐநூறு ரூபாய் கடன் தருவது என்றும், அந்த மூவாயிரத்து ஐநூறு ரூபாயை மாதம் முப்பது ரூபாய் வீதம் கட்டினால் போதுமென்றும், அவர்கள் சொந்தப் பணமாக ஒரு ஆயிரத்து ஐநூறு ரூபாய் முதலீடு செய்ய வேண்டும்; அல்லது அதற்கான உழைப்பை வழங்க வேண்டுமென்றும், இப்படிப் பத்தாயிரம் ரூபாயில் கிராமங்களில் வீடுகளைக் கட்டிக் கொள்ள ஒரு திட்டத்தை அரசு அறிவித்து, அந்த முப்பது ரூபாயை மாதா மாதம் வசூலிப்பதற்காக ஏற்கெனவே ஒரு நாள் இரவு திடீரென்று விரட்டப்பட்ட, கிராமங்களிலே உள்ள கிராம அதிகாரிகளையெல்லாம் அந்தப் பணியை ஆற்றுவதற்குப் புதிதாக அவர்களுக்கு வேலையையும் தந்து, வேலை இழந்தவர்களுக்கு வேலை, வீடு இல்லாதவர்களுக்கு வீடு என்கின்ற ஒரு புதிய சிறந்த திட்டத்தைக் கிராமப்புறங்களுக்காக இந்த அரசு அறிவித்திருக்கிறது.

எனவே, இந்த அரசு மேட்டுக்குடி மக்களுக்காக அல்ல; குடிசைவாழ் மக்களுக்காக, கிராமப்புறத்து மக்களுக்காக - சாதாரண, சாமான்ய மக்களுக்காக ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுகின்ற, சிந்திக்கின்ற, செயல்படுகின்ற அரசாக விளங்குகிறதென்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்தக் காரணத்தினாலேதான் ஏழைகளுக்காகவே சிந்தித்த ஏந்தல் ஜெயப்பிரகாஷ் நாராயண் பெயரை இந்த மாளிகைக்கு நாங்கள் வைத்திருக்கின்றோம்".

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.



# அகதிகள் மறுவாழ்வு

**மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**

## திரு. கே.என். நேரு

இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களாக வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலோருக்கு 1948-ஆம் ஆண்டின் இலங்கை குடியுரிமைச் சட்டப்படி வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களில் சிலரின் முன்னோர் 200 ஆண்டு களுக்கு முன்னரே இலங்கை மலைத் தோட்டங்களில் பணியாற்றச் சென்று அங்கேயே நிரந்தரமாகத் தங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி இருந்தும், இலங்கைத் தமிழர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதன் விளைவாக, அவர்கள் இலங்கையில் நாடற்றவர்களாக ஆனார்கள்.

**தாயகம் திரும்பியோர்**

31.10.1964-ஆம் தேதிய நிலவரப் படி இலங்கையில் மொத்தம் 9.75 இலட்சம் நபர்கள் நாடற்றவர்களாக இருந்தார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தங்களின் படி 5.06 இலட்சம் இந்திய வம்சா வளியினரை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1983 வரை 1.16 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 3.34 இலட்சம் நபர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 1.26 இலட்சம் நபர்கள் ஆக மொத்தம் 4.60 இலட்சம் நபர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். இவ்வாறு தாயகம் திரும்பிய வர்களுக்கு, மத்திய அரசு அதன் அமைப்புகள் மூலமாகவும், பெரு மளவில் தமிழக அரசின் மூல மாகவும் மறுவாழ்வளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரை 96,476 தாயகம் திரும்பிய குடும்பங்கள், தொழிற் கடன், தோட்டத் தொழில்களில் வேலை வாய்ப்பு, நிலக்குடியேற்றத் திட்டங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றால் பயன் அடைந்துள்ளனர்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க ஆகஸ்டு 15 விடுதலை நாளன்று முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் அனைவருக்கும் மாநில அரசு ரூ.34.32 இலட்சம் செலவில் துணிமணிகள் வழங்கியுள்ளது.**

**அகதிகள் வருகை**

இலங்கையில் 1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏற்பட்டு வந்த இனக்கலவரங்களினால், இந்திய வம்சாவளியினரைத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் இனக்கலவரங் களினால் பாதிக்கப்பட்ட மக்கள் 24.7.83 முதல் அகதிகளாக இந்தியா வரத்தொடங்கினர். 15.8.89 வரை 1,34,053 நபர்கள் இந்தியா வந்துள்ளனர். அவர்களில் 39,918 ஆதரவற்ற அகதிகள் தமிழ் நாட்டில் முகாம்களில் அனுமதிக்கப்பட்டனர். எஞ்சியவர்கள் வெளியே நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களில் தங்கினர். இலங்கையில் நிலைமை சீரடைந்த போது, 24.12.87 முதல் 31.12.89 முடிய உள்ள காலத்தில், கப்பல் மூலம் 25,585 அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சிய வர்கள் சிலர் முகாம்களை விட்டுத் தன்னிச்சையாக வெளியேறினர். சிலர் அரசு உதவி இல்லாமல் இலங்கைக்கே திரும்பிச் சென்றனர். இன்னும் சிலர் இந்தியாவிலுள்ள நண்பர்கள், உறவினர்கள் இல்லங் களில் தங்கினர்.

**அகதிகள் மீண்டும் வருகை:**

இலங்கையில் மீண்டும் இனக் கலவரம் ஏற்பட்டதால், 25.8.89

முதல் அகதிகள் புதிதாக வரத் துவங்கினர். 30.6.90 முடிய அகதிகளாக வந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 4,575 மட்டுமே இருந்தது. ஆனால் 1.7.90 முதல் அகதிகள் பெருமளவில் வரத் துவங்கினர். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.7.90 அன்று தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், காவல்துறைச் செயலர், மறுவாழ்வு ஆணையர் ஆகியோருடன் ஆய்வு செய்து, மாவட்டங்களிலும் அகதிகளைக் குடியமர்த்த உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து இந்தத் திட்டம் புது உத்வேகம் பெற்றது. 31.10.90 முடிய 1,20,511 நபர்கள் இலங்கை யிலிருந்து அகதிகளாக வந்து சேர்ந்தனர். அவர்களில் 1,16,228 நபர்கள் தமிழ் நாட்டில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அகதி கள் முகாம்களில் தங்க வைக்கப் பட்டனர்.

**இலங்கை அகதிகளுக்கு உதவி**

இலங்கையிலிருந்து கள்ளத் தோணிகள் மூலம் வரும் அகதிகள் பெரும்பாலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத் திலும், சில சமயங்களில் தனுஷ்கோடி யிலும் வந்திறங்கினார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் மற்றும் வேதாரணியத்திற்கும், புதுக் கோட்டை மாவட்டத்திற்கும் சிறு சிறு குழுவினராக வந்து சேருகிறார்கள். இராமேஸ்வரம் வந்து சேரும் அகதி கள் பதிவு செய்யப்படுவதற்காக இராமேஸ்வரத்திலுள்ள வரவேற்பு மையங்களுக்குக் கொண்டு வரப் படுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம் வரும் அகதிகள் பதிவு செய்யப்பட்டு, அம்மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

**இலங்கை அகதிகளைக் கண்ணியத் துடனும் மனிதாபிமானத்துடனும் நடத்திட அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.**

அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தவுடன் அகதிகள் முகாம் களுக்கு அவர்கள் அனுப்பப்படுவதற்கு முன், இராமேஸ்வரத்திலுள்ள வரவேற்பு மையத்தில் அவர்களுக்குச் சிற்றுண்டியும் உணவும் வழங்கப் படுகின்றன. வரவேற்பு மையத்தில் மறுவாழ்வுத்துறை, துறைமுகக் குடி யுரிமைத்துறை, சுங்கம் மற்றும் பொது சுகாதாரத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அகதிகள் கொண்டு வந்த பொருட்களைச் சோதனை செய்கிறார்கள். இது முடிந்தவுடன், துறைமுகப் பதிவு அதிகாரி அகதிகள் வைத்திருக்கும் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதன் மூலமும், நேரடி விசாரணை மூலமும் அகதிகளைச் சோதனை செய்கிறார்கள். இதில் அவர்கள் ஆதரவற்ற அகதிகள்தான் என்று தெரிந்தவுடன், மறுவாழ்வுத் துறை அதிகாரிகளால் அகதிகளாகப் பதிவு செய்யப்படுகிறார்கள்.

அகதிகள் வரவேற்பு மையத்தில் பதிவு செய்யப்பட்ட பிறகு, பல் வேறு முகாம்களுக்கு அனுப்பப்படு கிறார்கள். இவை அனைத்தும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்பார்வையில் நடை பெறுகின்றன.

**இதுவரை 96,476 தாயகம் திரும்பிய குடும்பங்கள் தொழிற் கடன், தோட்டத் தொழில்களில் வேலைவாய்ப்பு, நிலக் குடியேற்றத் திட்டங்கள், கூட்டுறவு நூற்பாலை கள் மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றால் பயன் அடைந்துள்ளனர்.**

**அகதிகளைத் தங்க வைக்கத் தகுந்த இடமின்மையைச் சமாளித்தல்**

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு ஆகிய இரண்டு நிரந்தர முகாம்களைத் தவிர, கூடுதலாக 336 அகதிகள் முகாம்கள் அகதிகளைத் தங்க வைக்கும் பொருட்டு அமைக்கப் பட்டன. மதுரை மாவட்டத்தில் விளாங்குடி என்ற இடத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து வாங்கப்பட்ட 792 வீடுகள் பழுது பார்க்கப்பட்டு, அவற்றில் அகதிகள் தங்க வைக்கப்பட்டனர். ஆவடி யிலுள்ள இராணுவத் தளவாடக் கிடங்கிலிருந்து 530 இராணுவக் கூடார சாதனங்கள் பெறப்பட்டு, மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்ற இடத்திலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப் பூண்டி மற்றும் புழல் ஆகிய இடங் களிலும் தற்காலிகத் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு, அங்கு அகதிகள் தங்க வைக்கப்பட்டனர்.

அகதிகளைத் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்காகப் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள பொதுக் கட்டடங்கள், புயல் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் சேவை நிறு வனங்களைச் சேர்ந்த கட்டடங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அகதி முகாம்கள் அமைப்பதற்குத் தகுந்த தனியார் கட்டடங்களும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அகதிகள் வருகை இடைவிடாமல் தொடர்ந்து இருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 குடிசைகள் வீதம் மொத்தம் 20,000 தற்காலிகக் குடிசைகள் அமைக்க அரசு உத்திர விட்டுள்ளது. அவசியம் ஏற்படும் போது குடிசையைக் கட்டும் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 500 குடிசைகள் அமைக்கத்

தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறுகியகால முன்னறிவிப்பிலும் சில நேரங்களில் முன்னறிவிப்பே இல்லாத நேரத்திலும் அகதிகளை வரவேற்று, அவர்களைப் பல்வேறு முகாம்களில் தங்க வைப்பதில் சிறப்பான பணியாற்றினர். இது மிக மிக பாராட்டத்தக்கது.

**தேவையான உதவிகள்**

அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டவுடன் அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு மாதாந்திர ரொக்கப் பணம் வழங்கப்படுகிறது:

1. ஒரு நபர் குடும்பம் ரூ.150/-
2. இருவர் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தோர்) ரூ.270/-
3. மூவர் அடங்கிய குடும்பம்(இரண்டு வயதுவந்தோர் மற்றும் ஒரு குழந்தை) ரூ.345/-
4. நான்கு நபர்கள் அடங்கிய குடும்பம் (இரு வயது வந்தவர் மற்றும் இரண்டு குழந்தைகள்) ரூ.382.50
5. ஐந்து நபர்கள் அடங்கிய குடும்பம் (மூன்று வயது வந்தோர் மற்றும் இரண்டு குழந்தைகள்) ரூ.502.50

முகாம்களில் அனுமதிக்கப்பட்டதும், அவர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கிக் கொள்ளக் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. மலிவு விலையில் அரிசி கிலோ 57 பைசா வீதம் நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு 400 கிராம் அளவிலும், சிறுவர்களுக்கு 200 கிராம் அளவிலும் வழங்கப்படுகின்றன. இதர அத்தியாவசியப் பொருட்களான சர்க்கரை, மண்ணெண்ணை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இரண்டு ஜோடி உடைகளும், சமையல் செய்வதற்குத் தேவையான பாத்திரங்களும் மற்றும் பாய், படுக்கை விரிப்புகள் முதலியவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

எல்லா முகாம்களிலும் குடிநீர், மின்சாரம், மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் முடிந்தவரை செய்துதரப்பட்டுள்ளன. அவர்களுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

**கல்வி வசதி**

அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் தமிழக அரசு மிகுந்த பெருந்தன்மையுடன் செயல்படுகிறது. அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் இயன்ற அளவு அனைத்து உதவிகளையும் செய்வதில் மாண்புமிகு கல்வி அமைச்சர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அகதிகள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டவுடன் பள்ளி செல்லக்கூடிய சிறுவர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்கள் அருகாமையில் உள்ள பள்ளிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அகதிச் சிறுவர்களை இலங்கை அரசின் பள்ளி மாற்றச் சான்றிதழ்கள் இல்லாமலேயே பள்ளிகளில் அனுமதிக்கவும் அரசு உத்திரவிட்டுள்ளது. சுமார் 19,000 இலங்கை அகதிக் குழந்தைகள் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்குத் தமிழ்நாட்டில் தொழில் கல்லூரிகளில் கீழ்க்கண்டவாறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:



## அகதிகளுக்குக் கல்வி வசதி அளிப்பதில் தமிழக அரசு மிகுந்த பெருந்தன்மையுடன் செயல்படுகிறது.

| | |
|---|---|
| மருத்துவம் (எம்.பி.பி.எஸ்.) | 20 இடங்கள் |
| பொறியியல் | 40 இடங்கள் |
| பாலிடெக்னிக் | 40 இடங்கள் |
| பி.எஸ்சி (விவசாயம்) | 10 இடங்கள் |

அகதிச் சிறுவர்களைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கல்லூரிகள் இடங்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. அகதிகளின் சிறு குழந்தைகளைப் பால்வாடிகளில் சேர்ப்பதற்கும் குழந்தைக் காப்பகங்களில் சேர்த்து அவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### இந்தியப் பணமாக மாற்றிக்கொள்ள வசதி

இலங்கை அகதிகள் கொண்டு வரும் இலங்கை நாட்டுப் பணத்தை இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் பாங்க் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பணமாக மாற்றித் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட இலங்கை அகதிகள் தங்கள் இலங்கைப் பணத்தை இந்தியப் பணமாக மாற்றிக்கொள்ள வசதியாக இந்திய ரிசர்வ் வங்கி ஒவ்வொரு மாவட்டத் தலைமை இடத்திலும் உள்ள ஒரு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைக்கும் அனுமதி அளித்துள்ளது. இலங்கை அகதிகள் தங்களிடமுள்ள இலங்கை நாட்டுப் பணத்தை ஒவ்வொரு வயது வந்த நபருக்கும் ரூ.2,000/- அளவு வீதம் இந்தியப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டினால் அகதிகள் இடைத்தரகர்களிடம் சிக்கி குறைந்த அளவு மாற்றல் பணம் பெறுவது தடுக்கப்படுகிறது.

### நகைக் கடன்

தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் பயனடையும் வகையில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி நகைக்கடன் வழங்கும் திட்டத்தினைத் துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தங்கள் நகைகளைத் தற்காலிகமாக அடகு வைத்துக் கடன்பெற விரும்பும் அகதிகள் மண்டபம் முகாம், இராமேஸ்வரம், விளாங்குடி மற்றும் கொட்டப்பட்டு முகாம்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக வங்கிக் கிளைகளை அணுகலாம். இவ்வங்கியின் பணியாளர்கள் மற்ற முகாம்களிலும் செயலாற்றுவர். இத்திட்டத்தின் மூலம் பல்வேறு முகாம்களில் இது வரை 151 அகதிகள் ரூ.92,500/- வரை நகைக் கடன் பெற்றுள்ளனர்.

### பிரிந்த குடும்பத்தினர் ஒன்று சேர்க்கப்பட்டனர்.

இலங்கை அகதிகளின் திடீர் வருகை காரணமாக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறு வேறு முகாம்களுக்கு அனுப்பப்படும் நிலையும், யார் யார் எந்தெந்த முகாம்களில் உள்ளனர் என்பதைக் குடும்பத்தினர் அறியாத நிலையும் ஏற்பட்டன. இவ்வாறு பிரிந்த குடும்பங்களை ஒருங்கிணைக்க அரசு மனிதாபிமான முறையில் பெரும் முயற்சியுடன் ஏற்பாடு செய்துள்ளது. இப்பணியில் சேவை நிறுவனங்கள், மாநில காவல் துறையைச் சார்ந்த 'க்யு' பிராஞ்ச் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த கடினமான முயற்சியில், இதுவரை 314 குடும்பங்கள் பிரிந்த தங்கள் உறவினருடன் ஒன்று சேர்க்கப்பட்டனர்

### சேவை நிறுவனங்களுக்கு நிதிஉதவி

மாண்புமிகு முதலமைச்சரின் கருத்திற்கிணங்க, அகதிகளின் நிவாரணப் பணிகளில் மாநில அரசின் முயற்சிகளோடு, சேவை நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இச்சேவை நிறுவனங்களின் பணிகள் தமிழ்நாடு சமூகநல வாரியத்தினால் மேற்பார்வையிடப்படுகின்றன. மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பயிற்சி வசதிகளையும், பொழுதுபோக்கு வசதிகளையும் சேவை நிறுவனங்கள் மூலம் அளிக்க அரசு தமிழ்நாடு சமூக நல வாரியத்திற்கு இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.5.50 இலட்சத்தை அளித்துள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் விடுப்புக் காலப் பயிற்சிக் கூடம் (CTVT) என்ற கல்வி நிறுவனம் மண்டபத்தில் தையல் மற்றும் எம்பிராய்டரி, தச்சுவேலை, எலெக்ரிகல் மோட்டார் ரீவைண்டிங், சைக்கிள் பழுது பார்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல், ஆகிய பயிற்சிகளையும், செங்கல்பட்டு முகாமில் தச்சு வேலை, வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுதுபார்த்தல் ஆகிய பயிற்சிகளையும் துவக்கி உள்ளன.

கொட்டப்பட்டு முகாமிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள புத்தூர் நற்செய்தி பயிற்சி நிறுவனம் தையல் வேலை, இரு சக்கர ஊர்தி பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளையும், சென்னையில் தங்கியுள்ள அகதிகள் பயன்பெறும் வகையில் CTVT நிறுவனம் கிண்டியில் உள்ள அதன் தொழில் நுட்ப மையம் வாயிலாக தையல் வேலை, இரு சக்கர ஊர்தி பழுது பார்த்தல், வீடுகளுக்கு மின்சார வொயரிங் செய்தல், மோட்டார் ரீவைண்டிங், வாகனங்கள் பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளையும் அளிக்கின்றன. மேலும் பால்வாடிகள், நியாய விலைக் கடைகள் துவங்கவும், பல்வேறு முகாம்களில் அகதிகளுக்குப் பொழுதுபோக்கு வசதிகள் அளிக்கவும் திட்டமிட்டுள்ளன.

சென்னையில் உள்ள பஞ்சாபிக் கழகம் முகாம்களில் இல்லாமல் வெளியே தங்கியுள்ள அகதிகள் மற்றும் தாயகம் திரும்பிய அகதிப் பெண்களுக்கு எலெக்ட்ரானிக் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல், புத்தகங்களைப் பைண்டிங் செய்தல், அச்சுக் கோர்த்தல் மற்றும் நகல் சரி பார்த்தல், தையல் கலை - 2 பிரிவுகள், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பணியில் பயிற்சி அளித்தல், புகைப்படக்கலை ஆகிய பயிற்சிகளையும் அளிக்க முன்வந்துள்ளது.

இலங்கைத் தமிழர் நிவாரண நிதியிலிருந்து ரூ.19,200/- மேற்

கண்ட பயிற்சி பெறும் பெண்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்காக அரசு அனுமதி அளித்துள்ளது.

டிவோஷன் ஆர்டினரி பள்ளி, மகளிர் வளர்ச்சி நிறுவனம், ஸ்த்ரீ சேவா மந்திர் ஆகிய நிறுவனங்கள் ரொட்டி தயாரித்தல், செவிலியர் உதவி, கைத்தறி நெசவு, தையல் கலை மற்றும், அச்சக வேலை ஆகிய தொழில்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய பெண்களுக்குப் பயிற்சி அளிக்க முன்வந்துள்ளன.

கிறிஸ்தவ இளைஞர் மன்றம் பல்வேறு அகதி முகாம்களில் வாசக சாலை மற்றும் உள் விளையாட்டு அரங்கம், குழந்தைக் காப்பகங்கள், தையல் கலைப் பயிற்சி வகுப்புகள் மற்றும் கல்வி போதனை வகுப்புகள் ஆகியவற்றை அமைத்துள்ளன. பிரதி மாதமும் தமிழ்த் திரைப் படங்களை வெளியிடுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடத்துகின்றது.

சிவகங்கை பல்முனைத்திட்ட சமூக நல சங்கம் என்ற அமைப்பு மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்காக, நியாயவிலைக் கடை நடத்துதல், தையல் கலை மற்றும் எம்பிராய்டரி ஆகிய பயிற்சி வகுப்புகள், தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள், இருசக்கர ஊர்திகள் பழுது பார்க்கும் பயிற்சி, வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்த்தல் ஆகிய பயிற்சிகளை அளிக்கிறது.

தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் ஒருங்கிணைப்புக் குழு மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாம்கள், இராமேஸ்வரம் துறை முகம் ஆகிய இடங்களில் இலங்கை அகதிகளுக்காக மருத்துவ சிகிச்சை வசதியை அளிக்கும் பணியைத் துவக்கியுள்ளது.

திருச்சி மாவட்டத்திலுள்ள காஜாமலை மாதர் சங்கம் கொட்டப்பட்டு முகாமில் அகதிப் பெண்களுக்காக தையல் கலை வகுப்புகள் துவக்கியுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டுக் கிளை, அகதிகளுக்காக பெருமளவு துணிமணிகள், படுக்கை விரிப்புகள், பால்பவுடர் மற்றும் பிஸ்கட்டுகள் ஆகியவைகளை வழங்கியது.

மேலும் இச்சங்கம் மண்டபம் முகாமிலுள்ள அகதிகளின் உபயோகத்திற்காக ஒரு ஆம்புலன்ஸ் வண்டியைத் தற்காலிகமாக வழங்கியுள்ளது. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளைத் தலைவர் திருமதி சரோஜினி வரதப்பன் சங்கத்தில் உள்ள அனைத்து இருப்பையும் தாராளமாக இவ்வியக்கத்திற்கு அளிக்க முன்வந்துள்ளார். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அந்தந்த மாவட்டங்களில் செயல்பட்டுவரும் ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்கள், ஜேசீஸ், வட்ட மேஜைக் குழுவினர், வணிகர் சங்கங்கள் மற்றும் பல்வேறு சேவை நிறுவனங்கள் ஆகியவற்றை அணுகி, இலவச துணிமணிகள், சமையல் பாத்திரங்கள், வாளிகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், பால், பால்பவுடர், படுக்கை விரிப்புகள், உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலியவற்றை இலவசமாகப் பெற்றுத் தந்துள்ளனர்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி இலங்கை அகதிக் குழந்தைகளின் மேற்படிப்பிற்காக உதவிப்பணம் வழங்கும் பொருட்டு ஒரு நிதி துவக்கியுள்ளது.

சென்னையிலுள்ள விளையாட்டுத் துறை இயக்குநர் மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாமிலுள்ள அகதிகளுக்காக கைப்பந்து, வலை மற்றும் கால்பந்துகள் ஆகிய விளையாட்டுச் சாதனங்களை வழங்கியுள்ளார்.

## ஈழம் ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்

இக்கழகம் செங்கை அண்ணா, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், கோவை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 59 முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்காக துணை நிவாரண உதவிகள் வழங்குகிறது. இக்கழகம் 18 முகாம்களில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தந்துள்ளது. 16 முகாம்களில் சுகாதாரப் பணி, சிகிச்சை, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தை ஈன்றெடுத்த பெண்களுக்கு சத்துணவு அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. மேலும் மண்டபம், கொட்டப்பட்டு முகாம்களில் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிறது; 5 முகாம்களில் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. இக்கழகம் 56 முகாம்களில் தினசரி நாளிதழ்களையும் சஞ்சிகைகளையும் இலவசமாக வழங்குகிறது. இக்கழகம் 32 அகதி மாணவர்களுக்கு மாதாந்திர உபகாரச் சம்பளம் வழங்குகிறது. 18 முகாம்களில் 127 அகதி மாணவர்களுக்காகக்கல்விக் கட்டணம் மற்று நிதி உதவிகளையும் செய்து வருகிறது. மண்டபம் முகாமில் வாசக சாலை மற்றும் விளையாட்டுச் சங்கம் அமைப்பதற்காக, அரசு இச்சங்கத்திற்கு இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 அளித்துள்ளது.

## துறையின் பல்வேறு பிரிவுகளைக் கணிப்பொறி மயமாக்குதல்

எழிலகம் வளாகத்தில் அமைந்துள்ள கணிப்பொறிகள் உதவியுடனும், மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய தகவல் மையங்களின் உதவியுடனும் இத்துறையின் பணிகளைக் கணிப்பொறி மயமாக்குவது துவக்கப்பட்டுள்ளது. இதுவரையில் அரசின் பல்வேறு துறைகளுக்கு அகதிகள் வருகை குறித்து தினசரி அறிக்கைகள், மற்றும் முகாம்கள் வாரியான இருவார அறிக்கை ஆகியவை கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. விரைவில்அகதிகள்குடும்பவாரியான விவரங்கள் மற்றும் முகாம் கையேடு கணிப்பொறி மூலம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் அகதிக் குடும்பங்களில் பிரிந்த நபர்களைக் கண்டுபிடித்து ஒருங்கிணைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க ஆகஸ்டு 15 விடுதலை நாளன்று முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் அனைவருக்கும் மாநில அரசு ரூ.34.32 இலட்சம் செலவில் துணிமணிகள் வழங்கியுள்ளது.

இலங்கை அகதிகளைக் கண்ணியத்துடனும் மனிதாபிமானத்துடனும் நடத்திட அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. இலங்கை இனக்கலவரம் தீர்ந்து நிலைமை சீரானவுடன் இவர்கள் அனைவரும் திரும்பச் செல்வர் என எதிர் பார்க்கப்படுகிறது.



# தமிழகத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

டாக்டர். எஸ். இராம ராகவன்,
ஆரம்பச் சுகாதார நிலையங்களின் இயக்குநர்

'கி.பி 2000-க்குள் எல்லோருக்கும் நல்வாழ்வு' என்ற இலக்கினை அடைந்திட, 1057 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்திட வேண்டும் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. கிராமப்புற மக்கட் தொகைப்பெருக்கத்தில் குறைவு ஏற்பட்ட தன் காரணமாக மேற்கண்ட குறியீடு 950 ஆகக் குறைக்கப்பட்டது. 31.3.90-இல் உள்ளபடி இம்மாநிலத்தில் 1386 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாரம்பச் சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு, நல மேம்பாடு, மற்றும் நோய்ச்சிகிச்சை போன்ற வசதிகளை அளித்து வருகின்றன.

### சமுதாய நல நிலையங்கள்

மொத்தம் உள்ள 1386 ஆரம்பச் சுகாதார நிலையங்களில், 72 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாக அல்லது சமுதாய நல நிலையங்களாகச் செயல் பட்டு வருகின்றன. இவற்றில் ஏற்கெனவே உள்ள 6 படுக்கை வசதிகளுடன், மேலும் 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு அமைக்கப்படும். கூடுதல் உபகரணங் களுடன் ஊடுகதிர்ப் பிரிவும் அமைக்கப் படும். நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கொண்ட தொகுதிக்கு ஒரு சிறப்புச் சிகிச்சை மையம் என்ற அளவில், இவை செயல்படும். விரைவில் இந்த மேம் படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங் களில் சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனை, ஆய்வக வசதி, இரத்த சேமிப்பு வங்கி வசதிகள் ஏற்படுத்தப் படும். 30 சமுதாயநல நிலையங்களில் ஒரு உதவி சர்ஜன் பதவி சிவில் சர்ஜன் பதவியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

### சிறு சுகாதார நிலையங்கள்

இதுவரையில் 209 சிறு சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்குக் கூட்டுறவு அடிப்படையில் தொண்டு நிறுவனங்களின் பொறுப்பில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை அளித்து வந்தன. தற்போது இச்சிறு சுகாதார நிலையங்கள் இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, சென்னை-600 006 அவர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப் பட்டுள்ளன.

### மருத்துவ நல நிலையங்கள்

சென்னை மாநகர அபிவிருத்தித் திட்டப் பிரிவு 2-இன் கீழ் சென்னை யிலும், சுற்றுப்புறப்பகுதிகளிலும் ஏழை களுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு 22 மருத்துவ நல நிலையங்கள் செயல் பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 1386 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 562 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்கள் உள்ளன. மற்றும் 293 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி யாளர்களுக்குக் குடியிருப்புகள் உள்ளன. 96 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் உள்ளது. 864 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்களும், 1,093 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர் குடியிருப்பு களும் கட்டப்படவேண்டும்.

### பழங்குடியினர் நலத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 9 ஒன்றியப் பகுதிகள் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முன்பே இவ்வொன்றியப் பகுதிகள் ஒவ்வொன் றிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வந்துள்ளது. அவைகளில் ஒன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக்கப்பட்டுள்ளது.

1987-88-இல் வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஜவ்வாது மலையில் உள்ள நம்மியம்பட்டு கிராமத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்திட அரசு ஆணை வழங்கியது. 1987-88-இல் மேலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் தென்னார்க்காடு மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள கீழ்க்காட்டில் ஏற்படுத் திட அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தவிர 1.6.87-இல் இருந்து மருந்துத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 12 மருந்தகங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களாகச் செயல் பட்டு வருகின்றன. சிதறுண்ட பழங்குடி மக்களுக்காகக் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 1988-89-இல் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப் பட்டுச் செயல்பட்டு வருகிறது.

தேசீய கண்பார்வைக் குறைவுத் தடுப்புத் திட்டத்தின் கீழ் சாதாரணக் கண்நோய் களுக்குச் சிகிச்சை அளித்திடவும், கண்ணாடி வழங்கவும், பள்ளிக் குழந்தை களுக்குக் கண்பாதுகாப்பு முறைகளை விளக்கவும் ஆரம்பச் சுகாதார நிலையங் களில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

தற்போது கண் சிகிச்சை உதவி யாளர்கள் 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒவ்வொரு நிலையத் திற்கும் ஒரு கண் சிகிச்சை உதவியாளர் வீதம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது ஒரு 100% மத்திய உதவி பெறும் திட்டமாகும். இதற்காக மத்திய அரசு ரூ.3,000/- மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. மாநில அரசு ரூ.2,000/- மதிப்புள்ள உபகரணங்களை வாங்கு கிறது. இந்த 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கண் சிகிச்சை உதவி யாளரும், பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்களும், சாதாரண கண்நோய் களுக்குச் சிகிச்சை அளித்து, கண் பரி சோதனை செய்து, மூக்குக் கண்ணாடிக்குக் குறிப்பளிக்கின்றனர். இது தவிர கண் புரை கேஸ்கள் பார்க்கப்பட்டு, அறுவைச் சிகிச்சைக்காக அருகில் உள்ள தலைமை மருத்துவமனைக்கு அல்லது நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்படு கின்றனர். இது தவிர பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு வைட்டமின் 'ஏ' மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தை மேலும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 1989-90-ஆம் ஆண்டிற்கு விரிவு படுத் திட அரசுக்கு கருத்துகள் அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படா விட்டாலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவை யான வசதிகள் செய்யத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதற்காக 1989-90-ஆம் ஆண்டில் அரசு ரூ.2.89 இலட்சம் செலவில் இரண்டு மகேந்திரா ஊர்திகள் வாங்கிட அரசு ஆணை வழங்கியது.



# குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள்

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்குதுறை அமைச்சர்**

**டாக்டர் க. பொன்முடி**

'**நீ**ரின்றி அமையாது உலகம்' என்ற முது மொழிக்கிணங்க, தமிழகத்தில் வாழுகின்ற மக்களுக் குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை எப்படியேனும் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்கிற மகத்தான பணியில் தமிழக அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

'தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாழு கின்ற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும்' என்கிற செயல் திட்டத்தைத் தனது பிறந்தநாளின் போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் இத்தகைய அறிவிப்பினையொட்டி, பாதுகாக்கப்பட்ட குடி நீரைப் பொதுமக்களுக்கு எப்படியேனும் வழங்க வேண்டும் என்கிற முயற்சியினை உடனடியாக மேற்கொள்ளவும், குடிநீர்த் திட்டங்களை நிறை வேற்றிப் பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தங்கு தடையின்றி வழங்கவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள குடிநீர்ப் பிரச்னையை அறிவதற்காகச்சட்டமன்ற உறுப்பினர்கள், குடிநீர் வடிகால் வாரியத்தின் அதிகாரிகள் ஆகியோரை அழைத்துக் கலந்துரையாடி கருத்துக்கள் பெறப்பட்டன. அக்கருத்துக்களின் அடிப்படையில், குடிநீர்த் திட்டங்களாக மலர்ந்து, அத்திட்டங்களை நிறை வேற்றி முடிப்பதற்குரிய காலக்கெடுவும் நிர்ண யிக்கப்பட்டது. குழுக் கூட்டங்களில் எடுத்து வைக்கப் பட்ட கருத்துக்கள், திட்டவடிவம் பெற்றுச் செய லாக்கம் பெற்றதா என்கிற வகையில் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் விரைந்து நிறை வேறத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சட்டத்தின் உறுதி யோடு வடிவமைத்து, தமிழக மக்களுக்குச் சமர்ப் பணம் செய்தார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, கிராமப்புற மக்களின் வாழ் வோடு இணைந்த ஒரு மாபெரும் அமைப்பாகத் திகழ்கிறது. 1980 முதல் 1990 வரை இந்தப் பத்தாண்டுக் காலத்தில், உலகத்தின் குடிநீர் பொது சுகாதாரத் தேவைகளை நிறைவு செய் கின்ற பத்தாண்டுகளாக ஐக்கியநாடு சபையின் வளர்ச்சிப் பிரிவு உலக முழுதும் கொண்டாடியது. ஆயினும் முழுமையான ஒரு நிறைவினை உரு வாக்கிவிட்டதாக நிறைவு கொள்ள முடியவில்லை.

மக்களின் பெரும் எதிர்பார்ப்புகள் ஒருபுறம், இயற்கை மாறுபாட்டால் எழுந்த குடிநீர்ப் பிரச்னை மறுபுறம் என்கின்ற நிலைமை தமிழகத்தில் இருப் பதை நினைவுகூர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கவும், குடிநீர்ப் பற்றாக்குறையை அகற்றவும், அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், உறுதிபூண்டு, செயல் திட்டங்களாக வரலாற்றுப் பொன்னேட்டில் இடம் பெறத்தக்க திட்டங் களையும், அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

---

**மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 1971-ஆம் ஆண்டில், தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சட்டத்தின் உறுதியோடு வடி வமைத்துத் தமிழக மக்களுக்குச் சமர்ப்பணம் செய்தார்கள்.**

---

அவர்கள் எடுத்துரைத்த கருத்தின் அடிப் படையில் ஊரகக் குடிநீர்த் திட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு சிறப்புப் பகுதித் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், வறட்சி நிவாரணப் பகுதியின் அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டங்கள், இலங்கை வாழ் அகதி களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள், 3,000 அல்லது அதற்கு மேலும் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைக் கட்டும் திட்டம், நகர க்

குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள், உலக வங்கியின் உதவியின் மூலம் என்கிற வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, தமிழகத்தில் செயல் படுத்தப்படுகின்றன.

**ஊரகக் குடிநீர்த் திட்டம்:**

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஜனவரி 89 முதல் மார்ச் 90 வரை ரூ.9,975.81 இலட்சம் செலவில் 10,626 குடியிருப்புகள் பயனடைகின்ற வகையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் 9.97 இலட்சம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் உட்பட 42.44 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள். ஏப்ரல் திங்கள் 90 முதல் அக்டோபர் 90 வரை ரூ.4,024.98 இலட்சம் செலவில் 2,246 குடியிருப்புகள் பயனடையும் விதத்தில் குடிநீர்த்திட்டம் நிறை வேற்றப்பட்டது. இதன் மூலம் 2.97 இலட்சம் ஆதிதிராவிடர் - பழங்குடியினர் உட்பட 10.99 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள்.

1990-91-வது நிதியாண்டில், நகராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.1,077 இலட்சமும், பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.421.30 இலட்சமும், பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ.229.94 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான சிறப்புப் பணித்திட்டம்:**

இத்திட்டம் ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ஊரகக் குடிநீர்த் திட்ட ஒதுக் கீட்டிலிருந்து 20 விழுக்காடு ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 89 முதல் அக்டோபர் 90 வரை ரூ.2,017.72 இலட்சம் செலவில் 4,008 குடியிருப்புகள் பயனடைகின்ற வகையில் குடிநீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன. 6-வது, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 1980-விருந்து 90-ஆம் ஆண்டு வரை கடந்த பத்தாண்டுகளில் ரூ.5,827.73 இலட்சம் செலவில் 8,006 ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதில் 1989-90-ஆம் ஆண்டில் மட்டும் ரூ.1,070.86 இலட்சம் செலவில் 2,466 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருப்பது என்பது நினைவுகூர வேண்டிய அம்சமாகும். அதாவது, கடந்த ஓராண்டில் மட்டும், பத்தாண்டுகளில் நிறைவேற்றி முடிக்க வேண்டிய மூன்றில் ஒரு பங்குப் பணி முடிக்கப்பட்டிருப்பதென்பது நினைந்து போற்றக்கூடிய ஒன்றாகும்.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்:**

உள்ளூரில் அமைந்துள்ள நீர் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமையில், அதிக தூரத்தில் அமைந் துள்ள நீர் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் பொதுமக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க முடியும் என்கிற வகையில், தமிழக அரசு திட்டச் செலவு அதிகமாகுமென்பதைக் கருத்தில் கொள்ளாமல், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடிவு செய்து பணிகளைத் தொடங்கியிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் ரூ.1,146.99 இலட்சம் செலவில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங் களுக்கும், 90-91-இல் ரூ.2,148.93 இலட்சம் செலவில் 17 கூட்டுக்குடிநீர்த் திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீண்டகாலமாகக் குடிநீர்ப் பிரச்னையில் உழன்ற செஞ்சி, திண்டிவனம், அனந்தபுரம், ஒடுகத்தூர், கும்பராயூர், மணப்பாறை, திருவண்ணாமலை போன்ற பகுதிகள் பயனடையும்.

**வறட்சி நிவாரணப் பணி:**

1989-90-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 6,500 ஆழ்துளைக் கிணறுகள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டதோடு, மதுரை மாநகராட்சியில்-59, கோயம்புத்தூர் மாநகராட்சியில்






## பால்வளப் பெருக்கம்

**மாண்**புமிகு செய்தி மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் 27-11-90 அன்று சென்னைக் கோட்டையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், சென்னை நகரில் 130 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்கள் இருப்பதாகவும், நடப்பாண்டில் மேலும் 25 தரமான பால் விற்பனை நிலையங்கள் புதிதாகத் தொடங்கப் பட இருப்பதாகவும், இது தவிர பிளாஸ்டிக் டேங்குகளில் 200 முதல் 400 லிட்டர் பால் வைத்து விற்பனை செய்யும் நிலையங்கள் சென்னையில் 80 இருப்பதாகவும், மேலும் இத்தகைய நிலையங்கள் 100 இடங்களில் தொடங்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

பால் விற்பனை நிலையத்தில், தண்ணீர் கலந்து விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படு மென்றும், சென்னை நகரில் தற் போது பால் தட்டுப்பாடு ஏதுவு மில்லை என்றும் அவர் அப்போது கூறினார்.

6 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் பால், சென்னையில் நாள்தோறும் விநியோகிக்கப்படுவதாகவும், 7 மாநிலத் தலை நகரங்களில் ஆவின் உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ள தாகவும், ரூ 68 கோடி செலவில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவ தாகவும், ஈரோட்டில் நாள்தோறும் 30 டன் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான வேலை தொடங்கி விட்டதாகவும் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 டன் கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்கான தொழிற் சாலை அடுத்த மாதம் உற்பத்தியைத் தொடங்க இருப்பதாகவும் கூறினார். நாள்தோறும் 4 இலட்சம் லிட்டர் பால் பவுடர் பதப்படுத்தும் தொழிற் சாலை சோளிங்க நல்லூரில், 30 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை திருச்சியில் புதி தாகத் தொடங்கப்படவிருக்கிறது

பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க, தேவைப்படும் இடங்களில் தாராளமாக அனுமதி வழங்கப்படும்

---

40, திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டத்தில்-50 என்கிற வகையில், ஆழ்துளைக் கிணறுகள் அமைக் கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ அந்த ஆண்டில் 6,649 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.1,659.99 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. 1990-91-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக அரசு ஒப்புதல் அளித்துப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

1989-90-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணியில் 6,649 ஆழ்துளைக் கிணறுகளும், 1,800 மாற்று ஆழ்துளைக் கிணறுகளும், இது வரை குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகளுக்கு 7,286 ஆழ்துளைக் கிணறுகளும், ஆக மொத்தம் 15,735 ஆழ்துளைக் கிணறுகள் ஒரே ஆண்டில் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன.

1989-90-ஆம் ஆண்டில் விரைவு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு, 10,323 குடியிருப்பு களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை யென்பது கண்டறியப்பட்டு, 89-90 நிதியாண்டில் 6,000 குடியிருப்புகளுக்கு எப்படியேனும் குடிநீர் வசதி செய்துதரப்பட்ட வேண்டுமென்கிற வகையில் பணிகள் துவக்கப்பட்டு விரைந்து செயலாற்றி யதன் மூலம், 8,786 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 1,537 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொண்டு, 1,437 குடி யிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்துதரப்பட்டிருக் கிறது. மேலும் 100 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டிற்குள்ளாகக் குடிநீர் வசதி செய்து தரு வதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**குறைந்த செலவு சுகாதாரத் துப்புரவுத் திட்டத் தின் கீழ் 14 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப் பட்டு இதன்மூலம் 6.25 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.**

### இலங்கைத் தமிழர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணி:

இலங்கையிலிருந்து தமிழகத்தில் தஞ்சம் அடைந்த 1 இலட்சத்து 21 ஆயிரத்து 361 இலங்கை வாழ் தமிழர்கள், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருப்பதையொட்டி அவர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக ரூ.60.12 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

1989-90-இல் மத்திய அரசு நிதியுதவியுடன் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நடைமுறை யிலுள்ள 39 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மேம் பாடு செய்வதற்காகக் கிராம மற்றும் நகரங்களுக்கு ரூ.225 இலட்சம் செலவில் 7 இலட்சத்து 28 ஆயிரம் பேர் பயனடைகின்ற வகையில் திட்டங்கள் முடிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 3,000 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்படும் என அறிவித்ததற்கிணங்க, 764 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு, 1990-91-ஆம் ஆண்டு நிதியாண்டில் ரூ.1,264.375 இலட்சங்கள் மதிப்பீட்டில் 268 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி களும், 91-92-ஆம் நிதியாண்டில் ரூ.3,105.250 இலட்சம் மதிப்பீட்டில் 486 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன.

**நகரகக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள்:**

89-90 நிதியாண்டில் நகரகக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காக ரூ.2,717 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 12 குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 4.17 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெற்றிருக்கிறார்கள். நாமக்கல், மணலூர்ப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் குடிநீர்த்திட்ட அபிவிருத்தித் திட்டங்களும், திருச்சி- பாதாளச் சாக்கடைத் திட்டமும் விரைவுபடுத்தப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன.

89-90, 90-91-ஆம் ஆண்டுகளில் 15 நகரங்களில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ.45 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக ஆய்வில் இருக்கிற பத்மநாபபுரம் குடிநீர்த் திட்டம், திண்டிவனம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், ஓசூர்-சிப்காட், மத்தகரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், செஞ்சி, அனந்தபுரம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், காட்டுமன்னார் கோயில் கூட்டு அபிவிருத்தித் திட்டம், கரூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், விருத்தாசலம் உட்பகுதி குடிநீர்த் திட்டம், திருமழிசை, உடுமலை அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன

---

கடலோரப் பகுதிகளில் குறைவான ஆழத்தில் நல்லநீர் கிடைப்பதால், 'யூனிசெப்' உதவியுடன் 71 'தாரா' கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு, குடிநீர் வழங்குகின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது.

---

90-91-வது நிதியாண்டில் நகராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.1,077இலட்சமும், பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.421.30 இலட்சங்களும், பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ 229.94 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் நிவாரணப் பணிகளுக்காக ரூ.200 இலட்சமும், பேரூராட்சிகளில் குடிநீர் நிவாரணத் திட்டங்களுக்காக ரூ.100 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 27 நகராட்சி, 33 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவியுடன், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளுக்கும், சேலம் நகராட்சிக்கும் குடிநீர் விரிவாக்கத் திட்டங்கள், 75 சிறிய மற்றும் நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள், 14 நகரங்களுக்குக் குறைந்த செலவு துப்புரவுத் திட்டங்கள் ஆகியவைகளை நிறைவேற்றத் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

இதன் மூலம் 740 வழியோரக் கிராமங்களுக்கு மொத்த விநியோக முறையில் குடிநீர் வழங்கப்படும். இதற்காக ரூ.192.81 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

மூன்று ஆண்டு காலக் கெடுவிற்குள் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கத் தகுந்த கூடுதலான துணைத் திட்டங்களைச் சேர்த்து, உலக வங்கித் திட்டத்தை மாற்றியமைக்க உலக வங்கி ஒப்புதலை வழங்கியிருக்கிறது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட உலக வங்கித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.299.83 கோடியாகும். இத்திட்டத்தில் மணலூர்ப்பேட்டை, புதுக்கோட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, பொள்ளாச்சி, சங்கரன்கோவில் ஆகிய நகராட்சிகளின் குடிநீர்த் துணைத் திட்டங்களும், கோவை-சேலம் ஆகிய நகரங்களின் வழிகளில் 740 கிராமங்களும் குடிநீர் வசதி பெற வழி செய்யும் திட்டமும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்புதிய கூடுதல் திட்டத்தின் மூலம் 11.39 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். ஜனவரி 89 முதல் அக்டோபர் 90 வரை ரூ.42 கோடி செலவிடப்பட்டு 27 குடிநீர் துணைத் திட்டங்கள் முடிக்கப்பட்டதன் மூலம் 2.5 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள். குறைந்த செலவு சுகாதாரத் துப்புரவுத் திட்டத்தின் கீழ் 14 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு இதன் மூலம் 6.25 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

குடிநீர்த் திட்டங்களை உருவாக்குவதற்கும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் வாரியம் தற்போது தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டு அதற்கென்று ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தமிழகத்திலுள்ள கடினமான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கும், திட்டங்களை உருவாக்குவதற்கும் ஒரு தனிக் கோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

நீராதாரங்கள் இல்லாத கடினப்பகுதிகளுக்குத் தேவையான நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மத்திய நிலநீர் வாரியம், மாநில நிலநீர்த்துறை ஆகியவற்றின் வல்லுநர்களைக் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு இராமநாதபுரம், கீழ்க்கரை போன்ற நகரங்களுக்குத் தேவைப்படுகின்ற குடிநீரைத் தரக்கூடிய நீர் ஆதாரத்தைக் கண்டறிந்து பரிந்துரைத்துள்ளது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய நகரங்களுக்கான நீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் முன்னேற்றம் கண்டு இருக்கின்றது. இக்குழு சாத்தான்குளம், ஒட்டப்பிடாரம் விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் இருந்து நீர்மட்டத்தைக் கண்காணிக்கின்ற பணியினை மேற்கொண்டிருக்கிறது.

பெரும்பாலும் குடிநீர் வழங்கும் திட்டங்கள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதன் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் சுகாதாரக்கிணறு வழிமுறைக்கிணறு, குளம், ஊருணி போன்ற இயற்கை நீர் நிலையங்கள், ஆகியவற்றைச் செம்மைப் படுத்துகின்ற பணியைக்

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகப் பணிகள்!

'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்' செயல்படுத்திவரும் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத் தின் முன்னேற்றத்தைத், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் தலைமை யில் 22.11.90 அன்று திட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு செய்தது

இம்மகளிர் மேம்பாட்டுக் கழகம், இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடனும் விவசாய வளர்ச்சிக் கான பன்னாட்டு நிதியுதவியுடனும் தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. 1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்திட்டம் சேலம், தென்னார்க்காடு ஆகிய இரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப் படும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு 1989-90 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல் பட்டு வருகிறது. ஏழாண்டுக் காலத் தில் ரூ.45.92 கோடி நிதியுதவி யுடன் சுமார் 40,000 பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடை வதற்கு வழிவகை செய்யும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம் கிராமப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பெண் களைத் தெரிந்தெடுத்து, அவர் களைக் குழு அடிப்படையில் ஒன்று சேர்த்து விவசாயம், தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, எண்ணெய் விதைகள், கால்நடைப் பராமரிப்பு, சிறு மற்றும் கிராமக் குடிசைத் தொழில், நிலம் அபிவிருத்தி ஆகியதுறைகளைச் சார்ந்த பலவிதப் பொருளாதாரத் தொழில் திட்டங்களை மேற்கொள்ளு வதற்கான நிதியுதவிகளை வழங்கி வருவதாகும். இத்திட்டத்திற்கு அரசு சாராத ''மைராதா'' என்னும் நிறு வனம் இப்பெண்களைத் தெரிந் தெடுப்பது முதல், அவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை ஆர்வத் துடன் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடுத்துவது வரை கழகத்துக்கு உதவி புரிந்து வருகிறது.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், மகளிர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கிறது; வங்கிக் கணக்கு வைத்துக் கொள்ளத் தூண்டு கிறது; மகளிர் முன்னேற்றத்திற்கு வகைசெய்கிறது.**

சென்ற ஆண்டு முதல்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், சுமார் 7,500 பெண்கள் 312 குழுக்களாக அமைக்கப்பட்டு, இது வரை இத்திட்டத்தில் அவர்களில் 2,100 பெண்கள் பயன்படுகின்ற வகையில் ரூ.1.15 கோடி செலவில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், மகளிர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அதன் மூலம் அவர்கள் தாங்களாகவே வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்கள் முன்னேற்றம் அடைய வழிவகை செய்துள்ளது என்பது ஆகும். இதுவரை இப்பெண்களின் குழுக்கள் ரூ.10 இலட்சம் சேமித் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் பல்வேறு பிரிவு களில் எதிர்பார்ப்புக்கு மேலான முன்னேற்றத்தை அடைந்து வெற்றி கரமாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத் தின் மேற்பார்வைக் குழு 1990-ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் வாரத் தில் இத்திட்டத்தின் செயலாக்கத்தை நேரில் பார்வையிட்டுப் பாராட்டு தல்களைத் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் மற்ற மாவட்டங் களுக்கு விரிவு படுத்தப்படுவதற்கான செயல்குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளது.

— இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

குடிநீர் வாரியம் மேற்கொள்ள இருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நில-நீர்ப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நீர் ஆதாரங் களைக் கண்டுபிடிப்பதற்கு 87 உதவி நில நீர் வல்லுநர்கள் கோட்ட அலுவலகங்களில் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். 14 துணை நில-நீர் வல்லுநர்கள் வட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்டு, பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

செங்கை-அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய கடலோரப் பகுதிகளில் குறைவான ஆழத்தில் நல்ல நீர் கிடைப்பதால், யூனிசெப் உதவியுடன் 71 தாரா கையிறைப் பான்கள் பொருத்தப்பட்டு, குடிநீர் வழங்குகின்ற பணி நடந்துகொண்டிருக்கிறது.

மணற்பாங்கான பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதற்காக ஒரு தனி இயந்திர வியல் கோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதிலும், பொது மக்களின் கருத்தை அறிந்து குடிநீர் வாரியம் பணிகளை மேற்கொள்ளுகின்ற வகையிலும் வட்ட அலுவலகங்களில் மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமையன்று வாரியப் பொறியாளர்கள், சட்டப்பேரவை உறுப்பினர், மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் நடத்தப் பட்டு வருகிறது. இக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில் வழங்கப்படும் நடவடிக்கை தொடர்புடைய அனைவருக்கும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் வாழ்வில் ஒளி விளக் கேற்றவும், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை-குறிப்பாக நன்னீரை அவர்கட்கு வழங்கவும், புதிய நீர்-ஆதாரங்களைக் கண்டறிந்து குடிநீர்ப் பெருக்கத்தை உருவாக்கவும், திட்டப் பணிகள் மக்களின் மனமகிழ நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

# சிறு சேமிப்புத் துறை




## ஒரு மாத சம்பளத்தை ஒரே ஒரு முறை முதலீடு செய்து ஆயுள் கால பென்ஷன் பெறுங்கள். வேறு எந்த வங்கியும் அளிக்காத விசேஷத் திட்டம்



| ஒரு முறை சேமிப்பாக முதலீடு செய்யும் மாதச் சம்பளம் | 58-ம் வயதிலிருந்து மாதாந்திர பென்ஷன் ஆயுள் காலம் வரை பெறும் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 18-23 வயதில் சேமிப்பவர்களுக்கு | 23-28 வயதில் சேமிப்பவர்களுக்கு | 28-33 வயதில் சேமிப்பவர்களுக்கு | 33-38 வயதில் சேமிப்பவர்களுக்கு | 38-43 வயதில் சேமிப்பவர்களுக்கு | 43-48 வயதில் சேமிப்பவர்களுக்கு |
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1,500 | 1,920 | 960 | 480 | 240 | 120 | 60 |
| 2,000 | 2,560 | 1,280 | 640 | 320 | 160 | 80 |
| 2,500 | 3,200 | 1,600 | 800 | 400 | 200 | 100 |
| 3,000 | 3,840 | 1,920 | 960 | 480 | 240 | 120 |
| 3,500 | 4,480 | 2,240 | 1,120 | 560 | 280 | 140 |
| 4,000 | 5,120 | 2,560 | 1,280 | 640 | 320 | 160 |
| 4,500 | 5,760 | 2,880 | 1,440 | 720 | 360 | 180 |
| 5,000 | 6,400 | 3,200 | 1,600 | 800 | 400 | 200 |
| 5,500 | 6,880 | 3,440 | 1,720 | 880 | 440 | 220 |
| 6,000 | 7,680 | 3,840 | 1,920 | 960 | 480 | 240 |

இந்த விசேஷ திட்டத்தில் உங்களுடைய ஒரு மாத சம்பளத்தை ஒரே ஒரு முறை முதலீடு செய்து ஆயுள் கால பென்ஷன் பெறுங்கள். அதன் பிறகு, உங்களால் நியமிக்கப்பட்டவருக்கு இது கிடைக்கும். வெவ்வேறு வயதுப் பிரிவினருக்கு உரிய மாதாந்திர பென்ஷன் தொகையை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனவே...

★ உங்கள் வயதுப் பிரிவை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

★★ 58 ஆண்டுகளுக்குப் பிறகு தேவையான மாதாந்திர பென்ஷனைத் தேர்ந்தெடுங்கள்

★★★ வயதுப் பிரிவுக்குத் தகுந்தாற்போல் முதலீடு செய்யத் தொடங்குங்கள்

★★★★ உங்களுடைய அசல் தொகை அப்படியே இருக்கும்.

★★★★★ உங்கள் மாதாந்திர பென்ஷனுக்கு 10 மடங்குக்குச் சமமான தொகையை போனஸாக ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெறுங்கள்.

### தமிழக அரசின் சிறப்புச் சலுகை:

• 1.6.1990 முதல் 31.12.1990 வரை கணக்குகளில் தமிழ்நாட்டில் டெபாசிட் செய்யப்படும் ரூ. 500/- முதலீட்டிற்கு இலவசப் பரிசுக் கூப்பன் வழங்கப்படும்.

மாருதி கார், ஸ்கூட்டர், கலர் டி.வி., ரெப்ரிஜிரேட்டர், மோஃபா, தையல் எந்திரம், சைக்கிள், கைக்கடிகாரம் மற்றும் சுவர்க் கடிகாரம் (262 பரிசுகள்) முதலிய மகத்தான பரிசுகளைப் பெறும் வாய்ப்பு.

## ஆயுள் கால பென்ஷன் பெற உங்கள் முதலீடு வளர்வது எப்படி...

ஒரு மாத சம்பளத்தை ஐ.வி.பி.-யில் முதலீடு செய்யுங்கள். 5 ஆண்டுகளில் இந்த முதலீடு இரு மடங்காகும். உங்கள் வயது முதிர்வடையும் வரை இதன் முதிர்வடைந்த தொகை ஐ.வி.பி.-யில் மீண்டும் மீண்டும் மறு முதலீடு செய்யப்படுகிறது. 58-ஆம் வயதில், முதிர்வடைந்த தொகை மாத வருமானத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட வேண்டும். (அதிக பட்சம் ரூ. 4 லட்சம், மீதத் தொகை, 12% மாத வருமானம் வழங்கும் இதர பொருத்தமான திட்டங்களில் முதலீடு செய்யப்படும்). ஆயுள் கால பென்ஷன் பெறும் விந்தை இதுதான்:

**பாதுகாப்பான எதிர்காலத்திற்கு சேமியுங்கள்**

### பரிசுக் கூப்பன்கள் கிடைக்குமிடம்

#### சென்னையில்

- மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை-5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- சென்னை மாநகராட்சி அலுவலகம், சென்னை-3 மற்றும் அனைத்து மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்
- சமூகப்பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், சென்னை-600 108.

#### மாவட்டங்களில்

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
- வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் கிடைக்கும்.


மேலும் விவரங்களுக்கு:
இயக்குநர்
சிறுசேமிப்புத் துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209



DIPR/2844/MS/90/ARIES

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ சென்னையில் நடைபாதையில் வசிக்கும் 35 ஆயிரம் பேருக்கு வீடுகள் கட்டித்தர தமிழக அரசு திட்ட மிட்டுள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் அறிவித்தார் (11.10.90).

★ காட்பாடி அருகில் ரூ.100 கோடி செலவில் 20 ஆயிரம் பேர் வசிக்கும் அளவில் புதிய நகரம் அமைக் கப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார். (15.10.90).

★ தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாசன வாய்க்கால்களிலும் இரண்டாண்டிற்கு ஒரு முறை குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று கும்பகோணத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (10.10.90).

★ திண்டுக்கல்லில் பட்டாசுக்கடையொன்றில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக இறந்த 20 பேர்களின் குடும்பங் களுக்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில் வெடி விபத்தில் உயிரிழந்த 3 பேர்களின் குடும்பங்களுக்கும் ரூ.2,30,000 நிதி வழங்கிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். இதன்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10,000 வழங்கப்படுகிறது. (16.10.90).

★ தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தோருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசு ரூ.14 இலட்சம் ஒதுக்கியுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (15.10.90).

★ காமராசர் மாவட்டத்தில் ரூ.1.56 கோடி செலவில் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (16.10.90).

★ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பஸ் கட்டணம் குறைவு என்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்க்கு அதிக போனஸ் என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வேலூரில் தெரிவித்தார். (19.10.90).

★ கோவை மாவட்டத்தில் வசதியற்ற பெரியோர்களும் தாய்மார்களும் பார்வை இழந்து கண்தெரியாமல் அவதிப்படுவதை அறவே நீக்க மாதம் இருமுறை இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படும் என்று அரசு அறிவித்தது. (15.10.90).

★ தமிழகத்தில் 500 நகரப் பகுதிகளில் ஒரே ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட அரசு திட்ட மிட்டுள்ளதாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் காஞ்சிபுரத்தில் தெரிவித்தார். (28.10.90).

★ நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப் படுவதை எதிர்த்து முறையீடு செய்யப்படும் மனுக்களை விசாரிக்க நீதிபதி சேதுராமன் தலைமையில் தனி கோர்ட் அமைக்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (2.11.90).

★ மூன்றாண்டுக்காலத்தில் 100 ஏக்கர்வரை பாசன அணைக்கட்டுகளைக் கொண்ட 6 ஆயிரம் சிறுபாசன ஏரிகள் நவீனப்படுத்தப்படும் என்றும் கிராம ஊராட்சிகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார். (29.10.90).

### விவசாயிகள் கடன் தள்ளுபடி - வீடு கட்ட கடன்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங் களிலும், கிராமத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 330-இல் வாங்கிய கடன் தொகை 24.30 கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 97,818 விவசாயிகள் பயன் பெற்றிருக்கின்றனர். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 8 நிலவள வங்கிகளில் 8,031 விவசாயிகள் வாங்கிய கடன் தொகைகள் ரூ.4.72 கோடியும், சிதம்பரனார் மாவட்டத்தில் 3 நிலவள வங்கிகள் மூலம் 4,215 விவசாயிகள் வாங்கிய கடன் ரூ.2.17 கோடியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் நகர்ப்புறச் சங்க உறுப் பினர்களுக்கு ரூ.100 இலட்சம் வீடுகட்ட கடன் வழங்க இருக்கிறது. 1989-90-ஆம் ஆண்டில் வீடுகள் கட்டுவதற்காக ரூ.440.60 இலட்சம் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை திரு நெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங் களின் கூட்டுறவு இணைப்பதிவாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

★ சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் மற்றும் தொகுப்பு ஊதியம் பெறுவோர் அனைவருக்கும் ஏற்கெனவே அறிவித்தபடி குடும்பநலத்திட்டம் விரிவுபடுத்தப் படும். இதற்கான உத்திரவினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பித்தார். (6.11.90).

★ அடுத்த ஆண்டு துறையூரில் ரூ.25 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பால் குளிரூட்டும் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் அறிவித்தார். (7.11.90).



# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

**த**மிழ்நாடு அரசின் 1989-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 1.12.90 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் முன்னிலையில் நடை பெற்ற அவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிக-நடிகையர், தொழில் நுட்ப வினைஞர்கள், கலைத்துறை வித்தகர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம்.ராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வர வேற்றார். திரைப்பட விருதுகள் தேர்வுக்குழுத் தலைவர் நீதிபதி திரு. பி.பாஸ்கரன் வாழ்த்துரை கூறினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் முன்னிலை உரை நிகழ்த்தினார்.

''கலைஞர்கள் நல்வாழ்வில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள அரசு இது என்பதற்கு இந்த விழாவே ஏற்ற உதாரணமாகும். இப்படிப் பட்ட கலைவிழா தொடர்ந்து நடை பெற வேண்டும் என்று எப்படி நீங்கள் கருதுகிறீர்களோ, அதே போல், தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்காகத் தொடர்ந்து உழைக்க நீங்களெல்லாம் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''. என்று குறிப்பிட்டார்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்களான திரு.ஜெமினி கணேசன், திரு.கே.பாலச் சந்தர், திருமதி. சௌகார் ஜானகி, திரு. கே.ஏ.தங்கவேலு, கவிஞர் வைரமுத்து, திரு. கமலஹாசன் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். செய்தித்துறை இயக்குநர் திரு. க.முத்துசாமி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். விழா முடிவில் செய்தி-சுற்றுலாத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

மேதகு ஆளுநர் அவர்கள் தம் தலைமை உரையில், ''இந்தியாவில் சிறந்த திரைப்படத் தயாரிப்பு நிலை யங்களைக் கொண்டது தமிழகம்; பெரு மளவில் திரைப்படங்களைத் தயாரிப் பதில் சிறந்து விளங்குவதும் தமிழகம்;

**''சிறந்த நடிகர் நடிகைகள் இயக் குநர்கள் ஆகியவர்களுக்குப் பரிசுகள் வழங்குவது மாத்திரமல்ல; சில படங் களுக்குச் சலுகை அளிக்கின்ற வகை யில்-தரமான, குறைந்த செலவில் தயாரிக் கப்பட்ட தமிழ்ப்படங்களுக்கும் அரசு மானிய உதவி வழங்கி வருகிறது!''**

**—மாண்புமிகு முதல்வர்**



இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இம்மாநிலத்தில், அனைத்து நாட்டுத் திரைப்படங்களுக்கு நிகரான தரத்துடன், திரைப்படங்கள் தயாரிக்கப் பட வேண்டும். எதிர்காலத்தில் இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வ தேச அளவிலும் விருதுகள் பெறும் வகையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்'' என்றார்.

திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:

``தமிழக அரசின் 1989-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள் மற்றும் திரையுலகக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா, கடந்த ஆண்டு ஒரு நீண்டகாலத் தொய்விற்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இரண்டாவது ஆண்டாக நடைபெறுகின்ற விழாவாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் - 1988 - அதற்கு முன்பே கூட பரிசு பெற வேண்டிய படங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே ராஜா சாண்டோ பெயரால் ஒரே ஒரு விருது கலையுலக வித்தகருக்கான விருது வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை கடந்த ஆண்டுகளில் விரிவுபடுத்தி, ராஜா சாண்டோ விருது, கலைவாணர் விருது, அருமை நண்பர் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பெயரால் எம்.ஜி.ஆர். விருது என்ற மூன்று விருதுகள் கடந்த ஆண்டு வழங்கப்பட்டன.

மேலும் இந்தத் திட்டம் விரிவடைகிறது என்பதற்கு அடையாளமாகவும், இன்னும் கூட விரிவடையும் என்ற நம்பிக்கையினை ஊட்டுகின்ற வகையிலும், இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் அண்ணா விருதும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரால் பாவேந்தர் விருதும் இணைக்கப்பட்டு ஐந்து வித்தகர் விருதுகள் இந்த ஆண்டு வழங்கப்படுகின்றன.

சிறந்த படங்கள் என்ற வகையில் முதல் பரிசு 'புதியபாதை'யும் இரண்டாவது பரிசு 'புதுப் புது அர்த்தங்களும்', மூன்றாவது பரிசு 'நியாயத்தராசும்', சிறப்புப் பரிசைக் 'கரகாட்டக்காரன்' படமும் பெறுகின்றன.

சிறந்த இயக்குனராக - ஏற்கெனவே சிறந்த இயக்குனராக உள்ள என்னுடைய அருமை நண்பர் பாலசந்தர் 'புதுப்புது அர்த்தங்கள்' என்ற படத்திற்கான பரிசினைப் பெறுகிறார்.

சிறந்த நடிகருக்கான விருதினை - ஏற்கெனவே சிறந்து விளங்குகின்ற நடிகரான தம்பி கமலஹாசன் பெறுகிறார். எனக்கு ஒரு சந்தேகம். நீதிபதி பாஸ்கரன் தலைமையிலே அந்தப் படத்தைப் பார்த்து சிறந்த நடிகர் என்று கமலஹாசனைத் தேர்ந்தெடுத்த போது, அதிலே எந்தப் பாத்திரத்திற்காகப் பரிசு கொடுக்கிறார்கள் என்பதுதான். அப்புவுக்காகவா, ராஜாவுக்காகவா? என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நான் அவர்கள் இரண்டு பேரையும் இணைத்து, அப்பு ராஜாவுக்காக, தம்பி கமல்ஹாசன் சிறந்த நடிகருக்கான பரிசைப் பெறுகிறார் என்று கருதிக் கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்ற பரிசினை 'நினைவுச் சின்னம்' படத்தில் நடித்த ராதிகா - இன்று வெளி நாட்டிலே இருக்கிற காரணத்தால், அவர் சார்பாக அவருடைய தாயார் பெற்றுக் கொள்கிறார்.

சிறந்த கதை ஆசிரியர் - தம்பி பார்த்திபன். அவருடைய படம் தயாரிக்கப்பட்டு வெளியிடுவதற்கு முன்பு, என்னை அழைத்து அந்தப் படத்தைப் பார்த்து அது பற்றிய கருத்தையும், வாழ்த்தையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். என்னுடைய கருத்தும், வாழ்த்தும், வீண்போகாமல் அந்தப் படம் மிக வெற்றிகரமாக அவருடைய கதை ஆக்கத்தால் மற்றும் அந்தப் படத்தினுடைய சிறப்பு அம்சங்களால்



**★ கலை என்பது- நெறிமுறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.**

**—அறிஞர் அண்ணா**



அது இன்றைக்கு முதல் பரிசைப் பெறுகிறது. அந்தப் படத்திற்கு கதை அமைத்த வகையிலே பார்த்திபன் சிறந்த கதை ஆசிரியருக்கான பரிசைப் பெறுகிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் தம்பி கலைமணி 'எம் புருசன்தான் எனக்கு மட்டுந்தான்' என்ற படத்தின் வாயிலாக இந்தப் பரிசினைப் பெறுகிறார்.

இளையராஜா சிறந்த இசை யமைப்பாளருக்கான விருதினை - 'கரகாட்டக்காரன்', 'வருஷம் 16' ஆகிய படங்களுக்காகப் பெறுகிறார்.

சிறந்த பாடலாசிரியருக்கான விருதை 'அபூர்வ சகோதரர்கள்', 'வருஷம் 16' ஆகியபடங்களுக்குப் பாடல் எழுதியதற்காக நண்பர் வாலி பெறுகிறார்.

'நியாயத்தராசு' படத்தில் 'வானம்' என்ற பாடலை இசைத்த ஜேசுதாஸ் சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருதினைப் பெறுகிறார்.

''மகனே மகனே கண்ணுறங்கு'' என்ற பாடலை 'வரம்' என்ற படத்தில் பாடியதற்காக பி.சுசீலா சிறந்த பின்னணிப் பாடகிக்கான பரிசினைப் பெறுகிறார்.

''அன்று பெய்த மழையில்'' என்ற படத்திற்காக ஒளிப்பதிவாளர் அசோக்குமார் பரிசு பெறுகிறார். 'வருஷம் 16', 'கரகாட்டக்காரன்' படத்திற்காக ஒலிப்பதிவாளருக்கான பரிசை பாண்டுரங்கன் பெறுகிறார்.

ராம்போ ராஜ்குமார் - 'ஒரு தொட்டில் சபதம்' படத்திற்காக சிறந்த சண்டைப் பயிற்றுனருக்கான பரிசைப் பெறுகிறார். புதியபாதை படத்தின் மூலம் சிறந்த கலை இயக்குனருக்கான பரிசைத் திருமதி மோகனா பெறுகிறார். 'கரகாட்டக் காரன்' படத்தில் நடன ஆசிரியருக் கான பரிசை டி.கே.எஸ். பாபு பெறுகிறார். சிறந்த திரைப்படத் தொகுப்பாளருக்கான பரிசை 'வருஷம் 16' படத்திற்காக டி.ஆர். சேகர் பெறுகிறார்.

'சோலைக்குயில்' படத்தில் சிறந்த நடிகராக நடித்துப் பெயர் பெற்ற தம்பி இளையவேள் ராதாரவி சிறப்புப் பரிசைப் பெறுகிறார்.

'ஆராரோ ஆரிரரோ' படத்தில் நடித்துப் புகழ்பெற்ற பானுப்ரியா சிறந்த நடிகைக்கான சிறப்புப் பரிசைப் பெறுகிறார்.

அறிஞர் அண்ணா விருது பெறுகிற மணிவண்ணன், இயக்குனர் மாத்திரம் அல்ல. கதாசிரியரும்கூட, நடிகரும் கூட, இவைகளெல்லா வற்றையும்விட, அண்ணா அவர் களுடைய கொள்கைகளை அழுத்தம் திருத்தமாக நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டிருக்கிற, அதை கலைத்துறை மூலமாகவும் வெளியிட ஆர்வம் கொண்டுள்ள ஒரு சகோதரர்.

அதைப் போலவே கே.எஸ். கோபாலகிருஷ்ணன் திரைப்படத் துறையில் மிகத் துணிவாக பல சாதனைகளைப் புரிந்தவர். எனக்கு நீண்ட கால நண்பர் என்பது மாத்திரம் அல்ல. திரையுலகத்தில் பல புதிய நட்சத்திரங்களை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர். அவருடைய கதையானாலும், உரையாடல் ஆனாலும், இயக்குகின்ற திறன் ஆனாலும் அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒன்றாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் விருது, என்னுடைய நண்பர் - நீண்ட காலந்தொட்டு என் நண்பராக விளங்கி வருகின்ற சுரதா. அவருடைய பெயர் சுரதா என்று ஏன் இருக்கிறது என்பதற்கு விளக்கம். அவர் சுப்புரத்தின தாசன். சுப்பு ரத்தினம் என்பது பாரதிதாசனுடைய இயற்பெயர். பாரதிதாசனுக்குத் தன்னை தாசன் என்று அழைத்துக் கொள்வதற்காக சுப்புரத்தினதாசன் என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். பெற்றோர் இட்ட பெயர் ராஜகோபால். நான் வாழ்ந்த திருவாரூருக்கு அருகாமையிலே 'சிக்கல்' என்ற ஊரில் பிறந்தவர். அவர் வாழ்க்கையிலும் பல சிக்கல்கள் உண்டு. சிக்கல் என்ற ஊரில் பிறந்த காரணத்தால்! பாரதிதாசனுடைய அடுத்த வழித் தோன்றல் என்ற அளவிற்கு உவமைக் கவிஞராக, புரட்சிகளை - புதுமைகளை - உரு வாக்கக்கூடிய இனிய நண்பராக சுரதா விளங்குகின்றார். அவர் பாவேந்தர் விருதை இன்றைக்குப் பெறுகிறார்.

தம்பி கவிஞர் வைரமுத்து கலை யுலகிலே மாத்திரம் அல்ல, கவிதைத் துறையிலும், தமிழ்த் துறையிலும் தமிழ் ஆர்வம் ஒலிக்கின்ற துறை யிலும் வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பவர். அவருடைய கவிதைகள் நம்முடைய உள்ளத் திலிருந்து அகலாத அளவிற்கு





அழுத்தந்திருத்தமானவை. அவர் பாவேந்தருடைய விருதைப் பெறுவது மிகமிகப் பொருத்தம்.

கலைவாணர் விருது - நண்பர் கே.ஏ. தங்கவேலு பெறுகிறார். நான் தங்கவேலுவைக் கலைவாணர் இல்லத்தில் ஆரம்ப காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தவன். கலைவாணர் தயாரித்த 'மணமகள்', 'பணம்' என்ற திரைப் படங்களுக்கு நான் உரையாடல் தீட்டிய, திரைக் கதை தீட்டிய அந்தக் காலம் தொட்டு நான் நண்பர் தங்கவேலை அறிவேன். கலைவாணருடைய நேரடி மாணவ ராக- அவரால் தட்டிக் கொடுத்து வளர்க்கப்பட்டவராக வளர்ந்து அனைவரையும் அரவணைத்துப் போகின்ற அந்தப்பண்பாட்டையும் பெற்றுத் திகழக்கூடிய நண்பர். திரையுலகத்தில் நீண்ட நெடிய புகழைப் பெற்றவர். எனவே கலைவாணர் பெயரால் விருது பெற மிகவும் பொருத்தமானவர்.

நகைச்சுவைச் செல்வர் எஸ்.எஸ். சந்திரனும் கலைவாணர் விருது பெறுகிறார். கலைவாணரைப் போன்று அங்க அசைவுகளும் கலைவாணரைப் போன்று நகைச் சுவையோடு நல்ல கருத்துக்களைப் படத்தின் மூலம் தருகின்ற அந்தப் பக்குவம் பெற்ற எஸ்.எஸ். சந்திரன் இந்த விருதைப் பெறுவது மிக மிகப் பொருத்தம்.

எம்.ஜி.ஆர். விருது பெறுகின்ற அருமை நண்பர் ஜெமினி கணேசனைப் பற்றி ஒன்றை நான் குறிப்பாகச் சொல்ல வேண்டும். நான் 1969-இல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்று 76-ஆம் ஆண்டு வரையில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், பிறகு ஆட்சிப் பொறுப்பில் இல்லாத 13 ஆண்டுக் காலத்திலும் ஒவ்வொரு பிறந்த நாள் விழாவுக்கும் என்னை வந்து சந்திக்கத் தவறாத ஒரே ஒரு கலைஞர் ஜெமினி கணேசன் என்பதை நான் நினை வூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நன்றிக் கடனாக அல்ல; அவருடைய திறமைக்கு, எம்.ஜி.ஆர். விருதைப் பெறுவது சாலப் பொருத்த முடையது.

சௌக்கார் ஜானகி நீண்ட நெடுங் காலமாகத் தன்னுடைய இளம் வயது முதல் ஒரு குணச்சித்திர நடிகை யாகத் தமிழ்த்திரைப் படங்களிலும், வேறு மொழிப் படங்களிலும் நடித்து அழியாத புகழைப் பெற்றிருப்பவர். அவர் அமெரிக்க நாட்டில் இருந் தாலும் கூட, இந்தப் பரிசைப் பெறு கின்ற முனைப்புடன் தமிழகத்திற்கு வந்திருப்பதும், கலையுலகத்திலே அவர் கொண்டுள்ள அந்த நல்ல தொடர்பும், அவர் படங்களில் எந்தப் பாத்திரம் ஏற்றாலும் அந்தப் பாத்திரமாகவே மாறி நடிக்கின்ற அந்தத் திறமையின் காரணமாகவும் எம்.ஜி.ஆர். விருதினைப் பெறு கிறார். திரைப்படத் துறையின் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர். என்பதில் இருவேறு கருத்திற்கு இடமே இல்லை. எனவே அவருடைய பெயரால் விருதைப் பெறுகின்ற அவரை நான் வாழ்த்து கிறேன்.

ராஜா சாண்டோ விருது பழம் பெரும் இயக்குனர் பிரசாத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் உடல் நலமில்லாத காரணத்தால் அவருக்குப் பதிலாக அவருடைய செல்வன் அந்த விருதை இங்கே பெற இருக் கிறார். பிரசாத் பல தெலுங்கு - கன்னடம், இந்தி, தமிழ்ப் படங்கள் மூலம் அறிமுகமானவர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் நான் எழுதிய 'இருவர் உள்ளம்' 'மனோகரா' போன்ற படங்களை இயக்கியவர். 'தாயில்லாப்பிள்ளை' என்ற படத்திற்கும் அவர்தான் இயக்குனர். நான் மாத்திரம் அல்ல. பல எழுத்தாளர்களை ஊக்கப் படுத்தியவர். பல நடிகர்களை உருவாக்கியவர். அவர் இந்தப் பரிசைப் பெறுகிறார்.

ராஜா சாண்டோ விருதைப் பெறுகின்ற அன்பிற்குரிய ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களைப் பற்றி நான் சொல்லியே ஆக வேண்டும். நான் திரைப்படத் துறைக்கு அடியெடுத்து வைக்கக் காரணமாக இருந்தவரே ஏ.எஸ்.ஏ.சாமி தான். 1944-45-ஆம் ஆண்டுகளில் நான் ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் தந்தை பெரியாரின் மாணவனாகக் 'குடியரசு' அலுவலகத் திலேயே தங்கி, பெரியாரின் ஆணைப்படி 'குடியரசுப்' பத்திரிகை யின் துணை ஆசிரியனாகப் பணி யாற்றிக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்தில் ஏ.எஸ்.ஏ.சாமி என்னைக் கோவைக்கு வருமாறு அழைத்தார். கோவை ஜூப்பிடர் நிறுவனத்தில் நான் வந்து அவருக்கு உதவியாகப் பணியாற்ற என்னை அழைத்தார்.

அவருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். திருச்சி வானொலி நிலையத்தில் மிருதங்க வித்வானாகப் பணியாற்றிக் கொண்டிருந்த முத்துக் கிருஷ்ணன் மூலமாக எனக்குச் செய்தி அனுப் பினார். நான் கோவை சென்று அவரைச் சந்தித்தேன். படங்களுக்கு எப்படி வசனம் எழுத வேண்டும்

என்பதற்குத் தான் எழுதி வைத்திருந்த பகுதிகளையெல்லாம் என்னிடம் படித்துக்காட்டி 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு உதவி ஆசிரியராக - வசனம் எழுதுகின்ற பொறுப்பை என்னிடத்திலே ஒப்படைத்தார். அந்தப் படத்திலேதான் முதன் முதலாக எம்.ஜி.ஆர். கதாநாயகனாக அறிமுகமானார் என்பதைத் தமிழ்ப்பட வரலாற்றை உணர்ந்தவர்கள் தெரிந்திருப்பார்கள்.

அன்று நான் ஏற்றுக் கொண்ட அந்தப் பொறுப்பைத் திறம்பட முடிப்பதாக அவர்கள் எல்லாம் கருதிய காரணத்தால் அதற்குப் பிறகு பல திரைப்படங்களுக்கு உரையாடல், திரைக்கதை, கதை எழுதுகின்ற அந்த வாய்ப்புக்களை நான் பெற்றேன். உடன்பிறவாச் சகோதரரைப்போல அவரும் அவருடைய குடும்பத்தாரும் என்னை நேசித்தார்கள். இப்போது அவர் சென்னையிலேயே இல்லை. திருப்பத்தூரிலே இருக்கிறார் என்றாலும் கூட, அடிக்கடி கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டு என்னை வாழ்த்துவதும், என்னுடைய முயற்சியில் நான் இன்னமும் முன்னேற வேண்டும் என்று ஊக்கப்படுத்துவதும் அவருடைய பண்பான உள்ளத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'வேலைக்காரி' என்ற அந்த அருமையான புரட்சிச் சித்திரத்தைத் திரைப்படமாக இயக்கிய பெருமை ஏ.எஸ்.ஏ.சாமிக்கு உரிய ஒன்றாகும். எனவே அத்தகைய புகழ்பெற்ற ஏ.எஸ்.ஏ.சாமி ராஜாசாண்டோ விருதினைப் பெறுகின்றார்.

குறிப்பாகத் தமிழ்ப்பட உலகத்திற்கு மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எத்தகைய உதவிகளை எல்லாம் செய்திருக்கிறோம் என்பதை இங்கே கோடிட்டுக்காட்டிய இயக்குனர் பாலச்சந்தர், இன்னும் பல இருக்கின்றன; அவைகளை எல்லாம் நிறைவேற்ற உங்களை நாடி வருவோம் என்று குறிப்பிட்டார். நீங்கள் எங்களை நாடி வருகிற நேரத்தில் நானும் உங்களை நாடி வருவேன் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

கழக ஆட்சி இப்போது நடைபெற்றாலும் கூட, கழக ஆட்சியின் சார்பாக அரசு வருமானத்தைக் கொண்டு பல நல்ல காரியங்கள் செய்யப்படுகின்றன

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட மதுரை ராஜாஜி மருத்துவமனையிலே பேசும்போது அங்கேயும் ஏழைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒரு கருவி வாங்க முதலமைச்சர் நிதியிலிருந்து 40 இலட்ச ரூபாய் தந்திருக்கிறேன்.

நான் திரையுலக நண்பர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்து 'நீங்கள் எவ்வளவு பேர் இந்த முதலமைச்சர் நிவாரண நிதிக்கு உங்களால் இயன்ற தொகையை வழங்கியிருக்கிறீர்கள்? என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன். யார் யார் தந்தீர்கள், யார் யார் தரவில்லை என்ற பட்டியலை எல்லாம் நான் போட்டுக் காட்டப் போவதில்லை. தந்தவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். தராதவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

எனவே- ஒன்றை எதிர்பார்க்கிற நேரத்தில், நல்ல காரியம் செய்கிற ஒரு அரசுக்கு உதவியாக நீங்களும் இருந்திட வேண்டும் என்பதற்காகத் தான் இதனைக் குறிப்பிட்டேனேயல்லாமல் வேறல்ல.

சிறந்த நடிகர் நடிகைகள் இயக்குனர்கள் இவர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுவது மாத்திரம் அல்ல. சில படங்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் தரமான - குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களுக்கு நாம் மானிய உதவியை வழங்கி வருகிறோம். கடந்த ஆண்டும் வழங்கினோம். இந்த ஆண்டும் அதற்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மற்றொன்று, தமிழ்நாட்டில் மீண்டும் வருகிற ஜனவரித் திங்கள் சர்வதேசத் திரைப்பட விழாவைச் சென்னை நகரத்திலே நடத்திட வேண்டும் என்று மத்தியிலே இருந்த தேசிய முன்னணி அரசை நாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தார்கள். இப்போது மத்தியிலே அரசு மாறியிருந்தாலும் கூட, ஜனவரி 10-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை அந்த விழா சென்னை மாநகரத்திலே நடைபெற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்து, விருது பெற்ற - பரிசு பெற்ற கலைஞர்களுக்கும், வித்தகர் விருதுபெற்ற - பெருமக்களுக்கும், என்னுடைய நன்றியை வாழ்த்தை, பாராட்டுக்களைக் காணிக்கையாக்குகிறேன்.''

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.





# ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன் காக்கும் அரசு

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
**திரு. க. சுந்தரம்**

**ஆ**திதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்பாடு அடைவதற்குப் பல புதிய திட்டங்களைத் தீட்டி, அவர்கள் முன்னேற்றத்தை முதற்குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு.

**இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக 1974 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒரு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.**

தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 484 இலட்சங்களில் தாழ்த்தப்பட்டோர் 88.81 இலட்சமாகவும், பழங்குடியினர் 5.20 இலட்சமாகவும் உள்ளனர். தமிழ் நாட்டில் மொத்த மக்கட்தொகையில் மொத்த விழுக்காட்டில் ஆதிதிராவிடர் 18.35 விழுக்காடாகவும், பழங்குடியினர் 1.07 விழுக்காடாகவும் உள்ளனர். கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடர் 70.91 இலட்சமாகவும், நகர்ப்புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் 17.91 இலட்சமாகவும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை முறையே 79.84 விழுக்காடாகவும், 20.16 விழுக்காடாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆறு இலட்சத்திற்கு மேல் ஆதிதிராவிடர்கள் வாழும் மாவட்டங்கள் தென்னார்க்காடு, தஞ்சாவூர், செங்கை-அண்ணா, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகியவையாகும். குறைந்த ஆதிதிராவிட மக்கட்தொகை உள்ள மாவட்டங்கள் நீலகிரி, கன்னியாகுமரி, பசும்பொன் தேவர் திருமகன். ஆகியவை ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தம் படித்தவர்கள் எண்ணிக்கை 2,26,36,059 ஆகும். (46.76%), இதில் ஆதிதிராவிடர் எண்ணிக்கை 26,35,149 (29.67%), பழங்குடியினர் எண்ணிக்கை 1,64,021 (20.46%) ஆகும்.

நலப்பணிகளைச் செயல்படுத்துவதில் முன்னிலையில் உள்ள மாநிலம் நமது தமிழ்நாடே ஆகும். அனைவரும் பயனடையும் வகையில் நலத்திட்டங்கள் இவ்வரசினால் நமது மாநிலத்தில்தான் நன்கு விரிவான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் மிகவும் முன்னேற வேண்டிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகத் தலைவர் கலைஞர் அவர்களின் திறமையான நிர்வாகத்தின்கீழ் இயங்கும் இவ்வரசு பற்பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி இம்மக்களின் ஒரு பாதுகாவலராக இயங்கி வருகிறது.

**அரசு ஆணைகள்**

இந்த அரசின் குறிக்கோளான 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்ற கருத்திற்கிணங்க - ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பே தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட திட்டங்களை இளங்கலை வரை இலவசப் பட்டப் படிப்பு, வீட்டு மனை இல்லாத அனைத்துக் கிராமப்புற மக்கள் குடும்பத்திற்கு நிலப்பட்டா, ஆகியவை அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

1989-ஆம் ஆண்டில் இவ்வரசு பதவிக்கு வந்தபின், கொடுத்த அனைத்து வாக்குறுதிகளும் அரசு ஆணைகளாக வெளியிடப்பட்டுள்ளன,

உதாரணமாக, 45 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுத்தல் பற்றிய திட்டத்தைச் சொல்லலாம். அதைச் செயல்படுத்திய அரசாணை எண். 298, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 26.5.89 ஆகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு 25 புதிய விடுதிகள் திறப்பதற்காகப் போடப்பட்ட அரசாணை எண்.826, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 24.5.89-இல் ஆகும்.



இதுபோன்ற பல நலத் திட்டங்கள் இவ்வரசு பதவி ஏற்ற காலந்தொட்டே அரசு ஆணையாக வெளிவந்து செம்மையுறச் செயல்படுத்தப்படுகின்றன.

ஆதிதிராவிடர்களின் நலனை மேம்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றவும், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி மற்றும் இதர மேம்பாட்டுத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தவும், சட்டமன்ற, நாடாளுமன்ற, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் இதர மாவட்ட அரசு உயர் அலுவலர்களின் கருத்தை அறியும் பொருட்டு, இத்துறையின் அமைச்சர் என்ற முறையில் தமிழ்நாட்டில் உன்ள அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி, அம்மாநாடுகளில் தெரிவிக்கப்பட்ட நல்ல கருத்துக்களை ஏற்று - மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி இத்துறை செவ்வனே செயல்பட தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இத்துறையானது இம்மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மூன்று பிரிவாகப் பிரித்து, அவற்றைச் செவ்வனே செயற்படுத்தி வருகிறது. இவை முறையே கல்வி, பொருளாதார மேம்பாடு, வீட்டுவசதி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவைகளாகும்.

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை இவ்வரசு இத்துறைக்கு அதிகமாகவே ஒதுக்கி உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். 1988-89-இல், ரூ.66.54 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1989-90-இல் இவ்வரசு ரூ.79.06 கோடி என்ற அளவில் உயர்த்தியது. இருந்தாலும் செலவிடப்பட்ட தொகை ரூ.98.15 கோடியேயாகும். இத்துறையின் தேவையை முன்னிட்டு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.87 கோடியாக நிதி உயர்த்தப்பட்டது. மேற்கூறிய நிதி ஒதுக்கீடுகளே இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பணி ஆற்றி வருகிறது என்பதைத் தெளிவாக்கும்.

**எல்லோரும் ஓரினம்**

ஆதிதிராவிடர் மக்கள் ஏனைய சமூகத்தினருக்கு இணையாகக் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மென்மேலும் முன்னேற்றம் அடைந்தால்தான் நன்கு வாழமுடியும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதனை நன்கு உணர்ந்து, நிதி ஒதுக்கீட்டில் சுமார் 60 விழுக்காட்டைக் கல்விக்காக ஒதுக்கி உள்ளது தமிழக அரசு. 1988-89-இல் ரூ.36 கோடியாக இருந்ததை 1990-91-இல் 50 கோடியாக உயர்த்தியது. பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்துவரும் இம்மக்களுக்குக் கல்வி வசதி சரியாகக் கிடைக்க வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டுதான் இத்துறை சுமார் 1214 பள்ளிகளை இவர்களுக்கென்று பல்வேறு நிலைகளில் நடத்தி வருகிறது.

இப்படிப்பட்ட பள்ளிக்கூட வசதிகள் இருந்தால் மட்டுமே போதாதல்லவா? இவர்கள் தங்கிப் பயில சுமார் 883 மாணவ மாணவியர் விடுதிகளையும் இத்துறை நடத்தி வருகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும், கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்ல; தொழிற்கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவை எதிர்நோக்கி இவர்களுக்குக் கல்விக் கடன் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இவ்வினத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு, மாவட்டத்தில் முதல் மதிப்பெண்களைப் பெற்றால் அவர்கள் ஊக்கத்தொகையாக ரூ.300 முதல் ரூ.1000 வரையும், கல்லூரிப் பட்டப்படிப்பு தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி போன்ற பட்டப் படிப்புகளில் 60 விழுக்காட்டிற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றால்

**''கல்வி, பொருளாதார மேம்பாடு, வீட்டு வசதி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஆதிதிராவிடர் நலத்துறை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.''**

அவர்களுக்கு ரூ.500 - 1000 வரை ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இவை தவிர அவர்களில் 10-வது வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் போன்ற பொருட்களும் கொடுக்கப்படுகின்றன. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குப் பாய், சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்களும் வழங்கப்படுகின்றன. பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குப் புத்தக வங்கிகள் மூலம் புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன.

**உயர் பதவிகளில் அங்கம்**

இவ்வினத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணிகளில் உயர் பதவிகளில் மிகவும் குறைவாகவே அங்கம் வகிக்கிறார்கள். இவர்களும் இப்பணிகளில் சரிசமமான இடத்தை வகிக்க ஏற்றவகையில் இவர்களுக்கு என்று ஒரு முன்னோடித் தேர்வுப் பயிற்சி மையம் செயல்படுத்தப்பட்டு, அப்பயிற்சிமையம் மூலம் மாணவ மாணவியருக்கு முன் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதும் இங்கே பெருமையுடன் குறிப்பிடத் தக்கதாகும். கடந்த ஆண்டு மட்டும் இப்பயிற்சி மையத்தில் இருந்து 10 மாணவர்கள் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

படித்த இளைஞர்களுக்கு விமானப் பராமரிப்புப் பயிற்சி, கப்பல், வானொலி, அலுவலர் பயிற்சி, செவிலியர் பயிற்சி போன்ற பயிற்சிகளைத் தமிழ்நாடு தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பயிற்சிகள் இம்மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பை நல்கும் என்பது திண்ணம்.

இம்மக்களின் சமூக முன்னேற்றம் அவரவர்கள் வாழும் பகுதியைப் பொறுத்தே அமைகிறது. பெரும்பான்மையான மக்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் சரிவர அமையவில்லை. உதாரணமாகக் குடிநீர் வசதி, இணைப்புச் சாலை வசதி, மயானம், மயானத்திற்குச் செல்லும் பாதை வசதி இல்லாத கிராமங்கள் இன்னும் கணிசமான தொகையில் இருக்கின்றன. இப்பகுதி மக்களுக்குத் தேவையான



''கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது; சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது''.

— மூதறிஞர் ராஜாஜி

அடிப்படை வசதிகளை வழங்குவதற்காகக்கருணை உள்ளம்கொண்ட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் நடப்பு ஆண்டில் அமைக்கப்படும் மேல்நிலைத் தொட்டிகளில் 1000 தொட்டிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் தான் அமைக்க வேண்டுமென்றும், இதுபோல் 92-93 ஆண்டுகளிலும் அமைக்க வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

**வீட்டுமனை வழங்கும் திட்டம்**

மனிதனுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம் போன்ற வசதிகள் இன்னும் சரியான முறையில் கிடைக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தமிழகமெங்கும் இம்மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டொன்றிற்கு முதற்கட்டமாக ரூ.2.50 கோடி அரசு மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் அதிகம் உள்ள பகுதியில் அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பல துறைகள் மூலம் தனித் திட்டங்கள் தீட்டி அவர்கள் வாழ்வு மேம்பாடடைய இவ்வரசு சீரிய முயற்சி பல எடுத்து வருகின்றது. இதற்காகக் கடந்த ஆண்டு 203.23 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. இந்த ஆண்டு 232.17 கோடி ரூபாய் செலவிட ஆணையிடப்பட்டுள்ளது.

**இட ஒதுக்கீடு**

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் - அரசு மற்றும் அரசுத் துறைகளின் உயர் பதவிகளிலும் மற்ற பதவிகளிலும் இன்னும் சரியானபடி அங்கம் வகிக்கவில்லை என்பதை அறிந்து, இவர்களுக்கு எல்லாப் பதவிகளிலும் முன்னுரிமை கொடுக்கும்முகத்தான் தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலி இடங்களில் பிற இனத்தவரைக் கொண்டு பூர்த்தி செய்யும் முறைக்கு-நேரடி நியமனத்திற்கு 1.4.89 முதல் தடை விதித்தும், பணிகளில் அவர்களின் பிரதிநிதித்துவம் 18 சதவிகிதம் எய்துவதற்குச் சிறப்பு நியமனம் செய்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சிறப்பு நியமனம் செய்வது குறித்துக் கண்காணிக்க அனைத்து அரசுத்துறைகள், நகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் கலந்து ஆலோசித்துக் காலியிடங்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, சிறப்பு நியமனத்தின் மூலம் அக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு ஆணை வெளியிடப்பட்டது.

இவை தவிர, பழங்குடியினருக்கென்று தனியாக ஒரு சதவிகித இட ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**தீண்டாமை ஒழிப்பு**

தீண்டாமைக் கொடுமை பிற மாநிலத்தை ஒப்பிட்டு நோக்கும் பொழுது தமிழகத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. இருந்தாலும், அக்கொடுமையை அகற்றத் தனிக் காவல்படைப் பிரிவு ஒன்று, ஒரு துணைக்காவல் தளபதியை உயர் அதிகாரியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

இதற்காகத் தனித் தடுப்புச் சட்டமும் அகில இந்திய அளவில் வகுக்கப்பட்டுள்ளது. அதனை இவ்வரசு செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. இத்தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்த நடமாடும் காவல் படைப் பிரிவுகள் 25 செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இச்சட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தவும் மேலும் வலுப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மீது மைய அரசு வழங்கும் தொகை ஆதிதிராவிடர் நலப் பொருளாதாரத்திற்காக உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது. இவற்றிற்காக மைய அரசு சிறப்பு மைய நிதி உதவியை 1980-ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. இதுவரை ரூ.126 கோடி

செய்தித் துளி

## செங்கை-அண்ணா மாவட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 1,580 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.79 இலட்சமும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் தலா ரூ.200 வீதம், 16,000 பேருக்கு ரூ.32, இலட்சமும் வழங்கப் பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 8,060 பேருக்கு இதுகாறும் ரூ.216 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தில் ரூ.32 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 40,030 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி மன்றக் கட்டடங்கள், சாலைகள், பிற வளர்ச்சிப் பணிகள் ரூ.2.16 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்தகவலை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர் வியாஸ் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

சிறப்பு மைய நிதி உதவியாக மைய அரசு இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

### தாட்கோ

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாக 1974-ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒரு பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம், இம்மக்களுக்கு வீடுகள் கட்டவும், சிறு தொழில் புரிய கடன் வழங்கியும், சிறு விவசாயிகளுக்கு உதவியும், சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தும், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இம்மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்யவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் சுமார் 127.70 கோடி ரூபாய் இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இதுவரை செலவு செய்துள்ளது. இவை தவிர, வங்கியிலிருந்து 153.94 கோடி ரூபாய் கடனாகப் பெற்றும் கொடுத்துள்ளது. இக்கழகம் 1974-ஆம் ஆண்டு முதல் 1989-ஆம் ஆண்டு வரை ரூ.139 கோடி செலவில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது. இவை தவிர, என்.ஆர்.இ.பி. மூலம் 951 வீடுகளும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலம் 1,10,515 வீடுகளும், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 42 ஆயிரம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 47 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க முனைப்புடன் திட்டமிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் குடும்பங்களில் ஏற்படும் விழாக்களைக் கொண்டாட ஏற்ற வகையில் அவர்களுக்கென்று சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை சுமார் ரூ.90.80 இலட்சம் செலவில் 153 சமுதாயக் கூடங்கள் கட்டப் பட்டுள்ளன.

### பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர் துணைத் திட்டம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக இவ்வரசினால் பல துறைகள் மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பழங்குடியினர் மக்கள் தொகை 5.20 இலட்சமாகும். இதில் 2.10 இலட்சம் மக்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தும் இடங்களில் வாழ்கிறார்கள்.

மீதம் உள்ள 3.10 இலட்சம் மக்கள் தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களில் பரவலாகச் சிதறி வாழ்கிறார்கள். மொத்தம் 9 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட வட்டங்கள் ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவை முறையே தென்னார்க்காடு, வட ஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், திருச்சி, சேலம், தர்மபுரி மாவட்டங்கள் ஆகும். கடந்த 15 ஆண்டுகளாக இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 40,738 பழங்குடியினர் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் உயர வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவை தவிர பரவலாக நாடெங்கும் சிதறி வாழும் பழங்குடி மக்களுக்கு என்று தனித் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குத் தனியொரு திட்டத் தின் கீழ்-மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் - பல முன்னேற்றத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

எல்லா மாநிலங்களிலும் பழங்குடி மக்களது நிலத்தை மற்றவர்கள் ஆக்கிரமிப்புச் செய்வதற்கும், அவர்களது நிலத்தை வாங்கவும் விற்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் இச்சட்டம் இவ்வரசால் இப்போது நிறைவேற்றப் பட்டுள்ளது. மேலும், பழங்குடியினர் தங்கள் விவசாய விளை பொருட்களை விற்கவும் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கவும் பல கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்குக் குறுகிய, நீண்ட மற்றும் இதர கடன்களை எளிதில் வழங்குகின்றன.

இதனால் தங்கள் பொருளாதார நிலையைத் திடப்படுத்தியுள்ளார்கள் அவர்கள். கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்டங்களின் கீழ் உள்ள இடத்தில் பதினாறும், ஒருங்கிணைந்த திட்டத்தில் சேராத பழங்குடியினர் வாழும் பகுதியில் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழக அரசு, ஆதி-திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனை மேம்படுத்த மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரிய ஆலோசனைப்படி, இதுபோன்ற பல திட்டங்கள் தீட்டி, இம்மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவே செயல்பட்டு வருகிறது என்பதை யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

# வாழவைக்கும் வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு தனது 84 ஆண்டு காலப் பயனுள்ள சேவையை நிறைவு செய்துள்ளது.

குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்கள் வழங்குவதில் இந்த வங்கி மிக முக்கியமான பணியைச் செய்து மாநிலத்தின் பசுமைப் புரட்சிக்கு குறைவில்லாத சேவை புரிந்து வருகின்றது. மேலும் மாநிலத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை, நூற்பு ஆலைகளின் முன்னேற்றம், கோ-ஆப்டெக்ஸ் உள்ளிட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம், ஆகியவற்றுக்கும் இது, தனது பங்கான நிதியுதவி அளித்து வருகிறது.

பருவகால வேளாண்மை நடவடிக்கைகள், மத்தியகால வேளாண்மைக் கடன்கள், மத்தியகால மாற்றல் கடன்கள், நெசவாளர் கடன்கள், மகசூல் கொதுவைக் கடன்கள் ஆகியவற்றிற்கு, தேசிய வங்கி வழங்கும் நிதியுதவியை வழிமுறைபடுத்துவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உர வாணிபம், பொது வாணிபம், அத்தியாவசியப் பண்ட விநியோகம், மொத்த விலைக்கடைகள், ஊழியர் சங்கங்கள் ஆகிய நோக்கங்களுக்கு ஈடு செய்யக் கூடிய பொருளீட்டுக் கடன் வரம்புகளையும், சர்க்கரை மற்றும் நூற்பு ஆலைகள், பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சொந்த நிதியிலிருந்து வழங்கும் கடன்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்களையும் வழங்கி வருகிறது.

தேசிய வங்கியின் தானியங்கி மறுநிதியுதவித் திட்டத்தின்கீழ், பல்வேறு தேசியத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான பெருமளவிலான நிதியுதவித் திட்டம், சாண எரிவாயு உற்பத்தித் திட்டம் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் வடிவமைக்கும் வேளாண்மை தொடர்பான திட்டங்களுக்கும் வங்கி மறுநிதியுதவி வசதியை நீட்டித்து வருகிறது. அது மட்டுமல்லாமல், மத்தியக் கூட்டுறவு வங்கியின் பொது வங்கியியல் தேவைகளுக்காக, அரசு, நம்பகப் பிணையங்கள் மற்றும் நிலை வைப்பீடுகள் ஆகியவற்றின் பேரில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நடப்புக் கணக்கில் மிகைப் பற்று வரம்புகளையும் அனுமதித்து வருகிறது.

நகர மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்கள், சிறு சாலைப் போக்குவரத்து இயக்குபவர்களுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவியின் கீழ், மத்திய நகரக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மறுநிதியுதவி வழங்கி வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கியின் மறுநிதியுதவியின் கீழ், நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்களின் நடைமுறை மூலதனத்திற்கு உதவ, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மறுநிதியுதவி அளித்து வருகிறது.

தேசிய வங்கியின் மறுநிதியுதவியுடன் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, பண்ணையற்ற பிரிவின்கீழ் கிராமக் கைவினைஞர்கள், சிறு, கிராம, குடிசை மற்றும் சிறிய அளவிலான தொழில்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியளிக்க தேசிய வங்கியின் மறுநிதியுதவியைப் பயன்படுத்தி, தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் ஆகிய தலைமை நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியுதவியளிப்பதற்கென, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நேரடியாக நிதி உதவி அளித்து வருகிறது.

மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை நூற்பு ஆலைகளுக்கு, இவ்வங்கி, தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்து, நேரடித் தவணைக் கடன் வசதிகளை அளித்து வருகிறது.

கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தேசிய வங்கியின் கடன் அங்கீகாரமும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் முன் அனுமதியும் பெற்று, கூட்டிணைப்பு அடிப்படையில் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு ரூ.2.50 கோடி பொருளீட்டுக் கடன் வழங்கியுள்ளது. குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் மீதான வட்டி குறைக்கப்பட்டதன் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடு செய்ய, பாரத ஸ்டேட் வங்கியைத் தலைமையாகக் கொண்ட மாநிலக் கூட்டுறவு வங்கியின் உணவுக் கடன் கூட்டிணைப்பு ஒன்றைத் தேசிய வங்கி அமைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் ஒப்புதலுடன் ரூ.5.00 கோடி வரையிலான உணவுக் கடன் கூட்டிணைப்பில் அக்டோபர் 1988-இல் வங்கி இணைந்துள்ளது.

நுகர்வோர் பொருட்களான தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி,

## பார்த்தோம் படித்தோம்

1.11.90 இதழில், குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. உயர்நீதி மன்றக் கட்டடம் உருவான வரலாறு கட்டுரையும் சிறப்பாக இருந்தது.

—மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

சுவாமிமலைச் சிற்பி திரு. தேவ சேனாபதி அவர்களின் பேட்டிக் கட்டுரை சிறப்பாக இருந்தது. ஒரு நல்ல சிற்பக் கலைஞரின் கைத் திறனை இந்தக் கட்டுரை விளக்கியது

—வி.பி.கே.மூர்த்தி,
பாபநாசம்.

'ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!' கார்ட்டூன் படங்கள் அருமை. தொடருங்கள்.

—மா.செல்வராஜ்,
திருவள்ளூர்.

'சிப்காட்' என்றால் என்ன? என்பதைச் சிப்காட்டின் சீரிய பணிகள் என்னும் கட்டுரை தெளி வாக்கியது.

—எஸ்.திருநாவுக்கரசு,
பெரம்பூர், சென்னை-11.

'மருத்துவ விந்தை' கட்டுரை படித்தேன். அசுர வேகத்தில் வளர்ந்து வரும் இன்றைய மருத்துவ உலகத் தைக் கண்முன் கொண்டு வந்தது. இதுபோன்ற மருத்துவக் கட்டுரை களைத் தொடர்ந்து வெளியிட்டால் நல்லது.

—எஸ்.விவேகானந்தன்,
கும்பகோணம்.

மாணவர்களுக்கு நல்லறிவு புகட்டும் 'மாணவர் பக்கம்' அருமை யாக உள்ளது. பொது அறிவுத் தகவல்களை நிறையத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஸ்ரீமதி,
பேரணாம்பட்டு.

நெல்சன் மண்டேலா பற்றிய செய்தித் தொகுப்பு சிறப்பாக இருந்தது.

—ஏ.கோபால்,
பல்லாவரம்.

'தங்கப் பதக்கம் வென்ற சிறு நீரக நோயியல் துறை' பற்றிய கட்டுரை படித்துப் பெருமிதம் அடைந் தேன். இந்தச் சாதனை, தமிழகத் துக்கே பெருமை தரக்கூடியதாகும்.

—ம.சிவசங்கரி,
சென்னை-40.

நகர், அண்ணா நகர், கிள்ளியூர் இராயபுரம், திருவான்மியூர் கிளை களில் புறக்குடியிருப்பாளர் கணக்கு வசதி அளிப்பதற்கான உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுள்ளது. 22.9.1990 முதல் வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், "மூன்றாவது உலக வங்கி சேமிப்புக் கிடங்கு" திட்டத்தைச் செயல்படுத்தும் முகமை யாக, இவ்வங்கி விளங்குகிறது. இதனால் பயனடையும் நிறுவனங் களின் எண்ணிக்கை 25. இத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட, கட்டப் பட உள்ள சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை 58. இந்த திட்டத் திற்கான மொத்த மதிப்பீடு ரூ.1275.05 இலட்சமாகும். இதில் கடன் பகுதி ரூ.637.05 இலட்சமாகும். சேமிப்புக் கிடங்கு வசதிகளுடன் கூடிய பிரதம வேளாண்மைக் கூட்டுறவு சங்கங் களின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி யுடன் வேளாண்மைக் கூட்டுறவு ஊழியர் பயிற்சி நிறுவனம் ஒன்றை இவ்வங்கி துவக்கியுள்ளது.

வேளாண்மைக் கூட்டுறவு ஊழியர் பயிற்சி நிறுவனம் தற்பொழுது தற் காலிகமாக, அடையாறில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பயிற்சி மையத் திற்கென சென்னை மாதவரத்தில் அடிமனை அண்மையில் வாங்கப் பட்டுள்ளது.

குளிர்சாதனப் பெட்டி போன்ற வற்றை வாங்குவதற்கான கடன் வழங்கும் நுகர்வோர் கடன் திட்டத்தை, இவ்வங்கி, 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் அறிமுகப்படுத்தியது. இக்கடன் வசதி வாடிக்கையாளர் களின் நீண்டகாலத் தேவையை நிறைவு செய்வதாக உள்ளது. மேலும், வணிக வங்கிகளுடன் வைப்பீடுகள் சேகரிப்பதில் ஏற்படும் கடும் போட்டி யினைச் சந்திக்கவும் இக்கடன் வசதி உதவி புரிகிறது. இக்கடன் மீதான நிலுவை 30.6.1990 அன்றுள்ளபடி ரூ.0.60 கோடியாகும்.

மாநில, மத்திய அரசு நிறுவனங்கள் பள்ளிகள், கல்லூரிகள், தனியார், பொதுத்துறை நிறுவனங்களில் பணி புரியும் மாதாந்தரச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவக்கியது. ஒரு ஊழியருக்கு வழங்கப்படும் அதிக பட்சக் கடன் தொகை ரூ.2,000 ஆகும். இந்தக் கடன் 24 தவணை களில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

நகர கூட்டுறவு வங்கிகள், மாநில வரைவோலைத் திட்டத்தில் பங் கெடுத்துக் கொள்ளும் வசதி முதன் முதலில் 1979-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அளிக்கப்பட்டது. மாநிலத் திலுள்ள 133 நகரக் கூட்டுறவு வங்கிகளில், 100 பெரிய நகரக் கூட்டுறவு வங்கிகள் இத்திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றன.

சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் வங்கியியல் வசதிகளை அளிப்பதற்கென சென்னை நகரில் மொத்தம் 38 கிளைகளைத் துவக்கி சேவை புரிந்து வருகிறது. 30.6.1990 அன்றுள்ளபடி கிளைகள் மூலம் 2,59,761 வாடிக்கையாளர் களுக்குச் சேவை புரிந்து வருகிறது.

வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தங்களது சேமிப்புகளை இந்தியா வில் முதலீடு செய்வதற்கு வசதியாக. இவ்வங்கி, தனது அடையாறு, அசோக்

1988-89-இல் ரூ.5.44 கோடி இலாபம் ஈட்டிய வங்கி, 1989-90-ஆம் ஆண்டில் ரூ.10.48 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. நடைமுறை மூல தனத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும், நிதியாதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தியதுமே இந்த இலாபம் அதிகரித்ததற்கான காரணங்களாகும்.

1988-89 ஆம் ஆண்டில் வங்கி 14% ஈவுத் தொகை வழங்கியது. அதே அளவு ஈவுத் தொகையை 1989-90 ஆம் ஆண்டிற்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் வங்கி ஈட்டிய இலாப மானது நாட்டிலுள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஈட்டிய இலாபத்தில் மிக உயர்ந்ததாகும். மிக அதிகபட்சமான ஈவுத் தொகை யும் இந்த வங்கி வழங்கியதே ஆகும்.

# கோவை மாவட்டத்தில்

# பால் வளம்

கோவை மாவட்டத்தில் 1937-ஆம் ஆண்டு கூட்டுறவுப்பால் வழங்கும் ஒன்றியம் தொடங்கப் பட்டது. பின்னர் 1976ஆம் ஆண்டு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஒன்று பதிவு செய்யப் பட்டு செயல்படத் தொடங்கியது. பின் 1979ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் ஒன்றியமும், பால் வழங்கும் ஒன்றியுமும் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு, கோவை மாவட்டக் கூட்டுறவுப்பால் உற்பத்தி யாளர் ஒன்றியமாகச் செயலாற்றி வருகிறது.

1982ஆம் ஆண்டு தேசியப் பால் வள வாரியம், கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைப் 'பால் பெருக்குத் திட்டத்திற்குள்' சேர்த்துக்கொண்டு சலுகைகளை வழங்கியது. அதாவது, 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் பால் பண்ணைக்குப் புதிய கட்டிடங்கள் கட்டவும், கருவிகள், பால் குளிர்வு நிலையங்களிலிருந்து பிரதானப் பால் பண்ணைக்குக் குளிர்விக்கப் பட்ட பாலை எடுத்து வரவும், வேறு மாவட்டங்களிலுள்ள உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் கூட்டுறவு இணையத் திற்கு உபரிப் பாலை அனுப்பட பயன்படும் பால் டேங்கர்கள் மற்றும நகர வினியோகத்திற்குப் பயன்படுப பால் வேன்கள் மற்றும் இதரத் தளவாடங்கள் ஆகியவற்றைட பொருட்களாக தேசீயப் பால்வள வாரியம் வாங்கி, ஒன்றியத்திற்கு வழங்கியது.

**மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தி யாளர் ஒன்றியம்-கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் வழி, பால் உற்பத்தியாளர்களுக்கு ஆற்றும் பணிகளாவன:**

- ★ கிராமங்களில் அமைந்துள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங் களில் சேகரிக்கும் பாலை ஒன்றியம் பால் தடங்கள் அமைத்து லாரி, வேன்களின் மூலம் கோவை பிரதான பால் பண்ணைக்கும், சண்முகபுரம், சுல்தான்பேட்டை, திருப்பூர், அன்னூர் ஆகிய பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும் கொணர்கின்றது.
- ★ நல்ல தரமுள்ள பாலைக் கொள் முதல் செய்யவும், சங்கங்களின் நிர்வாகம், தேவையான பதிவேடு களைப் பராமரிக்க சங்கப் பணி

**அ.மா. இராமன் இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர்
கோயம்புத்தூர் மாவட்டம்

யாளர்களுக்குப் பயிற்சியும், அவ்வப் போது சங்க நடை முறைகளைச் செம்மைப்படுத்த, மேற்பார்வை செய்ய விரிவாக்க உதவியாளர்களை ஒன்றியம் பணியில் அமர்த்தி சங்கங்களுக்கு உதவி செய்கின்றது.

- ★ மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் அமைக்கபட்டு தொடங்கப்படும் கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கட்கு முதலாண்டு ரூ.2,000 நிர்வாக உதவித் தொகையாகவும், இரண்டாம் ஆண்டு ரூ.1,000 நிர்வாக உதவித் தொகையாகவும் வழங்கப்படுகின்றது.
- ★ புதிய கிராமப் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங் கட்கு இலவசமாகப் பால் பரி சோதனைப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் பதிவேடு கள் ஆகியவை ரூ.1,500 மதிப் பிற்கு வழங்கப்படுகின்றன.
- ★ கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கட்கு அங்கத்தினர் கறவையினங்கள் பயனடையும் பொருட்டு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி தகுதி பெற்ற ஒன்றியம் கால்நடை மருத்துவர் களால் 4 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் 231 சங்கங்கட்கு அளிக்கப் படுகிறது. கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை வசதியும் ஒன்றியம் அளிக்கின்றது.
- ★ கிராமப் பால் கூட்டுறவுச் சங்கங்களில் செயற்கை முறைக் கருவூட்டல் திறம்பட நடைபெற, கிராமச் சங்கச் செயலர்களுக்குப் பயிற்சி நிலையங்கள் வழி 35 நாட்கள் பயிற்சி அளிக்கப் படுகின்றது. மேற்படி செயற்கைக் கருவூட்டல் செய்ய தேவையான திரவ நைட்ரஜன் குடுவை, உறை விந்து ஆகியவை ஒன்றியத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.
- ★ கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கால்நடைகளுக்கு வரும் கால் கட்டு வாய்சப்பை நோயைத் தடுக்கத் தடுப்பூசி போடும் திட்டம் அனைத்துக் கிராமங் களிலும் நடத்தப்பெறுகிறது.
- ★ கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் வைத்துள்ள தரிசு நிலங்கள் பயன்படுத்தப் பட 'கிசான் வனங்கள்' திட்டம் அமல்படுத்தப்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,000 மூன்று ஆண்டுகளுக்குப் பிரித்து முறையே ரூ.500, ரூ.250, ரூ.250 ஆக வழங்கப்படுகிறது.
- ★ பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர்கள் மற்றும் முன்னோடி பால் உற்பத்தியாளர்கள் ஆகியோர் குஜராத் மாநிலம் 'ஆனந்த்தில்' கெய்ரா மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை – 'அமுல் பால் பண்ணை'-பார்வையிட்டு அங்குள்ள பல்வேறு பிரிவுகள், சங்கங்கள், சங்க நடைமுறைகள் ஆகியவற்றை அறிந்து வர அனுப்பப்படு கின்றனர்.
- ★ எருமையின அபிவிருத்திக்கெனப்

## மண்டபம் அகதிகள் முகாமில்...

மண்டபம் முகாமில் தங்கியுள்ள அகதிகளின் மருத்துவ வசதிக்காக 20 படுக்கை கொண்ட ஒரு மருத்துவ மனை, இரண்டு மருத்துவ அதிகாரி களின் மேற்பார்வையில் தேவையான செவிலியர்களுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. பெண் மருத்துவ அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுப் பணிபுரிந்து வருகிறார்.

மண்டபம் முகாமில் செயல்பட்டு வரும் தொடக்கப் பள்ளியில் 320 குழந்தைகளே பயின்று வந்தனர். ஆனால் தற்போது கூடுதலாக ஆயிரத் திற்கும் அதிகமாகக் குழந்தைகள் அப்பள்ளியில் பயின்று வருகின் றனர். இக்குழந்தைகளின் கல்வி வசதிக்கென, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் படி, இம்மாவட்டத்திலுள்ள மற்ற பள்ளிகளிலிருந்து 10 ஆசிரியர்கள் இம் முகாமிலுள்ள பள்ளிக்கு மாறுதல் செய்யப்பட்டுப் பணி புரிந்து வருகின்றனர். இக்குழந்தைகள் அனை வருக்கும் பாடப் புத்தகங்களும், நோட்டுகளும் அரசின் செலவில் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது போலவே மேல் நிலைப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் இங்குள்ள பள்ளியில் அனுமதி வேண்டினால், உடனடியாகச் சேர்த்துக்கொள்ள கல்வித்துறை அலுவலர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

15.8.90 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு அர. செல்லமுத்து, இ.ஆ.ப. அவர்கள் மண்டபம் முகாமிற்குச் சென்று அங்குள்ள 2,800 ஆண்களுக்கு வேட்டியும், 2,300 பெண்களுக்குச் சேலைகளும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த 1,190 ஆண் குழந்தை களுக்கும், 1,100 பெண் குழந்தை களுக்கும் துணிமணிகளையும் வழங்கினார். இதற்காக அரசு செல விட்ட தொகை ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் ஆகும்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்**



பாரம்பரியப் பரிசோதனைத் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட 12 கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

★ கறவையினங்களுக்கு நியாயமான விலையில் தரம் வாய்ந்த கால் நடை கெட்டித் தீவனம் வழங்கப் படுகின்றது. பசும்புல் வளர்க்க, பசும்புல் கரணைகள் மற்றும் தீவன விதைகள் சங்க உறுப்பினர் களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகின்றது.

**ஒன்றியத்தின் சாதனைகள்**

1. அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள் 448.
2. பால் கொள்முதல் (தினசரி) சராசரி (1989-90) 1,06,042 லிட்டர்.
3. பால் கொள்முதல் வழித் தடங்கள் 29.
4. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 4.
5. கால்நடை மருத்துவ வசதி பெறும் சங்கங்கள் 231.
6. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி உள்ள சங்கங்கள் 153.
7. மின்னியல் பால் பரிசோதனைக் கருவி வழங்கப்பட்ட சங்கங்கள் 95.
8. ஒன்றியம் பராமரிக்கும் பால் குளிர்வு நிலையங்கள் 4.
9. உள்ளூர் விற்பனை தரப்படுத்தப் பட்ட பால் 72,000 லிட்டர்.
10. ஒன்றியப் பால பதனிடும் ஆலையின் தினசரி கையாளும் திறன் 1,00,000 லிட்டர்.
11. பசும்புல் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 650 ஏக்கர்கள்.
12. மாதிரிப் பால் விளக்கப் பண்ணை 18.
13. மாதிரிப் புல் பண்ணைகள் 3.
14. ஒன்றியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை 356.
15. கடந்த ஆண்டில் ஒன்றியம் ஈட்டிய லாபம் (தோராயமாக) 2.82 இலட்சம்.

**ஒன்றியத்தின் வருங்காலச் சிறப்புத் திட்டங்கள்:**

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் மூலம் 1993-94-க்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்:

1. பால் கொள்முதல் (தினசரி) சராசரி 1,50,000 லிட்டர், 2. பால் விற்பனை (தினசரி) சராசரி 1,00,000 லிட்டர், 3. மொத்தப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் 550, 4. பயனடைய உள்ள மொத்த உறுப்பினர்கள் 85,000, 5. நட மாடும் கால்நடை மருத்துவப் பிரி வுகள் அவசர காலச் சிகிச்சைப் பணிகள் 8, 6. கால்நடை மருத்துவ வசதி பெற உள்ள சங்கங்கள் 325, 7. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி பெற உள்ள சங்கங்கள் 300, 8. விரிவுபடுத்தப்படவுள்ள பால் குளிர்வு நிலையங்கள் (அ) ஒன் றியத்தின் கீழ் இயங்கும் சண்முக புரம் பால் குளிர்வு நிலையம் தற் போதுள்ள தினசரி 10,000 லிட். கையாளும் திறனிலிருந்து 50,000 லிட். கையாளும் திறனுள்ளதாகவும், (ஆ) சுல்தான்பேட்டையில் அமைந் துள்ள தினசரி 10,000 லிட். கையாளும் திறனுள்ள பால் குளிர்வு நிலையம் 50,000 லிட். கையாளும் திறனுள்ளதாக விரிவுபடுத்தப் படும். 9. திட்ட முடிவுக் காலத்தில் வேலை வாய்ப்புப் பெறும் மொத்த ஊழியர்கள் சுமார் 500 பேர்.

மேற்கண்ட திட்டங்களுக்காக ரூ.2,75,66,000 செலவிடத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப் பிடப்பட்டுள்ள செலவினங்கள் தேசிய பால்வள வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்திலேயே மிக நல்ல முறையில் சேவை புரியும் கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற் பத்தியாளர்கள் ஒன்றியம், கடந்த 1989-90-ஆம் ஆண்டுக்கான பாராட்டுக் கேடயம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விழியற்றோர் வாழ்வில் ஒளியேற்றும் முதல்வர்

''தமிழக முதல்வர் கலைஞரை, நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டோம்'' என்று பார்வையற்ற இளைஞரை மணந்து அதற்காக ரூ.6 ஆயிரம் நிதி உதவி பெற்ற இளம் பெண் கூறினார்.

இராமநாதபுரம் மாவட்டம் முது குளத்தூர் தாலுகா புளிகால் கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண் முத்தம்மா (28); இவர் அதே ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் (30) என்ற பார்வையற்ற இளைஞரைத் திருமணம் செய்து கொண்டார்.

இத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

ஆறுமுகமும் முத்தம்மாவும் தமிழ் நாட்டின் ஒரு மூலையான முது குளத்தூர் வட்டத்தில், மிகமிகச் சாதாரண நிலையில் வாழ்ந்து வருகின்றனர். விழியற்றோர் வாழ்விலும் ஏதாவதொரு வழியில் ஒளி யேற்ற வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த விழியுள்ளோர் விழியற்றோரை மணந்தால் ரூ.6 ஆயிரம் என்ற அரசு உதவித்திட்டத்தின் கீழ் இவர்களுக்கு ரூ.6 ஆயிரம் நிதி உதவியினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அர.செல்லமுத்து அவர்கள் வழங்கினார்.

இத்தம்பதியினர் கூறும்போது- ''முதல்வர் கலைஞர் அவர்களின் கருணை உள்ளத்தினால் எங்களைப் போன்றவர்களுக்கு இத்தகைய உதவி கிடைத்துள்ளது. கலைஞர் அவர்களை எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டோம். இத்திட்டத்தின் மூலம் எங்களைப்போல் இன்னும் பலர் பயனடையப்போகிறார்கள் என்பதை எண்ணும்போது அளவுகடந்த மகிழ்ச்சி அடைகிறோம். மேலும் இத்திட்டத்தினால் எத்தனையோ பார்வையிழந்த ஆண்களுக்கும், பார்வையிழந்த பெண்களுக்கும் நிச்சயம் அவர்கள் வாழ்வு இருண்டுவிடாது மற்றவர்களைப்போல் உலகில் வாழ்ந்திட ஒரு சந்தர்ப்பம்-ஒளி கிடைத்திடும் என்பதும் உண்மை'' என்றார்.

இதுகுறித்து திரு. ஆறுமுகம் கூறும்போது ''மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் எனக்குக் கொடுக்கப்பட்ட சேமிப்புப் பத்திரம் 5 ஆண்டுகளில் 11 ஆயிரம் ஆகும்; அதை மீண்டும் சிறுசேமிப்பில் முதலீடு செய்தால், 22 ஆயிரம் ஆகும். ஆக நானும் சமூகத்தில் எனக்கென்று ஒரு தகுதியை இதன் மூலம் பெற்றிட முடியும். இது போன்ற திட்டங்களை அறிவித்த தன்மூலம்— பார்வையற்றோர் பார்வையுள்ளோரை மணந்திட ஊக்குவிப்பதோடு, அவர்களுக்கும் சமூகத்தில் ஒரு இடத்தினைப் பெற்றுத்தந்திட தொலை நோக்குடன் செயல்படும் நமது தமிழக முதல்வர் அவர்களை எங்களைப்போல் எத்தனையோ உள்ளங்கள் வாழ்த்தும்''.

''இந்த நிதியினை இவ்வளவு விரைவில் கிடைத்திட உதவிய மாவட்ட ஆட்சித்தலைவர்க்கும் மற்றும் உள்ள அதிகாரிகளுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று நெகிழ்வுடன் கூறினார்.

**வி.ஜி. பிரசாத்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்.**



மாணவர் பக்கம்

# சுற்றுச் சூழல்

அழகு பழனிச்சாமி

கரங்கள் குவித்தே நில மகளின்
மண்ணைத் தொழுதிடுவோம்! —விரிந்த
காடு, கழனி, நிலத்தை யெல்லாம்
கடிதே உழுதிடுவோம்!
உரங்க ளோடு ஊட்டச் சத்தும்
உவந்தே வைத்திடுவோம்-பயிர்கள்
ஒங்கி உயர்ந்தே தழைத்துச் செழிக்கத்
தண்ணீர் பாய்ச்சிடுவோம்!

மரங்க ளோடு செடிகள் வளர
நாளும் உழைத்திடுவோம்-மணக்கும்
மலர்கள் பறித்துக் கனிகள் கொய்தே
மகிழ்ந்து திளைத்திடுவோம்!
தரணி எங்கும் சுற்றுச் சூழல்
தழைக்கச் செய்திடுவோம்-உழைப்பைத்
தருமச் செயலாய் மனத்தில் எண்ணித்
தானம் செய்திடுவோம்!

பச்சை மரங்கள், பசுமைத் தழைகள்
பரந்தே செழித்திடிலோ-உலகில்
பசியின் கொடுமை; நோயின் தீமை
பஞ்சாய்ப் பறந்திடுமே!
சுச்சித மாகச் சுற்றுச் சூழல்
தூய்மை பெற்றிடுமே-நாமும்
காலம் எல்லாம் நலமாய் வாழும்
பேறும் பெறுவோமே!

# 'பைபிள்' பிறந்தது!

பண்டைக் காலத்திலே நாகரிகம் பெற்று வாழ்ந்த மக்கள் எகிப்தியர்கள். பேபரைஸை முதன்முதலில் பயன்படுத்திய வர்கள் அவர்களே. பேபரைஸ் (Papyrus) என்ற சொல்தான் இப்போது 'பேப்பர்' என்று வழங்கப்படுகிறது. பேபரைஸ் என்பது எகிப்து தேசத்துச் சதுப்பு நிலங் களிலும், தண்ணீர்த் தேக்கமுள்ள இடங் களிலும் வளர்ந்து வந்த ஒருவகைக் கோரைச் செடி. இந்தக் கோரை பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளரும். இக்கோரைப் புற்களை அறுத்து, பட் டையை உரித்து ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி, வெயிலில் வைத்து உலர்த்திப் பயன்படுத்தினர். பின்னர்ப் பேபரைஸ் என்னும் அக்கோரையின் பெயரே நிலைத்து நின்றது.

கிரேக்க தேசத்தார் பேபரைஸ் சுருள் களைப் பிப்லியன் (Biblion) என்று கிரேக்க மொழியில் வழங்கினர். இச் சொல்லுக்குச் சுவடி (புத்தகம்) என்பது பொருள். உரோமர்கள் தமது இலத்தீன் மொழியில் பைபிள் (Bible) என்று வழங் கினர். பைபிள் என்றாலும் சுவடி என்பது தான் பொருள். எனவே, நூல் அல்லது சுவடி என்னும் பொருள் உடைய பைபிள் என்னும் சொல், முற்காலத்தில் பொதுவாக - வழங்கப்பட்டு, பின்னர் கிறிஸ்துவ வேத நூலுக்குச் சிறப்புப் பெயராயிற்று.

—டாக்டர் இராம. சுப்பிரமணியன், எழுதிய 'நூலகம்' என்னும் நூலிலிருந்து

# கரப்பான் பூச்சிகளால் அலர்ஜி ஏற்படும்

கரப்பான் பூச்சிகள். இவை பார்த்தாலே அருவருப்பை உண்டாக்குவது மட்டுமல்ல; 'அலர்ஜி' எனப்படும் ஒவ்வாமை நோயையும் ஏற்படுத்தக் கூடியவை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அமெரிக்காவில் மட்டும் சுமார் ஒன்றரை கோடிப் பேருக்குக் கரப்பான் பூச்சிகளால் ஒவ் வாமை ஏற்படுகிறது என்று அமெரிக்கத் தேசிய மருத்துவக் கழகத்தில் நடத்தப்பட்டுள்ள பல்வேறு ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கரப்பான் பூச்சி 'அலர்ஜி' உள்ளவர்களுக்கு அவர்களது உணர்வுத்திறன்களுக்குத் தக்கபடி பாதிப்புகள் உண்டாகின்றன. மூக்கடைப்பு, ஜலதோஷம், தோலில் அரிப்பு போன்ற சாதாரண விளைவுகள் பலருக்கு ஏற்படலாம். மிகவும் நுட்ப மான உணர்வுகள் உள்ளவர்களுக்கு மூச்சடைப்பு கூடத் தோன்றக்கூடும். அதனால் ஏற்படும் அதிர்ச் சியின் விளைவாகவே சிலர் இறந்துபோகவும் நேரிடலாம்.

தாய்லாந்து, தாய்வான் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட இதுபோன்ற ஆய்வுகளிலும் இதே போன்ற முடிவுகளே தெரியவந்துள்ளன.

முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கரப்பான் அலர்ஜி அதிகமாக இருப்பதாக மற் றோர் ஆய்வு கூறுகிறது. நீண்டகாலம் கரப்பான் களுடன் உறவாடியதன் விளைவாக இது இருக்க லாம் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. வீட்டி லேயே அதிக நேரத்தைக் கழிக்கும் பெண்களுக்கு, இந்த அலர்ஜி இன்னும் அதிகமாக இருக்குமாம்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

**மாணவர் பக்கம்**

# அறிவியல் மேதை

# எடிசன்



— சி. பிரகாஷ்

**ஆ**யிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு உரிமம் பெற்றவர் உலகப் புகழ்பெற்ற தாமஸ் ஆல்வா எடிசன். அவர் அமெரிக்காவிலுள்ள ஓஹியோ மாநிலத்தில், மிலன் என்னும் கிராமத்தில் 1847-ஆம் ஆண்டில் பிறந்தார்.

பள்ளியில் அதிகக் கல்வியறிவு பெறவில்லையென்றாலும், தன் தாயாரிடம் நிறையக் கற்றுத் தேர்ந்தார். சிறுவயது முதல், கருவிகள் சம்பந்தப்பட்ட பொருள்களின் மீதே அதிக கவனமும், ஈடுபாடும் கொண்டிருந்தார்.

தன்னுடைய பன்னிரெண்டாம் வயதில் அப்பாவின் தோட்டத்தில் காய் கறித் தோட்டங்கள் அமைத்து, அவற்றிலிருந்து கிடைப்பதை விற்பனையும் செய்து வந்தார். இந்த வருவாயில், தன் பெற்றோர்களைக் கவனித்துக் கொண்டதுடன் பள்ளிப் படிப்பிற்குத் தேவையான பாடப் புத்தகங்களையும், மற்றும் தன் ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாத கருவிகளையும் வாங்கி வந்தார். தன்னுடைய வியாபாரத்தை மேலும்விரிவாக்கம்செய்ய விரும்பினார். எனவே அருகிலுள்ள டெட்ராய்டிற்கும் சென்று வாடிக்கை பிடித்தார். ரொம்பத் தொலைவில் இல்லாவிட்டாலும், புகை வண்டியில் சிறிது தூரம் பயணம் செய்ய வேண்டும். பயணம் செய்யும் நேரத்தை வீணாக்காமல் எடிசன் தான் செல்லும் வண்டியில் சிறிய சோதனைகளையும், மேலும் செய்தித்தாள்கள் விற்பனையையும் செய்து வந்தார்.

செய்தித்தாள் விற்பனையில் வெற்றி ஏற்படவே தானாகவே ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும் என்று எண்ணினார். ''வீக்லி ஹெரால்ட்'' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அதன்- ஆசிரியர், செய்தியாளர், பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர் போன்ற எல்லாப் பொறுப்புக்களையும் அவரே ஏற்றார்.

பின்பு 1869-ஆம் ஆண்டு நியூயார்க் நகரத்திற்குக் குடிபெயர்ந்தார். அங்குள்ள ஒரு ''கோல்ட் மற்றும் ஸ்டாக்'' தந்தி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கிருந்து கொண்டே தந்தி முறைக்குத் தேவையான சில புதிய கண்டுபிடிப்புகளையும் செய்தார். மேலும் தன் கண்டுபிடிப்புகளில் ஒன்றை நாற்பது ஆயிரம் பவுண்டிற்கும் விற்றார்.

ஒரு சிறிய கருவிகள் ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவினார். அதாவது இன்றைய நிலையில் அதை ஓர் ஆராய்ச்சிக்கூடம் என்றே சொல்லலாம். இந்த ஆய்வுக் கூடத்திலும் தந்தி தொடர்பான கண்டுபிடிப்பு முயற்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. அதன் விளைவாக 1875-ஆம் ஆண்டு, ஒரே கம்பியில் ஒரே நேரத்தில் நான்கு தந்திச் செய்திகள் அனுப்பும் நுட்பங்களைக் கண்டுபிடித்தார்.

தன்னுடைய கூடத்தை ஒரு மத்திய ஆராய்ச்சிக் கூடமாக ஆக்க வேண்டி, 1876-ஆம் ஆண்டு நியூஜெர்சியிலுள்ள மென்லோ தோட்டத்திற்கு இடம் பெயர்ந்தார். மேலும் இந்த ஆண்டில்தான் தொலைபேசியில் சில புதிய மாறுதல்களையும் கண்டுபிடித்து அதை மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட ஆக்கினார்.

எடிசனின் எண்ணம் எப்போதும் ஏதாவதொரு புதிய கருவியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஒரு தூண்டுதலாகவே இருந்தது. ஆகவே அவர் சிறுவயது முதல் தான் கண்டுபிடிக்கும் கருவிகளின் மீதே கவனம் செலுத்தினாரேயன்றி, அந்தக் கருவியில் என்ன விதிகள், கொள்கைகள் அடங்கியிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்யவில்லை. இது அவரிடத்திலிருந்த ஒரு குறையென்றே கூறலாம். எடிசன் தன்னுடைய கண்டுபிடிப்புகளை மக்களின் கவனத்திற்கும், பார்வைக்கும் முதலில் கொண்டுவர வேண்டுமென்று எண்ணினார். அதில் ஒன்றுதான் மின்சார விளக்கு. ஆனால் எடிசனின் விதியைக் கொண்டு மின்சார விளக்கு தயாரிப்பது என்பது இயலாது என்று விஞ்ஞானிகள் கருதினர். ஆயினும் எடிசன் தன்னுடைய விடா முயற்சியின் காரணமாக - சுமார் 1600 வெவ்வேறு வகையான பொருட்களை விளக்கிலுள்ள மின்சார ''இழை''க்குப் பயன்படுத்தி ஒரு வழியாக விளக்கை வடிவமைத்தார்.

1879-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி அவர் வடிவமைத்த மின்சார விளக்கு 40 மணிநேரம் எரிந்தது. பின்பு 1880-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி மெனிலோ பூங்காவில் பொதுமக்களின் பார்வைக்கெனப் பெரியதொரு ஏற்பாடும் செய்திருந்தார். இதன் விளைவாகத் தான் ''எடிசன் மின்சார விளக்கு நிறுவனம்'' பிறந்தது.

இன்று நாம் காணும் திரைப்படக் கருவிக்கும் வித்திட்டவரும் எடிசன்தான். 1887-ஆம் ஆண்டு ''கைனெடோஸ்கோப்'' என்ற திரைப்படக் கருவியைக் கண்டுபிடித்தார்.

எடிசனின் கண்டுபிடிப்புகளை வரிசைப் படுத்துவதென்றால், அவ்வளவு எளிதான பணி அல்ல. தாதுப் பொருள்களின் மின் காந்தப் பிரிப்பகத்திலிருந்து வாடகைக்குக் கார் அளவுமானி (Taximeter) வரை அவருடைய கண்டு பிடிப்புகள் நீண்டு கொண்டே போகும். இவரது கண்டு பிடிப்புகளின் காரணமாக நியூஜெர்சியில் கருவிகள் தயாரிக்கும் ஒரு பெரிய தொழிற்சாலை அரங்கமே உருவாயிற்று.

**புத்தகசாலை வீட்டிலும் வேண்டும்**

**நமது வீடுகளில் கூடம், பாதுகாப்பான அறை - படுக்கை அறை - சமையலறை - பூஜை அறை - இவை எல்லாம் இருக்கும். புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை - தேடிப் பாருங்கள், மிகமிகக் கஷ்டம். பல வீடுகளிலே தூண்களின் மீது, சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால் புத்தக சாலை உண்டா?**

**—பேரறிஞர் அண்ணா**

# நூல் நயம்

### தென்குமரி தந்த திருவள்ளுவர்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ். பத்மநாபன்,

**வெளியிட்டோர்:**

குமரன் பதிப்பகம்,
20, ஸ்டேட் பாங்க் காலனி,
நாகர்கோவில்-629 001.

விலை:ரூ.10 பக்கம்: 80

இந்நூல் ஒரு அரிய ஆய்வுப் படைப்பு. திருவள்ளுவப் பெருந்தகையின் அருமை பெருமைகளை நூல் முழுவதும் அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். தக்க மேற்கோள் களும் கூறப்பட்டுள்ளன. ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

### ஊரெங்கும் மனிதர்கள்

**ஆசிரியர்:** பா. இராமமூர்த்தி

**வெளியிட்டோர்:**

திலகம் வெளியீடுகள்
5-ஏ, வெங்கடேச செளத்ரி தெரு,
தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:158 விலை:ரூ.20

ஒரு படைப்பு வெற்றி பெற கருப் பொருள், தெளிந்த நோக்கு, சொல்லும் இயல்பு, உண்மை நிகழ்ச்சி, வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனுபவ முத்திரைகள் மிகத் தேவை என்பதை உணர்ந்து நூலாசிரியர் இந்த அரிய நூலை·ப்படைத்துள்ளார்.இந் நூலில் மனித-வாழ்வு என்னும் நாடக மேடையை மிக அற்புதமாக அமைத்து, அந்த மேடையில் ஆடுகின்ற மனிதர் களாகப் படிப்போரை ஆக்கி உள்ளது பாராட்டுக்குரியதாகும்.

— பொன். சுப்பையா

> **ஒரு புத்தகம் என்பது மாய விளக்காகும். மனிதனுக்கு அவனது வாழ்க்கையின் மிக நெடிய மற்றும் இருண்ட பாதை ஊடே வெளிச்சத்தைக் கொடுப்பதாகும்.**
>
> -அன்ட்ரேஜ் உபிட்ஜ்

### டாக்டர் தயாவின் சிறுகதைகள்

**ஆசிரியர்:** அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியிட்டோர்:**

கிறிஸ்தவ இலக்கியச்சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.25 பக்கம்:266

''சமுதாயத்தில் தாம் கண்ட அபூர்வக் காட்சிகளையும், செவியேற்ற அதிசயச் செய்திகளையும் கருவாக வைத்து இக் கதைகளை வடித்திருக்கிறார்'' என்று இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய முது பெரும் எழுத்தாளர் நாரண. துரைக் கண்ணன் அவர்கள் கூறியிருப்பது முற்றிலும் பொருந்தும்.

இந்நூலில் 31 சிறுகதைகள் உள்ளன. நூலாசிரியர் பல்வேறு புனைபெயர்களில் கடந்த 40 ஆண்டுகளாக எழுதிய சிறு கதைகளின் தொகுப்பே இந்நூல். பொன்னி, சிரஞ்சீவி, இமயம், காதல், பிரசண்ட விகடன், முல்லை முதலான அக்கால இதழ்களில் வெளிவந்த அரிய படைப்புகள் இவை.

முதல் கதை 'மஞ்சள் கயிறு' முகத்துக்குப் பொட்டு வைத்தாற்போன்று முத்தாய்ப் பாக விளங்குகிறது. புனிதமான காதலில் இரு உள்ளங்களைப் பிரதிபலிப்பதுதான் 'மனித தெய்வம்' என்னும் சிறுகதை. ஏழையின் எளிமையான, இனிமையான, உண்மைக்காதலை வெளிப்படுத்துகிறது 'ஏழையின் காதல்' என்னும் கிராமத்துக் கதை.

நகைச்சுவை இழைந்தோடும் இவரது சிறுகதைகளில் மனிதர்களின் மனப் போக்கு வெகு தத்ரூபமாகச் சித்திரிக்கப் படுகிறது. நாளும் நாம் சந்திக்கும் பல மனிதர்கள் இவரது கதைகளிலே நடமாடு கிறார்கள். கடிகார மனிதர், சமூக நாடகம், அவருக்கு வந்த வாழ்வு ஆகிய கதைகள். நல்லாசிரியர் ஒருவரின் வாழ்வைப் பல கோணங்களில் படம் பிடிக்கின்றது 'சில பார்வைகளும் ஒரு நோக்கும்' என்னும் சிறுகதை.

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி வேற்றுமைகளைச் சாடுகிறது 'இன்ப ரோஜா'. இதேபோல, பெண் உள்ளத்தைச் சித்திரிக்கும் கதைதான் 'இக்கரைப் பச்சை'. இப்படி இந்நூலில் இடம் பெற்றுள்ள பல கதைகள் சமுதாயப் பிரச்சினைகளை அலசுகின்றன.

தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, ஆசிரியர் கதையை நடத்திச் செல்லும் பாங்கு பாராட்டுக்குரியது. ஆழமான கருத்து, அழகிய உவமை, வார்த்தை ஜாலங்கள் இல்லாத வளமான நடை கதைகளுக்கு வலுவூட்டுகின்றன.

காலத்தின் கண்ணாடியாக விளங்கும் இக்கதைகள், சமூக நீதியைப் போதிக் கின்றன. சிறுகதை உலகில் சிறப்பிடம் பெற்றுள்ள இந்நூலாசிரியரின் சிறுகதைகள் எல்லாமே சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

— பி.வி. கிரி

### ஆற்றல்மிகு அணுசக்தி

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்

**வெளியிட்டோர்:**

ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
22, 6வது தெரு, பக்தவத்சலம் நகர்,
பழவந்தாங்கல், சென்னை-600 114.

பக்கம்:88 விலை:ரூ.10

அணுசக்தி என்பது என்ன? அணு மின் நிலையங்களில் மின்சாரம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அணுமின் நிலை யங்களால் விபத்துகள் எப்படியெல்லாம் நேரக்கூடும்? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? அமெரிக்காவிலிருந்து செர் நோபிள் வரை ஆபத்துகள் நேர அடிப் படைக் காரணங்கள் யாவை?... என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் ஆன விடைகளின் தொகுப்பாக விளங்குகிறது இந்த நூல்.

சுவீடன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அணுமின் நிலையங்கள் அடி யோடு மூடப்பட்டு விட்டாலும் மின் தட்டுப்பாடில்லை; ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் அணுமின் திட்டம் கைவிடப்பட்டிருந்தும் மின்சாரத் தன் னிறைவு உள்ளது. கல்பாக்கம் அணுமின் நிலையம் எப்படி அமைந்திருக்கிறது? கூடங்குளம் நிலையம் எவ்வாறு அமைய விருக்கிறது என்றெல்லாம் மிகத் தெளி வான புள்ளி விவரங்களோடு எழுதி யிருக்கிறார் ஆசிரியர்.

மின் அணுவியலில் 200-க்கும் குறைவான தொழிற்சாலைகளே 1976 வரை ஈடுபட்டிருந்தன என்ற விவரம் தரப்படுகிறது. அதன் பின் உருவான அவ்வகைத் தொழில்களின் விவரங்களையும் தொகுத்தளித்திருக்கலாம்.

அறிவியலில் ஆர்வமுள்ளோருக்கு இந்த நூல் மிகவும் உதவக் கூடும்.

—பி.எல்.ஆர்.

> **மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக் கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தக மும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனதை உருவாக்க உதவுகின்றன.**
>
> —பேரறிஞர் அண்ணா

# தொழில் தொடங்க முனைவோருக்குத் தனிச் சலுகைகள்

## முதல்வர் கலைஞர்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 107 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாகத் தமிழகத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இப்படிப் பட்ட பின்தங்கிய பகுதிகளை மத்திய அரசு தங்களுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு, அங்கே தொழில்கள் வளர உதவி செய்வதுண்டு. ஆனால், நாங்கள் 1989-லே பொறுப்பேற்றுக் கொண்டபோது, அப்படிப்பட்ட நிலை எடுக்க இயலாது என்று மத்திய அரசு அறிவித்துவிடவே, நாங்கள் உடனடியாக 107 பகுதிகளைத் தமிழகம் முழுதும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித் தோம். அப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகச் சேர்ந்திருந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனைப் பகுதிகள் அறிவிக்கப்பட்டன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 19 பகுதிகள் – ஏனென்றால் தஞ்சை மாவட்டம் தொழில் வளத்தைக் காணாத மாவட்டம் – அங்கே வேளாண்மைத் தொழில்தான் முக்கியத் தொழில், சிறந்த தொழில் - அனைவரும் ஆர்வத்தொடு ஈடுபடுகின்ற தொழில், ஓர் ஆறுமாதம் வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்டுவிட்டு, ஆறுமாத காலம் ஓய்வெடுத்துக் கொள்கிறவர்கள் தஞ்சை மாவட்டத்திலே நிரம்ப உண்டு. எனவேதான், அந்த ஆறுமாத காலம் தொழில்துறையிலே ஈடுபட வேண்டும் என்ற காரணத்துக்காகத் தஞ்சை மாவட்டத்திலே 19 இடங்களைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித் தோம்; அதே நேரத்திலே, தமிழ் நாட்டிலேயே தஞ்சைக்கு அடுத்தபடி இராமநாதபுரம் மாவட்டத் திலேதான் 12 இடங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

> ''தொழில்துறையில் மிகவும் பிற் படுத்தப்பட்ட பகுதிகள், பிற்படுத்தப் பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து, அங்கெல்லாம் தொழில் தொடங்குகிறவர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது.''
>
> — முதல்வர் கலைஞர்

காமராசர் மாவட்டம் ஏற்கனவே ஓரளவு தொழில்துறையிலே வளர்ந்திருக்கின்ற காரணத்தால்- அங்கே 'திருச்சுழி' என்கின்ற ஒரு பகுதியும், பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்தில் திருப்பத்தூர், தேவகோட்டை, இளையான்குடி, சிவகங்கை, காரைக்குடி, ஆகிய இடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், இராமநாதபுரம், கமுதி, திருவாடானை, பரமக் குடி, இராமேசுவரம் ஆகிய இந்தப்பன்னிரண்டு பகுதிகள் இந்த மொத்த முகவை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 107 பகுதிகள் பின்தங்கிய பகுதி களாக அறிவிக்கப்பட்டும்கூட நான் எதிர்பார்த்த அளவிற்குத் தொழில் முனைவர்கள் தொழில் களைத் தொடங்க முன்வராத காரணத்தால், அதையும் ஓர் ஆய்வு செய்தோம்.

ஆய்வு செய்து, ஏன் இந்த இடங்களிலெல்லாம் தொழில் முனைவோர்கள் ஊக்கத்தோடு வர வில்லை என்பதைக் கண்டறிந்து அந்த 107 இடங்களில் 31 இடத்தை மிகவும் பின்தங்கிய இடமாகத் தேர்ந்தெடுத்தோம். எப்படிப் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற இரண்டு பிரிவுகள் தமிழ்நாட்டிலே மாத்திரம்தான் இருக்கின்றனவோ, அதைப்போலத் தொழில்துறை யிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள், பிற் படுத்தப்பட்ட பகுதிகள் என்று இருகூறாகப் பிரித்து அங்கெல்லாம் தொழில் தொடங்குகிற வர்களுக்கு உரிய சலுகைகளை அளிக்க இந்த அரசு முன்வந்தது. அந்தச் சலுகைகளை நான் உங்களுக்குச் சொல்லும்போது, இங்கே தொழில் தொடங்க முயற்சிக்கின்றவர்களுக்கு - விருப்பமுள்ளவர் களுக்கு அது தேவையாக இருக்கும் என்ற காரணத் தால் ஒன்று இரண்டு மாத்திரம் உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக அறிவிக்கப்பட்டுள்ள 107 வட்டங் களில் தொடங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15

இலட்சம் வழங்கப்படும். 'சிப்காட்' தொழில் வளாகங்களிலும் மற்றும் தொழில் மையங்களிலும் தொடங்கப்படுகிற நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாகப் பதினைந்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.20 இலட்சம் வழங்கப்படும்.

நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே தொடங்கினாலும் சிறப்பு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

மின்னணு மற்றும் தோல் பொருள்களுக்குச் சிறப்பு மானிய உதவி, முன்னோடித் தொழில்களுக்கு மானிய உதவி, வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம், ஜெனரேட்டர்கள் வாங்குவதற்குக் கடனுதவி, ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கு மானிய உதவி, சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கு மானிய உதவி, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களுக்கு மானிய உதவி, முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்கு, மின்சாரக் கட்டணத்தில் தள்ளுபடி என்பதாகப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன.

''நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே தொடங்கினாலும் சிறப்பு மானியமாகப் பத்து விழுக்காடு அல்லது உச்ச வரம்பாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.''

— முதல்வர் கலைஞர்

1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நாங்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் 'டிட்கோ' கூட்டு முயற்சியில் இதுவரை மொத்தம் 11 தொழிற்சாலைகள் 211 கோடி ரூபாய் முதலீட்டிலும், தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் முயற்சியில் 3 தொழிற்சாலைகள் ரூ.8 கோடி முதலீட்டிலும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் ஊக்கமளிப்புடன் 5 தொழிற்சாலைகள் ரூ.18 கோடி முதலீட்டிலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறையினரால் ஒரு தொழிற்சாலை 5 கோடி ரூபாய் முதலீட்டிலும், சிறு தொழில் துறையினரால் ஒரு தொழிற்சாலை 1.5 கோடி ரூபாய் முதலீட்டிலும் மொத்தம் கழக ஆட்சி வந்த இந்த 22 மாதங்களில் 24 பெரிய தொழிற்சாலைகள் 296 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பட்டியலில் இந்தப் பின்தங்கிய பகுதியும் சேர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மிகப் பெருந்தொழில்களாக 'நாப்தா கிராக்கர்' தொழிற்சாலைக்குத் தேசிய முன்னணி அரசு இருந்த கால கட்டத்திலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.



''வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும்; உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும்; உடல் உள்ளம் இரண்டிலும் உள்ள நோய்தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும்.''

— அறிஞர் அண்ணா

அதுபோலவே 1300 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட ஆரோமேட்டிக் தொழிற்சாலைக்கும் தேசிய முன்னணி அரசு இருந்த காலத்திலே எல்லா விதமான சாங்ஷன்களும் முடிவுற்று அனுமதி வர இருந்த தறுவாயில் அரசு மாறி இருக்கிறது. ஆனால் புதியதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அரசு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலே தொழில் வளர்ந்தாலும் சரி என்ற நோக்கத்தோடு ஆரோமேட்டிக் தொழிற்சாலை, நாப்தா கிராக்கர் தொழிற்சாலை தமிழகத்திற்குத் தரப்பட்ட தொழிற்சாலைகள் இரண்டும் இணைந்து ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவிலுள்ள தொழிற்சாலைகள் - அவைகளை அனுமதிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்- நம்புகின்றேன்.

அதுமாத்திரமல்ல, பம்பாயிலிருந்து 'காஸ் பைப் லைன்' ஒன்று கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய இந்த மாநிலங்களுக்கெல்லாம் கூட உதவக்கூடிய அளவிற்கு வரவேண்டும் என்ற ஒரு கருத்தை நான் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது தெரிவித்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்பட்டு - அது இப்போது ஆய்விலே இருக்கிறது.

அந்தப் பைப் லைன் தென்னகத்திற்கு வரும். குறிப்பாகத் தமிழகத்திற்கு வரும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

(27.11.90 அன்று, கீழக்கரையில் நடைபெற்ற பின்தங்கிய பகுதிகள் தொழிற்கல்வி-தொழில் வளர்ச்சி மாநாட்டில் பேசியது).

### நியாய விலைக்கடைகளில் அரிசி விலை குறைப்பு

★ முன்பு நியாய விலைக்கடைகளில் வழங்கப்பட்டு வந்த அரிசி மோட்டா ரகம் ரூ.2.00-க்கும், சன்னரக அரிசி ரூ.2.75-க்கும், மிகச் சன்னரக அரிசி ரூ.3.75-க்கும் விற்கப்பட்டது. டிசம்பர் 1-ஆம் தேதி முதல் மோட்டா ரகம் ரூ.2.00-க்கும் சன்னரகமும் மிகச் சன்னரகமும் சேர்த்து விலை குறைக்கப்பட்டு, இரண்டு ரகமும் ரூ.2.50-க்கும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



# பாவேந்தர் கவிதைகள் நாட்டுடைமை ஆகின்றன!

## முதல்வர் கலைஞர் அறிவிப்பு

**பு**ரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகிறது.

நூற்றாண்டு விழாத் தொடக்கத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர்-முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது போலவே, புரட்சிக் கவிஞர் அவர்களின் எழுத்தோவியங்கள் நாட்டுடைமையாகின்றன. இதற்காகப் புரட்சிக் கவிஞர் அவர்களின் குடும்பத்தாருக்கு அரசு 8 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்குகிறது.

இதுபற்றித் தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு விவரம் வருமாறு:

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நிகழ்த்தி வரும் தமிழக அரசு, பாவேந்தரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தின் அடிப்படையில் பாவேந்தர் அவர்களின் மகன் திரு மன்னர்மன்னன், மகள்கள் திருமதி. சரசுவதி, திருமதி. வசந்தா ஆகியோரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2 இலட்சமும், மறைந்த திருமதி. இரமணி அம்மையார் அவர்களின் பிள்ளைகள் அனைவர்க்கும் ரூ.2 இலட்சமும் பரிவுத் தொகையாகத் தந்து சிறப்பிப்பது எனவும் அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை உரிமை பெற்றுப் பதிப்பித்து வந்த புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம், சென்னை பாரி நிலையம் ஆகிய பதிப்பகங்களும், ஒபபந்த அடிப்படையில் நூல்களை வெளியிட்டு வந்த சென்னை பூம்புகார் நிலையமும் வைத்துள்ள பாவேந்தர் நூல்கள் வெளியிடும் உரிமைகளைத் தமிழக அரசு பெறுகிறது.

**5-12-90** முதல் பாவேந்தரின் நூல்கள் அரசிற்கு உரிமையுடையவை ஆகின்றன. *1.11.1991* முதல் இந்நூல்கள் அனைத்தும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் பொதுவுரிமை ஆகின்றன.

இதனை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பாவேந்தரின் குடும்பத்தார்களுடனும், பதிப்பகங்களுடனும் மாண்புமிகு முதலமைச்சர் கலந்து பேசிய பிறகு இந்த மகிழ்ச்சிகரமான முடிவு எடுக்கப்பட்டது.

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியதற்காகவும், அதற்கென 8 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கியதற்காகவும்-பாவேந்தர் அவர்களின் மகன் திரு. மன்னர்மன்னன், மகள்கள் திருமதி சரசுவதி, திருமதி வசந்தா மற்றும் அவரது குடும்பத்தார்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்திந்துப் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டார்கள் (11.12.90).**





மகாகவி பாரதியாரின் 109-வது பிறந்தநாள் விழாவையொட்டி (11.12.90) சென்னை-மெரினா கடற்கரையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு.கண்ணப்பன், மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு- மற்றும் அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்தார்கள்.

# படமும் செய்தியும்

மூதறிஞர் இராஜாஜி 112-வது பிறந்த நாளையொட்டி கிண்டியிலுள்ள இராஜாஜி நினைவாலயத்தில் அவரது உருவச்சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. கே. என். நேரு, திரு. க. சுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சா. கணேசன், திரு. ஆர். எஸ். ஸ்ரீதர், செய்தித்துறை இயக்குநர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப. ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (10.12.90)



பாவேந்தர் நூற்றாண்டு:

# மலரும் நினைவுகள்

உவமைக் கவிஞர் சுரதா

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள், நாடறிந்த நற்கவிஞர். புரட்சிக் கவிஞர் பூஞ்சோலையில் பூத்த நறுமலர். 'சுவரும் சுண்ணாம்பும்' போல் புரட்சிக்கவிஞரோடு இணைந்து, அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டியவர். 'தேன்மழை'யாய் தெள்ளுத்தமிழ்க் கவிதையால், கவிதை உலகின் மகுடமாய் விளங்குபவர். 'வாழையடி வாழையாக' வந்த திருக்கூட்டம் என்பதுபோல, பாரம்பரியம் மிக்க பாவேந்தர் பரம்பரையிலே வந்த பாட்டுப் புலவன்.

பாரதிக்கு ஒரு தாசன் - பாரதிதாசன்; அந்தப் பாரதிதாசனுக்கு ஒரு தாசனாக விளங்கும் சுப்புரத்தினதாசனுக்கு - சுரதா - உவமைக் கவிஞர் சுரதாவுக்கு - தமிழக அரசின் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கிச் சிறப்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவரைச் சந்தித்தோம். அந்தச் சந்திப்பில் ஏற்பட்ட சிந்தனைச் சிதறல்களே இவை.....

தமிழ்ப்பூக்காட்டில், புரட்சி மலர்க்கவிதைகள் பூத்துக் குலுங்கிய புதுவை மண்ணில் தோன்றிய விடிவெள்ளிதான் பாவேந்தர் பாரதிதாசன்.

### எளிமையும் புதுமை நோக்கும்

மகாவித்துவான் பெரியசாமிப் பிள்ளை மாணவர்கள் 19 பேர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான் நம்முடைய பாவேந்தர்; மகாவித்து வான் பெரியசாமிப் பிள்ளைக்குப் பெரும்புகழ் தந்தவரே பாவேந்தர்தான். பெரியசாமிப் பிள்ளை யின் மாணவர்களுள் பங்காரு பத்தர் என்பவரும் ஒருவர். அவரிடமும் பாவேந்தர் பாடங்கேட்டார். பங்காரு பத்தரின் எளிமையும், பாரதியாரின் புதுமை நோக்கும் பாவேந்தரைக் கவர்ந்தன. அவற்றை வாழ்க்கையில் இறுதிவரை கடைப் பிடித்தும் வந்தார்.

பாவேந்தர், தம் கவிதையைப் போலவே எளிமையாக வாழ்ந்தார், வாழ்ந்தும் காட்டினார். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்' என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க, அவர் எல்லாரையும் மதித்தார். அந்தஸ்து பார்க்க மாட்டார். தெருவில் போகிறவனையும், 'இவனே....' என்று கூப்பிட்டு, தம் பாட்டைப் பாடிக் காட்டி, 'நல்லா இருக்கா?' என்று கேட்பார். அவன்



'நல்லா இருக்கு' என்று சொன்னதும் மகிழ்ச்சி கொள்வார். இப்படி இவரது பாடல் தெருவிலேயே அரங்கேற்றம் ஆகும்!

பாவேந்தர், யானையைப் போல கம்பீரமாக நடப்பார். நிதானம் தவறமாட்டார். அவசரப்பட மாட்டார்.

அவரது உணர்வு தமிழ் உணர்வு. இறுதிவரை அந்த உணர்வே அவருக்கு உணவாகியது. 'தமிழன்



அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் வெள்ளம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!

நாட்டை ஆளவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். 'எல்லாத் துறைகளிலும் தமிழனே **வரவேண்டும்'** என்பது அவரது தணியாத தாகம்.

## பாட்டுலகில் ஒரு புரட்சி

அவருக்குப் பேசும் மேடையே வீட்டுத் திண்ணை தான். திண்ணையில் உட்கார்ந்துகொண்டு எல்லா ரிடமும் மனம்விட்டுப் பேசுவார். தம் சிந்தனை யையும் கூறுவார். பிறகு அதைக் கவிதையாக்குவார்.

ரிக்ஷாக்காரன், விறகுவெட்டி எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுவார். அவர்களுடைய பெயர் வடமொழியில் இருந்தால், அதைத் தமிழில் வைத்துக்கொள்ளும்படி கூறுவார். தமிழ் உணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துக்கொண்டே இருக்கும்.

அதேபோல, மொழிப் பற்றும் அவரது உயிரில் கலந்திருந்தது. பாரதிதாசன் பரம்பரையை உரு வாக்கிய 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு, அந்தப் பெயரை வைத்தவரே பாவேந்தர்தான்.

எல்லாச் சொல்லும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று கூறுவார். நூல் தலைப்பும்கூட தமிழில் இருக்க வேண்டும் என்பார்.

கீர்த்தனைகள் என்பது இறைவனையும், மன்னனை யும் புகழ்ந்து பாடவுமே அன்று இருந்தது. அதை மாற்றியமைத்தவர் பாவேந்தர். அவர் வண்டிக் காரனுக்கும், தபால்காரனுக்கும், பூப்பறிப்பவனுக்கும் கீர்த்தனைகள் பாடி பாட்டுலகில் ஒரு புரட்சி யையே உண்டாக்கினார். ஆம். எல்லாத் தொழில் துறைக்கும் கீர்த்தனை - இசைப்பாடல்கள் கொண்டு வந்த பெருமை இவருக்கு உண்டு. இது ஒரு பெரிய திருப்பம். **'இசையமுது' என்னும் நூலில்,**

**''அதோ பாரடி அவரே என் கணவர்**
**புதுமாட்டு வண்டி ஓட்டி**
**போகின்றார் என்னை வாட்டி''**

— என்று மாட்டு வண்டிக்காரனைப் பாடுகிறார்.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளுக்குப் பிறகு, கவிதைகளில் தமிழேகோலோச்சவேண்டும் என்று நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்தவர் பாவேந்தர்தான்.

## கவிதையிலேயே நாடகம்!

'எதிர்பாராத முத்தம்' தான் 'பொன்முடி' என்னும் நெடுங்காவியம். இது திரைப்படமாக வெளிவந்தது. இதற்குமுன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் 'மனோன்மணீயம்' திரைப் படமாகியுள்ளது. ஆனால் அப்போது அவர் இல்லை. ஒரு காவியம், முதன்முதலில் வாழும் காலத்திலேயே - திரைப்படமாகியது பாவேந் தருடையதுதான் என்பது பெருமைக்குரிய செய்தி யாகும்.

பாவேந்தர் அவர்கள் தனிப்பாடல்கள் நிறைய எழுதியுள்ளார். பாவேந்தர் உணவகத்திற்குச் செல்வார். அங்கு யாரேனும் இவரைப் பார்த்து, 'ஐயா, ஒரு பாட்டு தாங்க!' என்று கேட்பார்கள். உடனே அங்கேயே ஒரு பாட்டை எழுதித் தருவார். இப்படி ஏராளமான பாடல்கள் சேர்ந்தன.

தமிழ்நாட்டில் உரையாடலின்றி, முழுக்க முழுக்க கவிதையிலேயே நாடகம் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசன்தான். அதுதான் 'புரட்சிக் கவி' என்னும் கவிதை நாடகம். 1944-இல் சேலத்திலும், நாமக்கல்லிலும் ஆறு நாட்கள் இந்த நாடகம் நடந்தது. இந்திய வரலாற்றில், இலக்கிய உலகில் கவிதையிலேயே 2 மணி நேரம் நாடகம் நடந்தது, அதுவே முதல் தடவை. இந்த நாடகத் துக்குத் தந்தை பெரியார் அவர்கள் தலைமை வகித்துப் பாராட்டினார். இதேபோல, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், சேலம் அரசினர் கலைக் கல்லூர் முதல்வர் இராமசாமி கவுண்டர் ஆகி யோர் இந்த நாடகத்துக்கு ஒவ்வொரு நாளும் தலைமை வகித்து வெகுவாகப் பாராட்டிப் பேசி னார்கள். இந்த நாடகத்தில் நானும் நடித்திருக் கிறேன் என்று பெருமையோடு கூறிக்கொள் கிறேன்.

இந்நாடகத்தில் வரும் ஒரு உரையாடல்:-

**தோழி: கன்னம் சிவக்கக் காரணம் என்ன?**
**தலைவி: புன்னை மலர்கள் இன்னல் புரிந்தன!**
**தோழி: ஆடை அவிழக் காரணம் என்ன?**
**தலைவி: ஓடும் மான் கொம்பால் ஈடழிந்தது.**

— இவ்வாறு இந்தக் கவிதை உரையாடல் தொடரும்.

## பன்மொழியில் பாடல்கள்

பாவேந்தர் காலத்திலேயே அவரது படைப்புகள் பன்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றன. பன் மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களும், எஸ். வேதரத்தினம் அவர்களும் பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். கமில்சுவலபில் என்னும் செக்கோஸ்லோவேகியா தமிழறிஞர் தம் மொழியில், பாவேந்தர் கவிதை களை மொழிபெயர்த்து உலகறியச் செய்துள்ளார்.

தம் நூலுக்கு 'அணிந்துரை' வேண்டும் என்று யார் வந்து கேட்டாலும், அதற்குத் தடை சொல்லாமல் எழுதித் தருவார். 'நிறைய படியுங்கள்' என்று

ஊக்கப்படுத்துவார். கடற்கரைக்கு அழைத்துப் போய், 'நிலவுப் பாட்டு எழுதப் போறேன், நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்பார்.

'பத்திரிகைக்குத் தலைப்பு என்ன வைக்கலாம்?' என்று கேட்பார்: 'இந்தக் கவிதைக்கு என்ன தலைப்பு வைத்தால் நல்லா இருக்கும்?' என்றும் யோசனை கேட்பார். அதற்கு அவர்கள் சொன்ன தலைப்புகள் நன்றாக இருந்தால், அதையே வைத்துவிடுவார். திறமையை, தகுதியை மதிக்கும் பண்பு அவரிடம் மிகுதியாக இருந்தது.

ஒருசமயம், திரு முருகு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கவிதையைக் கொடுத்து அதற்குத் தலைப்பு வைக்கும்படி கேட்டார். அவர் அதற்கு 'ஒரே குறை' என்ற தலைப்புத் தந்தார். அதையே அவர் அந்தக் கவிதைக்குத் தலைப்பாக வைத்தார்.

## அறிவியல் நோக்கு படைத்தவர்

பாவேந்தர் பாடல்களில் அறிவியல் நோக்கு மிகுதியாக இருந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும், புதுமைகள் மலரவேண்டும் என்று கனவு கண்டு, அந்தக் கனவு நனவாகும் வகையிலே கவிதைகள் படைத்திட்ட பாவேந்தர், அறிவியல் கருத்துகளையும் கவிதைகளிலே இழைய விட்டிருக்கிறார்.

சூரியனும், சந்திரனும் தனித்தனி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அப்படியல்ல என்பதை.

''காலை வந்த செம்பரிதி-
கடலில் மூழ்கி
கனல் மாறி குளிரடைந்த
ஒளிப் பிழம்போ?''

— என்று அவை இரண்டும் ஒன்று என்று தெளிவுபடுத்துகிறார்.

இந்தியாவிலேயே முதல்தடவையாக 1930-லேயே குடும்பநலம் குறித்த செய்தியை - கவிதையை எழுதியவரும் பாவேந்தரேதான்.

''காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்த
கதவொன்று கண்டறிவோம்''

- என்று அன்றே சொன்னார். அவர் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

## சிந்தனையே எழுப்பிவிடும்!

பாவேந்தர் அவர்கள் நன்றாக உடுத்துவார். அதைப்போல நன்றாகச் சாப்பிடவும் செய்வார். அதுமட்டுமல்ல, தன்னுடன் இருப்பவர்களை, 'நீயும் நன்றாகச் சாப்பிடு' என்பார். சுவையாக இல்லையென்றால், 'அதை வைச்சிடு' என்பார். பாவேந்தர் புலால் உணவைச் சுவைத்து உண்பார்.

ஒருவன் உள்ளத்தை - உணர்வைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்தவர் பாவேந்தர். அவர் புறா



**தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்**
**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே**
**சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!**

வளர்த்தார். பூவின் அழகை ரசிப்பார். எதையும் கூர்ந்து பார்ப்பார். இவையெல்லாம் அவரது இனிய இயல்புகள்.

இராமலிங்க அடிகள் நள்ளிரவில்தான் படிப்பார்; எழுதுவார். அதைப்போல, பாவேந்தர் நள்ளிரவில்தான் அதிகம் படிப்பார். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில், இவர் விழித்திருந்து எழுதுவார்.

படுக்கையில், தலையணையின்கீழ், தாள்கள் வைத்திருப்பார். சிந்தனை வந்ததும் எழுந்து உட்கார்ந்துகொண்டு எழுதுவார். பொழுது விடிந்ததும், 'ஐயா' என்று சத்தம் போட்டு அவரை யாரும் எழுப்ப வேண்டியதில்லை. சிந்தனையே அவரை எழுப்பிவிடும்.

## கடற்கரையில் கவிதை வரும்!

ஒரு கவிஞன், கடற்கரைக்குப் போய் நிலவைப் பார்த்துவிட்டு எழுதுவானாம்.

பாரதியார், கடலைப் பார்த்துவிட்டு, எழுதுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓடுகிற தண்ணீரை, வெள்ளத்தைப் பார்த்துவிட்டு எழுதுவாராம்.

பாவேந்தர் பாரதிதாசன் கடற்கரையில், நிழல் சார்ந்த குயில் தோப்பில் எழுதுவார்.

கவிதை வந்ததும், ''இருப்பா, வந்துடுத்து, கவிதை எழுதிக்கோ'' என்பார்.

பாவேந்தர் கையெழுத்து நன்றாக இருக்கும். கையெழுத்து நன்றாக இருந்தால்தான் உதவிக்கு ஆளை வைத்துக்கொள்வார். அவரிடம் இருந்த அத்தனைப் பேருக்கும் கையெழுத்து நன்றாக இருக்கும்.

பாவேந்தர் 200 பக்க அளவில் மூன்று நோட்டுப் புத்தகங்கள் வைத்திருப்பார். ஒன்றில் தம் கைப்பட எழுதுவார். மற்ற இரண்டில் எழுதச் சொல்வார். இந்த முறையை எழுத்தாளர்கள் பின்பற்றலாமே!

**— பேட்டி: பி.வி. கிரி.**




ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி / நவீன / பட்டு / வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

- புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
- பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு













